www.tamilarangam.net


# களத்தில்

"புயலாகச் சீண்டும் எதிரியின் அடக்குமுறை அழுத்தங்களை எல்லாம் மலையாகத் தாங்கி நிற்கும் எமது மக்களை நான் பாராட்டுகிறேன்."

- தேசியத் தலைவர் வே.பிரபாகரன்

திருவள்ளுவர் ஆண்டு 2027 மேழம் 17 (01.05. 1996) | தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் | அன்பளிப்பு: 60p


## மரபு வழி சூரியக் கதிரா? பல முனைப் பதிலடிகளா? எது போரின் போக்கைத் தீர்மானிக்கும்?

சிறிலங்கா இராணுவம் தனது மரபு வழி இராணுவ நடவடிக்கைகளை 'சூரியக்கதிர்-2' என்ற பெயரில் தொடர்ந்து கொண்டிருக்கும் அதே வேளை பல்வேறு முனைகளிலும் சிறிலங்கா அரசபடைக்கு எதிரான விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இராணுவ அழுத்தம் மூலம் ஒரு அரைகுறை அரசியல் தீர்வினைத் தமிழ் மக்கள் மீது திணிக்கும் எந்த முயற்சியினையும் விடுதலைப் புலிகள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதனால், சிறிலங்கா அரசின் இராணுவ முன்னெடுப்புக்களுக்கு உரிய பதிலடிகளை விடுதலைப் புலிகள் வழங்குவார்கள் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

கடந்த 19-04-96 வெள்ளிக்கிழமையன்று 20,000 துருப்புக்களுடன் 'சூரியக்கதிர்-2' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தென்மராட்சியினை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். புத்தூர் பகுதியில் இருந்து தென்மராட்சியினை நோக்கி நகர்ந்த இராணுவத்தினர் மட்டுவில் பகுதியில் விடுதலைப் புலிகளின் பலத்த எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்தது. மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற மோதலைத் தொடர்ந்து முன்னேறிய இராணுவம், கொடிகாமம், கச்சாய், சாவகச்சேரிப் பகுதிகளை நோக்கி நகர்ந்தது. இவ்வாறு நகர்ந்த இராணுவத்தினர் மீது புலிகள் எதிர்த் தாக்குதல்களை நடாத்தினர்.

விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலில் மோட்டார்த் தாக்குதல் முக்கிய பங்கினை வகித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. சாவகச்சேரிப் பகுதியினை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் சரமாரியாக மோட்டார்த் தாக்குதலினைத் தொடுத்தனர் எனவும் இத்தாக்கு - தலில் இராணுவத்தினருக்கு பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இராணுவத் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்ட தகவலின் படி இம்மோட்டார்த் தாக்குதல்களில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டு, 40க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைந்ததாகக் கூறப்படுகின்றது.

மக்கள் குடியிருப்புக்களை நோக்கி கண்மூடித்தனமான எறிகணை வீச்சுக்களையும் குண்டு வீச்சுக்களையும் மேற்கொண்டவாறு இராணுவம் தனது இராணுவ நடவடிக்கையினை ஆரம்பித்தபோது மக்கள் கூட்டம் கூட்டமாக, இராணுவத்தின் பிடியிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள, கிளாலி கடலேரியூடாகக் கடந்து வன்னிக்குச் செல்லத் தொடங்கினர். மக்கள் கிளாலிக் கடலேரியூடாக தப்பியோடுவதைத் தடுக்கும் நோக்குடன் கிளாலிக் கடலேரியிலும், கரையிலும் சிறிலங்கா வான் படையின் எம்.ஐ.24 உலங்கு வானூர்திகள் தாக்குதலினை நடாத்தின. இத்தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழுபேர் உட்பட மேலும் சில பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இந் இராணுவ நடவடிக்கையால் இதுவரை கொல்லப்பட்ட, காயமடைந்த பொதுமக்களின் எண்ணிக்கை சரியாகத் தெரியவில்லை. இருப்பினும் 26-04-96 வரை 50 பொதுமக்கள் கொல்லப்பட்டு 100 பேர் வரை காயப்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கச்சாயில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் கிளாலியினை நோக்கி முன்னேற முற்பட்டபோது விடுதலைப் புலிகள் தமது உக்கிரமான தாக்குதலினால் இராணுவத்தினரின் முன்னேற்றத்தினைத் தடுத்து நிறுத்த மக்கள் வெளியேறுவதற்கு வழிசமைத்துக் கொடுத்தனர். வடமராட்சியில் இருந்து மக்கள் வெளியேறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தும் முகமாக வடமராட்சி கொடிகாமம் வீதிகளையும் தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தனர். இதன்மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் வடமராட்சியில் இருந்து கிளாலி வந்து இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து தப்ப முடிந்தது. இருப்பினும் 26-04-96 அன்று கடுமையான மோதல்களின் பின் கிளாலிக் கரையினை இராணுவம் வந்தடைந்தது.

இராணுவம் தான் நகர்ந்த பகுதிகளில் பல பொதுமக்களைத் தனது இராணுவ வியூகங்களுக்குள் வைத்திருக்கின்றது. இவ்வாறு சிக்கியவர்கள் ஆண்கள், பெண்கள், எனப் பிரிக்கப்பட்டு வெவ்வேறாக, முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. இவ்வாறு அடைத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் இளையவர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இராணுவத்தினரின் பிடியில் சிக்கிக் கொண்ட மக்களில் வலிகாமம் பகுதியைச் சேர்ந்தவர்களை இராணுவத்தினர் வலிகாமத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். மக்கள் வலிகாமத்தினை நோக்கிச் செல்வதாக தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்பட்டவாறு அல்லாது, வலிகாமத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் விசேட முகாம்களில் பலத்த காவலின் மத்தியில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மிக மிகக் குறைந்த எண்ணிக்கையினரே வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினர் வடமராட்சிப் பகுதியினை நோக்கி இன்னும் நகரவில்லை. வடமராட்சி நோக்கி நகர முற்பட்ட இராணுவத்தினரைத் தொண்டமனாற்றில் வைத்துப் புலிவீரர்கள் இடைமறித்துத் தாக்கியுள்ளனர். இச்செய்தி அறிக்கையினை எழுதிக் கொண்டிருக்கும் வரை இராணுவத்தினர் வடமராட்சிக்குள் நுழையவில்லை.

வடமராட்சியில் இருந்த கணிசமான மக்கள் வெளியேறிவிட்டனர். மக்கள் வெளியேற்றத்தினால், வைத்தியசாலைகள் இயங்க முடியாத நிலை தோற்றம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நோயாளர்கள், வைத்தியர்கள் இல்லாத காரணத்தினால் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை வைத்தியசாலைகள் இயங்கமுடியாத நிலையில் உள்ளதாகத் தெரிகின்றது. இதுவரை இராணுவத்தின் பிடியில் சிக்காத மக்கள் ஏதாவது வழியில் வன்னிப் பெருநிலத்தினை வந்தடைந்து விடுவதற்குத் தீவிர முயற்சி எடுப்பதாகவும் அறிய முடிகின்றது.

இராணுவத்தினரின் இந் இராணுவ நடவடிக்கை பல நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே! மக்கள் வெளியேற்றத்தால் 'சூரியக்கதிர்-1' இல் ஏற்பட்ட அரசியல் தோல்வியினை ஈடுகட்ட ஒருபகுதி மக்களைத் தமது பிடியினுள் சிக்க வைப்பதே இந்இராணுவ நடவடிக்கையின் நோக்கம் என்று கூறப்படுகின்றது. இவ்வாறு சிக்கிய மக்களை வைத்துக் கொண்டு, குடாநாட்டில் சிறிலங்கா அரச நிர்வாகக் கட்டமைப்புக்களை உருவாக்குவத்றகான முயற்சிகளை அரச தரப்பு மேற்கொள்ள முயலக் கூடும்.

மேலும், 'மக்களின் மனங்களை வென்றெடுத்தல்' எனும் அரசியல் இலக்கை, இனவெறியூட்டப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரை வைத்துக்கொண்டு சிறிலங்காத் தரப்பால் மேற்கொள்ள முடியாது என்பது யதார்த்தமாக இருக்க, விடுதலைப் போராட்டம் சிறிலங்கா அரசுக்கு அதிக அழுத்தத்தினை தரக்கூடிய நிலைமைகளும் தோற்றம் பெற்றுள்ளதாக அவதானிகளால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

சிறிலங்காப் படையினருக்கு எதிரான விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள், பல்வேறு முனைகளில் விரிவடைந்துள்ள இன்றைய கால கட்டத்தில் அரசினை அதிகம் பாதிக்கக்கூடிய முனைகளில் புலிகள் இறுக்கித் தாக்குவார்கள் எனவும் இத்தாக்குதல்கள் அரசை நிலை குலைய வைக்கக் கூடியனவாக அமையும் எனவும் இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மேலும் குடாநாட்டின் இராணுவ முகாம்களைச் சூழ காவலுக்கு நின்ற ஆயிரக்கணக்கான புலிவீரர்கள் தற்போது பல்வேறு தாக்குதல் பிரிவுகளாக்கப்பட்டு, சிறிலங்காப் படைகள் மீதான பலத்த தாக்குதல்கள் தொடுக்கப்படும் எனவும் இவர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

போரிடும் ஆற்றல் அழிக்கப்பட்டு

தொடர்ச்சி 12 ம் பக்கம்...

## 13, 000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் சுவிஸ் பாராளுமன்றம் நோக்கி படையெடுப்பு சிறிலங்கா அரசிற்கு விழுந்த பலத்த அடி!

◆ தமிழீழ விடுதலைப் புலிகளை தேசிய இயக்கமாக அங்கீகரிக்குக!

◆ மக்கள் இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை குற்றவியல் அமைப்பாகச் சித்தரித்துக் காட்டுவதை உடன் நிறுத்தவும்!

◆ சுவிஸ் காவல்துறையால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. நடராஜா முரளிதரன் உட்பட ஏனைய உறுப்பினர்களை உடன் விடுதலை செய்யவும்!

◆ கடும் போர்ச் சூழ்நிலையில் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதை உடன் நிறுத்தவும்!

சுவிஸ் நாட்டின் பேர்ண் நகரில் அமைந்துள்ள பாராளுமன்றம் நோக்கி 27-04-96 சனிக்கிழமையன்று நடைபெற்ற, மாபெரும் பேரணி - தமிழர்களின் தாயக மீட்புப் போராட்டத்துக்கான ஆதரவையும், பங்களிப்பையும் மீண்டுமொருமுறை நிரூபணமாக்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் ஒழுங்கு செய்யப்பட்டு சிறந்த முறையில் இடம்பெற்ற இப்பேரணி - தமிழீழ விடுதலைப் புலிகளை தேசிய இயக்கமாக அங்கீகரிக்கக் கோரியும், தமிழீழ விடுதலைப் புலிகளை குற்றவியல் அமைப்பாகச் சித்தரித்துக் காட்டுவதை நிறுத்தக்கோரியும், சுவிஸ் காவல்துறையால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை விடுதலை செய்யக் கோரியும், கடுமையான போர்ச்சூழலில் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதை உடன் நிறுத்தக் கோரியும் தமிழ் மக்களால் நடாத்தப்பட்டது.

இப்பேரணியில் கலந்து கொண்ட 13,000 க்கும் அதிகமான தமிழ் மக்கள் மேற்படி கோரிக்கையை சுவிஸ் நாட்டு அரசுக்கு உறுதியாக

தொடர்ச்சி 12 ம் பக்கம்...



புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழத தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அவன்தான் மனிதன்

## உண்மைச்சம்பவம்

வானம் ஒரே இரைச்சலாக இருந்தது. மூன்று பொம்மர்கள் அசுர வேகத்துடன் வட்டமிட்டபடி அயற் கிராமத்தில் குண்டுகளைப் பொழிந்துகொண்டிருந்தன.

இந்த அமளியிலும் இளைஞர் கூட்டமொன்று தெருவோரமிருந்த மண்டபம் ஒன்றில் ஆனந்தமாகச் சீட்டாடிக்கொண்டிருந்தது. தெருக்களிலும், வீட்டு முற்றங்களிலும் நின்ற சிலர் விமானங்கள் குண்டு போடுவதையும், குண்டுகள் வீழ்ந்து வெடிப்பதையும் ரசித்துக்கொண்டிருந்தனர்.

அப்போது ஒருவன் கதறி அழுதபடி ஒழுங்கை ஒன்றால் ஓடிவந்துகொண்டிருந்தான். அவனைச் சுற்றி கூட்டம் கூடியது. சீட்டாடிக் கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவன் அவனை வழிமறித்து என்ன நடந்தது என்று விசாரிக்கிறான்.

"என்ரை வீட்டுக்கு பொம்மர் அடிச்சுப்போட்டுதாம். வீட்டில் இருந்த என்ரை இரண்டு பிள்ளைகளையும் காயத்தோடு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோயினமாம்......"

அவன் கண்களில் கண்ணீர் முட்டி வழிந்தது. அவன் கூட்டுறவுச் சங்கமொன்றில் வேலை செய்பவன். அவனுடைய வீட்டுக்கு குண்டு போட்ட செய்தியை யாரோ சொல்லியிருக்கிறார்கள்.

பதட்டத்துடன் காணப்பட்ட சாரங்கனை ஆசுவாசப்படுத்திய இளைஞன் ஒருவன், சைக்கிள் ஒன்றில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லத் தயாராகினான்.

அப்போது எதிர்ப்பக்கத்தால் நாலைந்து பேர் ஓடி வந்துகொண்டிருந்தனர். அவர்கள் பதறியபடி ஓடிவருவதைக் கண்ட சாரங்கன் "என்ன?.... உங்களுடைய வீட்டுக்கும் குண்டு போட்டுவிட்டார்களோ?" சாரங்கன் தன் சொந்த துயரத்தை மறந்த நிலையில் ஓடி வருகின்ற அந்த இளைஞர் கூட்டத்தை நோக்கி பரபரப்புடன் கேட்டான்.

"ஹ..ஹா......ஹா...."

அவர்கள் கேலியாகச் சிரித்தபடி "உன்ரை வீட்டுக்குக் குண்டு போட்டால் எங்கடை வீட்டிற்கும் போடுதோ?" நாங்கள் பொம்மருக்குப் பயந்து ஓடிவரவில்லை, ஆமிக்காம்பிலை இருந்து வெளியாலை வந்து முன்னெற முயன்ற இராணுவத்தை எதிர்த்து சண்டை நடக்குது. அங்கே பங்கர் வெட்டுறதுக்கு ஆட்கள் சேர்க்கினம். அப்பிடி உதவி செய்கிறவர்களை ஏற்றிக்கொண்டு போக மினிபஸ் நிற்குது.... அதுதான் ஒருமாதிரி ஓழிச்சு ஓடிவாறம்". இப்படி அவர்கள் சொன்னது சாரங்கனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"சேக்... நீங்களும் ஒரு மனுசரோ....தூ...."

அவர்களை வெறுப்புடன் பார்த்தவன், ஆவேசங் கொண்டவனாகின்றான். அவனுடைய இரத்தம் கொதித்துக்கொண்டு வந்தது.

"அந்த மினிபஸ் எங்கே நிற்குது? எங்கடை மண்மீட்கப் போராடுற போராளிகளுக்கு இதைவிட வேறு என்ன உதவியை நாங்கள் செய்யப் போகிறோம்" என்றவன் களத்தில் நிற்கும் போராளிகளுக்கு உதவுவதற்காக அந்த மினிபஸ்ஸை நோக்கி ஓடுகின்றான்.

ஓ... அவன் இந்த மண்ணின் மைந்தன் அல்லவா?

ஈழத்தீபன், தமிழீழம்

# நெல்சன் மண்டேலாவிற்கு வெகுசன அமைப்புக்கள் கடிதம்

**சிறிலங்கா அரசு தமிழர்களுக்கு இழைத்து வரும் பெரும் துயரங்களையும், அவலங்களையும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதிலும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மதிக்கும் வண்ணமும், தமிழர் தாயகத்தில் சிறிலங்கா அரசு நிகழ்த்திவரும் இராணுவ ஆக்கிரமிப்பை நிறுத்தும் வண்ணமும் அவ்வரசினைத் தூண்டி இசைவிப்பதிலும் தங்கள் நல்லெண்ண செல்வாக்கினை வழங்கிவருமாறும் யாழ் மாவட்ட வெகுசன ஒன்றியம் தென் ஆபிரிக்க சனாதிபதி நெல்சன் மண்டேலாவிற்குக் கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளது.**

### இதன் முழு விபரம் வருமாறு:-

தென் ஆபிரிக்க மக்களின் விடுதலையின் பொருட்டு கொடிய இன்னல்களை எதிர்நோக்கி, அரிய தியாகங்களைச் செய்து வழி நடத்திய நிகழ்கால வரலாற்று நாயகனும், அரசியல் தலைவரும் என்ற முறையிலே இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தின் தன்மையை விளங்கிக் கொள்ளவும் வல்ல ஆளுநரில் ஆற்றல் மிக்க மிகச் சிலரிலே தாங்களும் ஒருவராகத் திகழ்கிறீர்கள்.

இலங்கைத் தமிழர்கள் தனியானதொரு வரலாறும், தேசிய அடையாளமும், மொழியும், பண்பாடும் உடையவர்கள். காலனித்துவ ஆட்சியாளரின் வருகைக்கு முன் அவர்களுக்கு என தனியான இராட்சியமும் இருந்தது. எனினும் ஏறத்தாள 400 ஆண்டு கால ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியின் பின்பு தமிழர்களும் சிங்களவர்களும் ஒரு ஒற்றையாட்சி அமைப்பினுள் இணைக்கப்பட்டனர். பிரித்தானிய காலனி ஆட்சியாளர் நாட்டை விட்டு வெளியேறியபோது சிங்களத் தலைமையையும், நலன்களையும் மட்டுமே கொண்டதொரு அரசியல் யாப்பையும் அங்கீகரித்தனர். தமிழ் மக்களின் வேட்கைகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டன. சிங்களவர்கள் தொகையில் கூடியவர்களாக இருந்தபடியால் சிறிலங்கா அரசியலில் மேலாதிக்கம் பெற்றதுடன் அதனை துஷ்பிரயோகம் செய்து தமிழர்களை ஒடுக்கும் ஒரு வஞ்சகமான சட்டவாக்கங்களையும் புகுத்தினர். தமக்கு நன்மையும் தமிழர்களுக்குத் தீமையும் விளைவிக்கும் வழியிலேயே சிங்களவர் அரசியல் யாப்பினை விரும்பியவாறு எல்லாம் மாற்றிக் கொண்டனர்.

இந்த மாற்றங்களில் எதுவும் தமிழர்களின் சம்மதத்தை பெற்றிருக்கவில்லை. தமிழர்களின் அமைதி வழிப் போராட்டங்களனைத்தும் இராணுவ வலிமையினால் அடக்கப்பட்டன.

வேறு வழியின்றி தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தினால் அரசின் ஒடுக்கச் செயல்களை எதிர்க்கவும் தமது தேசிய உரிமைகளை வென்றெடுக்க முற்பட்டனர். இக்கட்டத்தில் கூட தமிழ் மக்களின் உரிமைகளை ஒப்புக்கொள்ளாத சிறிலங்கா அரசு இந்த விடுதலைப் போராட்டத்தினை நசுக்கும் பொருட்டு முறைகெட்ட திட்டம் ஒன்றில் முனைந்துள்ளது. இந்த யுத்தத்தில் பெரும் தொகையான தமிழ் மக்கள் விமானக் குண்டு வீச்சுகளுக்கும், எறிகணைத் தாக்குதல்களுக்கும் இரையாகி மடிந்துள்ளனர்.

சென்ற 40 ஆண்டுகளாக தமிழ் மக்கள் பாரிய இடுக்கண்களுக்கு இடையே மாபெரும் தியாகங்களைச் செய்தும் துன்பங்களைத் தாங்கிக் கொண்டும் தேசிய உரிமைக்காகப் பாடுபடுகின்றனர். இந்த நிலையிலும் சர்வதேச சமூககமானது சிறிலங்கா அரசு செய்துவரும் தகவல் மறைப்புப் பிரசாரத்தையும் நம்பி தமிழர் மீது நடத்தப்படும் மனித உரிமை மீறல்களையும் இராணுவ வெற்றிகளையும் கண்டுகொள்ளாது இருப்பது தமிழ் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்துகிறது. மேலதிகமாக, தங்களைப் போன்ற பெருந் தன்மை வாய்ந்த தலைவர் ஒருவரால் மட்டுமே நமது அரசியல் போராட்டத்திற்கு நியாயப்பாட்டை விளங்கிக் கொள்ள முடியும். சிறிலங்கா அரசு தமிழர்களுக்கு இளைத்துவரும் பெரும் துயர்களையும், அவலங்களையும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கும் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை மதிக்கும் வண்ணமும் தமிழர் தாயகத்திலே சிறிலங்கா அரசு நிகழ்த்திவரும் இராணுவ ஆக்கிரமிப்பை நிறுத்தும் வண்ணமும் அவ்வரசினைத் தூண்டி இசைவிப்பதற்கு தங்களின் நல்லெண்ண செல்வாக்கினை வழங்குமாறும் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். ✿

# போரை உடனடியாக நிறுத்த ஐ. நா. செயலாளரிடம் கோரிக்கை

## -யாழ். வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம்

போரை நிறுத்த வேண்டுகோள்—தமிழ் ஈழ மக்களின் விருப்புக்களையும், வேட்கைகளையும் பிரதிபலிக்கும் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் நிறுவனங்களின் சம்மேளனமாகிய யாழ்ப்பாண மாவட்ட பொதுசன அமைப்புக்களின் ஒன்றியம் எனப்படும் நாம் அவசரமான செய்தி ஒன்றைத் தங்களுக்கு அனுப்பி வைக்க விரும்புகின்றோம். தேர்தல் காலத்தின்போது தமிழர் பிரச்சினையை விடுதலைப் புலிகளுடன் பேசித் தீர்ப்போம் என்று தான் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கா வாக்குறுதி அளித்தபோது சிறிலங்கா, தமிழர்கள் குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்பவர்கள் அக்கூற்றினை வரவேற்றனர். தமிழ் மக்களும் சிங்கள மக்களும் போரின் அவலத்தில் இருந்து விடுபடுவார்கள் எனவும் தமிழர் அரசியல் உரிமைகள் நிலைநிறுத்தப்பட்டு அவர்கள் தன்மானத்துடனும், மனித கௌரவத்துடனும் வாழ்வார்கள் எனவும் நம்பி இருந்தோம்.

ஆனால் சிறிலங்கா அரசு, சமாதான முயற்சிகளை மனமார்ந்த எதிர்பார்ப்புடன் தொடர்வதை விடுத்து போரை மேலும் கடுமையாக்கியும், ஆயுதம் தாங்கிய படை நடவடிக்கைகளால் படுமோசமாக்கி பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தம் உயிர்களை காக்கும் பொருட்டு தாம் இருந்த வீடுகளைக் கைவிட்டு ஓட வேண்டியவராயினர். அவர்கள் தமது ஜீவனோபாயத்துக்கான உணவு, உடை, உறையுள், மருந்து, சுகாதாரம் முதலான அடிப்படை வசதிகளை இழந்து கதியற்ற மாந்தராய் இன்று தவிக்கின்றனர்.

துயருக்குள்ளான மக்களின் அவசர தேவைகளைப் பூர்த்தி செய்ய சிறிலங்கா அரசு எடுத்த நடவடிக்கைகள் சற்றேனும் போதியவை அல்ல. அதில் அரசின் மாற்றான் தாய் மனப்பான்மையையே காட்டுகின்றது.

சிறிலங்கா சனாதிபதி அவர்கள் அண்மையில் தமிழ் மக்களுக்கு எதிராக வெளியிட்டுள்ள கருத்துரைகள் அவர் இராணுவ நடவடிக்கைகளை மேலும் முடுக்கிவிட எண்ணுகின்றார் என்ற அச்சத்தை உண்டாக்கியுள்ளது. ஏற்கனவே பெரும் துன்பத்திற்கு உள்ளான தமிழ் மக்களிடையே பாரிய உயிர் இழப்புக்களை ஏற்படுத்தவே அத்தகைய நடவடிக்கைகள் உதவும்.

முன்னைய சிங்களத் தலைவர்களைப் போலவே சிறிலங்கா சனாதிபதி அவர்களும் தமது கட்டுப்பாடுகளைக் கைவிட்டு அவர் மீது தமிழ் மக்கள் வைத்த நம்பிக்கைக்கு துரோகம் இழைத்துவிட்டார்.

நீதி நியாயங்களுக்கு அமைவான ஒரு அரசியல் தீர்வை புறந்தள்ளி இராணுவ வழியினைத் தொடரும் செய்கை, ஒற்றை ஆட்சி அமைப்புள்ள இலங்கையில் பேச்சுவார்த்தை மூலமான தீர்வினை அசாத்தியமாக்கி பிரிவினைக்கே வழிகோலுவதாக அமையுமென வலியுறுத்த விரும்புகின்றோம்.

தமிழ் மக்களுக்கு அதிக மனித அவலங்களை ஏற்படுத்தியுள்ள இந்தத் தவறான வழிமுறைகளைக் கைவிடுமாறு செய்தல் வேண்டும். தமிழ்த் தாயகம் மீதான சகல இராணுவத் தாக்குதல்களையும் நிறுத்தி யாழ்ப்பாணப் பகுதிகளில் இராணுவம் நிலை கொண்டுள்ள பகுதிகளில் இருந்து இராணுவத்தினை விலக்கி இயல்பு வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் வண்ணம் தங்களைப் பணிவுடன் வேண்டுகிறோம். அத்தகைய சுமூகமானதொரு நடவடிக்கைகளுக்கு மட்டுமே தமிழ் மக்கள் சிறிலங்கா அரசின் நல்லெண்ணம் பற்றி நம்பிக்கை கொள்ள முடியும். இது ஒன்று மாத்திரமே ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கான சூழ்நிலையை உருவாக்கும். தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தித் தமிழர் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு சிறிலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுப்பதிலேயே தங்கள் நல்லெண்ணச் செல்வாக்கைப் பயன்படுத்துமாறு அன்புடன் வேண்டுகின்றோம். ✷

# மீளமுடியாத பகைமை

யாழ். குடாநாட்டின் மீது இரண்டாவது பாரிய படையெடுப்பைச் சிறிலங்கா இராணுவம் தொடங்கியுள்ளது. பல்லாயிரக்கணக்கான துருப்புக்கள் பங்கேற்கும் 'ரிவிரெச2' எனப் பெயரிடப்பட்ட இவ்விராணுவ நடவடிக்கையின் நோக்கம் குடாநாட்டின் ஏனைய பகுதிகளை ஆக்கிரமித்தலும் தமிழ் மகக்ளின் ஒரு தொகுதியினரைத் தமது பிடிக்குள் கொண்டு வருதல் என்பதும் வெளிப்படையானதாகும். தமிழ் மக்களின் பலமான எதிர்ப்பையும் பொருட்படுத்தாது சிங்கள அரசு படையெடுக்கத் தொடங்கியுள்ளது. வலிகாமத்தின் மீது படையெடுப்புக்குச் சிறிலங்கா அரசு தயாரான போதும் பலத்த எதிர்ப்புத் தமிழ் மக்களினாற் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அரசு அதனைப் பொருட்படுத்தவில்லை. பாரிய படையெடுப்பொன்றை நடத்தியது. இந்த நிலையில் தமிழ் மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துமுகமாகவும் தமது பாதுகாப்புக் கருதியும் வலிகாமத்தில் இருந்து தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்தனர். அங்கிருந்து வடமராட்சிக்கு ஒரு பகுதியினரும், வன்னிக்கு இன்னொரு பகுதியினரும் இடம்பெயர்ந்தனர். ஆனால் அதற்குப் பின்னரும் சிறிலங்கா அரசு குடாநாட்டின் ஏனைய பகுதிகளின் மீது படையெடுக்கத் தயாரானபோது தமிழ் மக்கள் தமது பலமான எதிர்ப்பை வெளிப்படுத்தினர். பல வெகுசனப் போராட்டங்களை நடத்தினர். ஆனால் அரசு எதனையும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. மறுவளமாக வலிகாமப் படையெடுப்பின் போது ஏற்பட்ட அரசியற் தோல்வியை ஈடுசெய்வதற்கான ஒரு மார்க்கமாகப் படையெடுப்பை அரசு கருதியுள்ளது. வலிகாமத்தில் இருந்து தென்மராட்சிக்கும் வடமராட்சிக்கும் இடம்பெயர்ந்துள்ள மக்களை மடக்கிப் பிடிக்கும் ஒரு முயற்சியாகவே அரசு இதை மேற்கொள்கின்றது. இதன் மூலம் அரசியல் வெற்றி ஒன்றைத் தாம் பெற்றதாகப் பிரசாரப்படுத்தலாம் என்பது அதன் குறிக்கோளாகும். இதற்கு ஏற்றாற்போன்றே ஏற்கனவே பிரசார அலுவல்களை அரசு தீவிரப்படுத்தியுள்ளது. வடமராட்சி, தென்மராட்சியில் இருந்து வன்னிக்கு இடம்பெயருமாறு விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கையை மக்கள் நிராகரித்துள்ளதாக அது தனது பிரசாரத்திற் தெரிவிக்கின்றது. ஆனால் தென்மராட்சி, வடமராட்சியில் இருந்து மக்களைப் பாதுகாப்பான இடத்திற்கு இடம்பெயரும்படி அறிவுரையும், ஆலோசனையும் கூறப்பட்டதே அல்லாது வெளியேறுமாறு புலிகள் யாரையும் நிர்ப்பந்திக்கவில்லை என்பது வேறுவிடயம்.

மேலும் சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைக்கு எதிராகத் தமது பகிரங்கமான எதிர்ப்பைத் தமிழ் மக்கள்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...

www.tamilarangam.net



**சிந்தனைக்கு:** *அடிமைக்கு நேர்மையான செயலைச் செய்யக்கூட சுதந்திரம் கிடையாது.-மகாத்மா காந்தி*


# அடையாளம் காணுதல் ஆரம்பக்கட்டம்

"றிவிரெச2" இராணுவ நடவடிக்கையின்போது இராணுவத்திடம் சிக்கிக் கொண்டவர்களை அடையாளம் காணும் நடவடிக்கையை இராணுவம் மேற்கொண்டு வருகின்றது. இதன் பிரகாரம் இளம் வயதினர்கள், சந்தேகத்துக்குரியவர்கள் என விசாரணைக்கு தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையானது எதிர்பார்க்கப்பட்டது ஒன்றுதான். இராணுவம் இவ்வாறான ஒரு நடவடிக்கை மேற்கொள்ளாது விட்டால்தான் ஆச்சரியப்படத்தக்கதொன்றாக இருந்திருக்கும். ஆனால் இவற்றை அரசு என்னதான் மூடி மறைக்க முயன்றாலும் ஒடுக்குமுறை நடவடிக்கைகள் காலப்போக்கில் வெளிவருவதை தவிர்க்க முடியாதது ஆகும். ஏற்கனவே 'றிவிரெச' இரண்டில் பொதுமக்கள் எவரும் கொல்லப்படவோ, காயப்படவோ இல்லையென பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையில் இருந்து இராணுவப் பேச்சாளர் வரையில் கூறுகின்றனர். ஆனால் கொல்லப்பட்ட காயமடைந்த மக்களின் சரியான தகவல்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. ஆயினும் ஆகக் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டும் 100க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்ததும் இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் ஆகும். இதேசமயம் அரசு எவற்றை மூடி மறைத்தாலும் சிறிது காலம் தாண்டியாயினும் அது வெளிவராமல் போகாது. கடந்த காலத்தில் அரசு மேற்கொண்ட இவ்வாறான முயற்சிகள் தோல்வி கண்டமைக்கு நல்ல உதாரணங்கள் பல உண்டு. இதேசமயம் சந்திரிகா குமாரணதுங்கா இனப்படுகொலைகளை தவிர்க்குமாறும் மக்களைப் பாதிக்காமல் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தளபதிகளைப் பணித்துள்ளதாகவும் சிலர் அபிப்பிராயம் தருகின்றனர். ஆனால் அது உண்மைக்குப் புறம்பானது. அபிப்பிராயம் மட்டுமல்ல நடைமுறையில் சாத்தியமற்றதும் ஆகும்.

ஏனெனில் சிறிலங்கா இராணுவம் என்பது ஒரு அரசின் இராணுவம் என்பதைவிட பேரினவாத வெறியூட்டப்பட்ட இனம் ஒன்றின் இராணுவமே ஆகும். அது தமிழர்களுக்கு எதிராகவே உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட தனிச்சிங்கள இராணுவம் ஆகும். அத்தோடு கடந்த காலத்தில் தமிழர் மீது ஒடுக்குமுறைகளை கையாண்டதோடு அதனால் பெரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் இராணுவமும் ஆகும். இவ்வாறான இராணுவம் ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்கும் என்றோ, புதிய விதிகளை மனத்தில் கொள்ளும் என்றோ எதிர்பார்ப்பது மடமையாகும். இதற்கு சந்திரிகா குமாரணதுங்கா ஆட்சிக்கு வந்த பின்னரே இராணுவம் புரிந்த இனப்படுகொலைகள் பல எடுத்துக்காட்டாகும். ஆனால் இதற்குத் தனியாக இராணுவத்தினர் தான் காரணம் இல்லை. அதாவது ஆட்சியாளர்களின் பணிப்புரைகளையும் மீறி இராணுவம் தனித்துவமாகவே இவ்வாறான படுகொலைகளைப் புரிகிறது என்பதல்ல. எழுப்பும் பணிப்புரைகளை தவிர்க்குமாறு இராணுவத்திற்கு ஆலோசனை கூறுவதுபோன்று காட்டிக்கொள்பவர்கள் மறுபுறம் இனப்படுகொலைகளுக்கான அத்தனை அதிகாரங்களையும் இராணுவத்திற்கு வழங்குகின்றது. அத்தோடு இராணுவத்தின் படுகொலைகளையும் மறைக்கும் பெரும் முயற்சியையே செய்துவந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் இன்று 'றிவிரெச-2' மூலம் கைப்பற்றப்பட்ட மக்களை அடையாளம் காணுதல், இனம் காணுதல் என இராணுவம் தடுத்து வைக்கவும் விசாரணை செய்யவும் தொடங்கியுள்ள நடவடிக்கை அதன் ஆரம்பமே ஆகும். இதன் உச்சக் கட்டம் எவ்வாறானதாக இருக்கும் என்பதை சொல்லித்தான் தெரியவேண்டுமென்பதில்லை. இன்னும் சிறிது காலத்துக்குள்ளேயே தெரியவந்துவிடும். அதாவது சிறிலங்கா இராணுவத்தின் இனவெறியை சிறிதுகாலத்துக்கு மேல் அதனால் அடக்கிக் காட்டமுடியாது. அத்தோடு இதன் காரணமாக விளையும் விளைவுகளையும் சிறிது காலத்துக்கு மேல் அரசினால் மூடிமறைத்து விடவும் முடியாது. அப்பொழுது சிறிலங்கா இராணுவத்தின் ஒடுக்குமுறையும் சிங்கள ஆட்சியாளர்களின் பொய்யும் உலகம் அறிவதைத் தவிர்க்க முடியாது போகும். ❑

# தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. லோறன்ஸ் திலகர் அவர்களுடன் ஒரு நேர்காணல்

சிறிலங்கா அரசு, 'சூரியக்கதிர்-2" என்ற இராணுவ நடவடிக்கையைத் தமிழர் பூமியில் நடத்திவருகின்றது. இதுகாலவரை நடைபெறாத அளவில், நடவடிக்கையின் தீவிரம் உணரப்படுகின்றது. பொதுமக்கள் பெரும் துன்பமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். 'சூரியக்கதிர்-2" இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த ஆறாவது நாளில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. லோறன்ஸ் திலகர் அவர்களை முக்கியமான நான்கு கேள்விகளுடன் சந்தித்தோம்.



-நேர்முகம் ஜெயா

◆ ***கேள்வி:*** அரசியல், இராணுவ, பொருளாதார ரீதியாகச் சிறிலங்கா அரசு பெரும் நெருக்கடி நிலைக்கு உள்ளாகியிருக்கின்றது. இந்த நெருக்கடி நிலையிலுங்கூடச், சிறிலங்கா அரசு 'சூரியக்கதிர்-2' இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதற்கான நோக்கம் என்ன?
இராணுவ ஆய்வாளர்களின், அவதானிகளின் காலக்கணிப்பைப் பொய்யாக்கிவிட்டு இந் நடவடிக்கை அவசரமாக மேற்கொள்ளப்பட்டிருப்பதற்குப் பிரத்தியேகமான காரணங்கள் ஏதாவது உண்டா?

◆ **பதில்:** இந்தக் கேள்வியில் இரண்டாவது பகுதிக்கான பதில் கேள்வியின் முற்பகுதியிலேயே உள்ளது.

அதாவது இந்த இராணுவ நடவடிக்கையைச் சந்திரிகா அரசு பொருத்தமற்ற நேரத்தில், பொருத்தமற்ற நிலையில் இருந்துகொண்டு அவசரமாக மேற்கொண்டதற்கு, அரசு எதிர்கொண்டுள்ள அரசியல் நெருக்கடிகள் முக்கிய காரணிகளில் ஒன்றாகின்றது.

இராணுவத் தந்திரோபாயங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், குறுகிய அரசியல் இலாபங்களை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவே இதனைக் கருதமுடியும்.

அரசியல் நோக்கம் என்னும்போது, உள்ளூராட்சித் தேர்தல்களைக்கூட நடாத்தி வெற்றிபெறும் நம்பிக்கை அற்ற, மக்கள் செல்வாக்கை இழந்த நிலையில் அரசு உள்ளது. இத்தேர்தலையே பின்தள்ள நாடு தழுவிய அவசரகாலச் சட்டத்தைப் பிரயோகிக்க வேண்டிய நிலைக்கு வந்தமை வெளிநாட்டு முதலீட்டாளர்களையே பின்வாங்கச் செய்யும் நிலைமை உருவாகும் எனத் தெரிந்தபோதும்கூட அவசரகாலச் சட்டத்தை பிரயோகிக்க வேண்டிய இக்கட்டான நிலை, ஊழல் விவகாரம், ஜனநாயகரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட இரு மாகாணசபைகளைக் கலைத்து, எதிர்க்கட்சிகளினதும், பொதுமக்களினதும் எதிர்ப்பை சம்பாதித்ததுடன், நீதிமன்றத்தில் எதிரான தீர்ப்பைப் பெற்றமை, எதிர்க்கட்சியினர்மீது குண்டர்களை ஏவிவிட்டமை, விலைவாசி உயர்வு, தொழிற்சங்கங்களின் எதிர்ப்பு, ஜே.வி.பி.யினரின் புதிய எழுச்சி இப்படியாக, தென்பகுதிக் காரணங்கள் ஒருபக்கம் இருக்கின்றன. மறுபக்கத்தைப் பார்ப்போமானால், தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் சந்திரிகாவின் வேடம் நன்றாகக் கலைந்துள்ளமை, ஒத்துழைப்பு வழங்கும் தமிழ்க்குழுக்களுடன் கூட முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கியுள்ளமை, அதனால் பதவியை இழக்கும் சாத்தியக்கூறுகள் தோன்றக்கூடிய சூழ்நிலை முக்கியமாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய வெற்றி மாயை, விடுதலைப் புலிகளின் பரந்துபட்ட வெற்றிகரமான தாக்குதல்களால் முற்றாக மறைந்துபோனமை, அத்துடன் அவர்களாலேயே உருவாக்கப்பட்ட 'தீர்வுத்திட்டத்தை' மேலும் மலினப்படுத்தச் சந்திரிகா அரசு விரும்பினாலும் அதனைச் செய்ய முடியாமல் உள்ளமை, இப்படியான நெருக்கடிகளில் இருந்து தப்பிக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு அசட்டுத்தனமான நடவடிக்கையாகவே இந்தச் 'சூரியக்கதிர்-2'ஐக் கொள்ளமுடியும்.

◆ **கேள்வி:** இந்த இராணுவ நடவடிக்கையின்மூலம் விடுதலைப் போராட்டத்திற்கு ஏற்பட்டுள்ள நேரடியான இராணுவ ரீதியிலான பாதிப்பு அல்லது பின்னடைவு என்ன?

◆ **பதில்:** குறுகிய அரசியல் இலாபங்களுக்காக மேற்கொள்ளப்படும் இராணுவச் செயற்பாடுகள், இராணுவத் தந்திரோபாயங்களைக் கருத்தில் கொள்ளாததாக இருக்கும் என்பதுடன் நீண்டகால அடிப்படையில் ஒரு இராணுவத் தோல்வியைச் சம்பாதிப்பதாகவும் அமையும்.

என்றாலுங்கூட, எண்ணிக்கை மற்றும் பெருமளவு சுடுசக்தியைக் கொண்ட பலம்வாய்ந்த, ஒரு மரபுரீதியான இராணுவம் சில ஆதாயங்களையும், விடுதலைப் புலிகள் தற்காலிகமாகச் சில பின்னடைவுகளையும் சந்திக்கக்கூடியநிலை ஏற்படக்கூடும். ஆனால், இதன் நீண்டகால விளைவுகள் அரசிற்கு இராணுவ ரீதியாகப் பலத்த தோல்வியை நிச்சயமாக கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

இதில் முதலாவதாக, மக்களைக் கொடூரமான அனுபவத்திற்கும் சூழ்நிலைக்கும் உட்படுத்தியதன்மூலம், உட்படுத்துவதன்மூலம், தமிழ் மக்களைச் சிங்கள அரசிடம் இருந்து நிரந்தரமாக அந்நியப்படுத்த வழிவகுக்கும். இரண்டாவதாக அந்நியப்பட்டு அவலநிலைக்கு உள்ளான மக்கள் போராட்டத்தில் இணைந்து செயற்படும் சூழ்நிலை ஏற்படும்.

தமிழர்களின் பிரதேசத்தில் ஊடுருவி நிலங்களைத் தற்காத்துக்கொள்ள ஒரு இலட்சத்திற்கும் அதிகமான படையினரை நிரந்தரமாக அப்பகுதிகளில் வைத்துக்கொள்ள வேண்டிவரும். அப்படியான சூழ்நிலையில் இவ்வளவு பெரும்படைக்கான விநியோகங்களும் விடுதலைப் புலிகளின் கடல், வான், தரை மார்க்கத் தாக்குதல்களில் இருந்து, பாதுகாத்து மேற்கொள்ளப்பட வேண்டும். இப்படியான சூழ்நிலையில், அமைப்பின் கட்டமைப்பில் எதுவித சிதைவுகளையோ பாதிப்புக்களையோ சந்திக்காத விடுதலைப் புலிகளின் மக்கள் இராணுவத்திடம் இருந்து, பரந்துபட்டு நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு உட்பட்டுச் சிதைவுறுவது நிச்சயம்.

◆ **கேள்வி:** இந்த இராணுவ நடவடிக்கையின்மூலம் சந்திரிகா அரசு சாதித்தாக எதைக் கருதுகிறீர்கள்?

◆ **பதில்:** இத்தாக்குதல் பொருளாதாரத் தடையினால் கஸ்டப்படும் மக்கள் மீதும் இராணுவ நடவடிக்கைகளால் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருக்கும் மக்கள்மீதும் மனித நாகரீகத்திற்கு சவால்விடும் வகையில் நடத்தப்பட்டிருக்கின்றது.

மக்களையும், மண்ணையும் சிறைப்பிடிக்கின்ற நோக்கத்தோடு, மிகவும் மோசமான கொடூரமான நகர்வாகவே இந்த இராணுவ நடவடிக்கை அமைந்துள்ளது. உணவு, மருந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு, அத்துடன் மோசமான இராணுவ நடவடிக்கை என, சிறிலங்கா அரசினது திட்டமிட்ட ஒடுக்குமுறைக்குள் சிக்கித்தவித்த மக்கள் மீதே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விராணுவ நடவடிக்கை ஆரம்பித்ததில் இருந்து, மக்கள் நாட்கணக்கில் உணவின்றிப் பட்டினியாக உள்ளனர் எனவும்; பட்டினிச்சாவுகள் நிகழ்கின்றன எனவும் அறியமுடிகின்றது. முன்னைய நடவடிக்கையின் காரணமாக இடம்பெயர்ந்து, வாழ்க்கைப் போராட்டம் நடத்திய மக்களே மீண்டும் அவ்விடத்தில் இருந்து மேலும் துரத்தியடிக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினரின் தரைநகர்விற்குட் சிக்குண்டுள்ள மக்களை மனிதக்கேடயங்களாகப் பயன்படுத்தும் கொடுமையும் நிகழ்கின்றது.

தமிழ் மக்கள் மௌனமாக இருப்பதன்மூலம் புலிகளை ஆதரிக்கின்றார்கள் என, தமிழ் மக்கள் மீது விசனப்பட்ட சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா, தமிழ் மக்களைப் பழிவாங்கியதில் வெற்றி கண்டதே அதன் சாதனை. மற்றும்படி எதுவும் இல்லை.

◆ **கேள்வி:** இந்த இறுக்கமான நிலையில் இருந்து போராட்டச் சக்கரத்தை இலக்கு நோக்கி நகர்த்த, வெளிநாடுவாழ் மக்களின் பங்களிப்புக் குறித்து ஏதாவது சொல்ல விரும்புகின்றீர்களா?

◆ **பதில்:** தமிழீழ விடுதலைப் போராட்டத்தை விரைவுபடுத்தவும், விடுதலையை விரைவாய்ப் பெறவும் அனைத்து மக்களினதும் பங்களிப்பு முக்கியமானது. வெளிநாடுவாழ் தமிழ் மக்களைப் பொறுத்தவரை, அவர்களின் முன்னே உள்ள தேசியப்பணி பூரணமாக உணரப்பட வேண்டும். சிறிலங்கா அரசின் அட்டூழியங்களை உலகநாடுகளில் எடுத்துச் சொல்லும் பணி முக்கியமாக இம்மக்களிடம் உள்ளது. எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மையை உணரவைத்தல் வேண்டும். அத்துடன், தேசியப் பாதுகாப்பு, மக்கள் நிவாரணம் போன்ற விடயங்களில் எல்லா மக்களும் மனமுவந்து, உணர்வுபூர்வமான பங்களிப்பை மேற்கொள்ள வேண்டும். அதாவது தமிழ்த் தேசத்தை, தேசிய இனத்தை அழிப்பதற்கும், அதன் உரிமைகளை மறுப்பதற்கும் சிங்கள தேசம் முழுவதையும் திரட்டும் போக்கே முனைப்புற்று நிற்கின்றது.

தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிரான, ஒரு அட்டூழியமான, நீதிக்குப் புறம்பான போரிற்குச் சிங்களதேசம் தன்னை முழுமையாகத் தயார்படுத்துகின்றது. ஆனால், எமது போராட்டமோ எமது உரிமைகளுக்கானது, எமது பூமியை மீட்டெடுப்பதற்கானது. எனவே தமிழ் மக்கள், குறிப்பாக வெளிநாடுகளில் வாழுகின்ற மக்கள் விடுதலைப் புலிகளைப் பலப்படுத்தி எமது தேசிய விடுதலைப் போரை வென்றெடுக்க உணர்வுபூர்வமான பங்களிப்பை நல்க வேண்டும். ❋

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழகத்தில் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்த ஏற்பாடு

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் ஆகியோர் ஏப்ரல் 30ஆம் நாள் தமிழகமெங்கும் மாவட்டத் தலை நகரங்களில் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்த முன்வருமாறு அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவ்வறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டு ள்ளதாவது:

முப்படைகளைச் சேர்ந்த ஒரு இலட்சம் இராணுவத்தினைக் கொண்ட பெரும் படையுடன் 50 நாட்களுக்கு மேல் போராடிச் சிங்களப் பேரினவாத அரசு யாழ். நகரைக் கைப்பற்றினாலும் தனது நோக்கத்தில் தோற்றுப் போனது. விடுதலைப் புலிகளின் ஆணையை ஏற்று மக்கள் அனைவரும் வெளியேறிவிட்டதைக் கண்டு ஆத்திரம் அடைந்த சந்திரிகா இப்போது யாழ். குடாநாட்டின் பிறபகுதி மக்கள்மீது போர் தொடுத்திருக்கிறார். மூன்று முனைகளில் இருந்து நடத்தப்படும் இப்படையெடுப்பின் நோக்கம் தமிழர்களைத் தப்பவிடாது தடுப்பதேயாகும். கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதல்களாலும், விமானக்குண்டு வீச்சாலும் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இறந்தவர்களின் உடல்கள் தெருக்களில் சிதறிக் கிடப்பதாகவும் வெளியேறும் தமிழர்களைச் சிங்கள இராணுவம் விரட்டி விரட்டிச் சுடுவதாகவும் செய்திகள் கிடைக்கின்றன.

கிளாலி வழியாக வெளியேற முயலும் மக்களை வளைத்துப் பிடித்து மனிதக் கேடயமாகப் பயன்படுத்திப் புலிகளுடன் சிங்கள இராணுவம் போர்புரியும் கொடுமையும் நடைபெறுகிறது. புலிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட மக்கள் தங்களை வரவேற்பதாகப் பொய்ச் செய்தியைச் சிங்கள இராணுவம் திட்டமிட்டுப் பரப்புகிறது.

தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெற இருக்கும் இத்தருணத்தைப் பயன்படுத்தி தமிழீழத்தில் தமிழினப் படுகொலையை செய்துமுடிக்க சந்திரிகா கங்கணம் கட்டி நிற்கின்றார். இந்த இனவெறியாட்டத்தை தடுத்து இவ்வாறான மிலேச்சத்தனமான சிறிலங்கா அரசின் நடவடிக்கையை அம்பலப்படுத்துவதுடன் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஆர்த்தெழும்படி அனைத்துக் கட்சிகளையும், அனைத்துத் தமிழர் அமைப்புக்களையும் . வேண்டிக் கொள்கிறோம். ✷

# மூடி மறைக்க முனையும் குறிக்கோள்

சிந்தனைக்கு: மழை பெய்தது என் சாதனை என்று வாதாடும் ஒரு கட்சி வரட்சிக்கும் அதுதான் பொறுப்பு என்று எதிரிகள் பழிக்கும்போது வியப்படையக்கூடாது.

சிறிலங்கா அரசு இராணுவம் ஆரம்பித்த ரிவிரச–2 நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இராணுவத்தரப்பின் படையெடுப்பு குறித்தும் தமது நோக்கம், நகர்வு என்பன குறித்தும் எதுவித தகவலும் வெளியிடாத போதும் பெரும் எடுப்பிலான நகர்வு ஒன்றினை தென்மராட்சிப் பகுதியில் மேற்கொண்டுள்ளது. இதேசமயம் அமுல் செய்துள்ள முழுமையான செய்தித் தணிக்கையானது இராணுவ நடவடிக்கையின் நோக்கம் குறித்த தகவல்கள் கொழும்பிலிருந்து வெளியாவதை முழுமையாகத் தடுத்துள்ளது எனலாம். அரசின் திட்டமிட்ட நடவடிக்கையினால் தணிக்கை உருவாகியுது என்பதனால் அரசின் நோக்கம் இராணுவ நடவடிக்கையின் குறிக்கோள் எவ்வகையிலும் வெளிவருவதை விரும்பவில்லை என்றே கூறலாம்.

இந்நிலையில் இப்படையெடுப்பின் நோக்கம் குறித்து எதிர்பார்ப்புக்கள் சிலவற்றை நாம் வெளியிடலாம். எனினும் அவை யாவும் ஊகத்தின் அடிப்படையிலானவை என்பதே ஆகும். ஆனால் இவ்விராணுவ நடவடிக்கையின் நோக்கம் குறித்து இதுவரை நடைபெற்றுவரும் சம்பவங்களின் அடிப்படையில் பார்ப்பதானால் ஒரு சில சம்பவங்கள் வெளிப்படத் தொடங்கியுள்ளன.இதில் ஒன்று, இராணுவ நடவடிக்கைக்கு ஆட்சேபித்து வலிகாமப் பகுதியிலிருந்து வெளியேறிய மக்களின் ஒரு பகுதியினரை எவ்வாறேனும் வலிகாமத்துக்குள் கொண்டு செல்லுதலாகும். அதாவது ஒப்பரேசன் ரிவிரச–1 இல் ஏற்பட்ட அரசியல் தோல்வியை இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் ஈடுகட்ட முன் வந்துள்ளமையாகும். ஒரு அரசியல் தோல்வியை இராணுவ நடவடிக்கையினால் ஈடுகட்ட முடியுமென சந்திரிகா அரசு தீர்மானித்துள்ளமையானது அதன் தவறான சிந்தனையின் வெளிப்பாடே ஆகும். இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினையானது ஒரு அரசியல் பிரச்சினையாகும். இதற்கு இராணுவ ரீதியிலும் அடக்கு முறை ரீதியிலும் தீர்வு ஒன்றைக் காண சிங்கள ஆட்சியாளர்கள் முற்பட்டதன் விளைவே இன்று இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக விஸ்வரூபம் எடுத்து வருகின்றமைக்குக் காரணமாகும். சந்திரிகா அரசு இதனை இடைக்கிடை புரிந்து கொண்டது போல் பேசுகின்றது. ஆனால் அதனைப் பேச்சளவில் மட்டுமே வைத்திருக்கின்றது என்பதே உண்மையாகும். இல்லாதுபோனால் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றைக்காணும் முயற்சியை மேற்கொண்டிருக்கமாட்டாது என்பது மட்டுமல்ல யாழ் இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட பெரும் அரசியல் தோல்வியொன்றை மற்றொரு இராணுவ நடவடிக்கையினால் வெற்றியாக்கி விடலாம் எனக் கருதியிருக்கவும் மாட்டாது. இவ்வாறு ரிவிரச–2 இன் இராணுவ நடவடிக்கையின் நோக்கங்களில் வெளிப்பட்ட அரசியல் குறிக்கோள் நிச்சயம் தோல்வியடையும் என்பது ஒருபுறம் இருக்க, இவ்விராணுவ நடவடிக்கையின் நோக்கமானது தமிழ் மக்களுக்கும் சிறிலங்கா அரசிற்குமிடையில் என்றுமில்லாத அளவு வெறுப்பையும் உருவாக்கியுள்ளது என்பது வெளிப்படை. அதாவது இனப் பிரச்சினைக்கு, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற சந்திரிகா குமாரதுங்கா அரசின் கருத்துக்களுக்கு முரண்பாடான அம்சங்களையே இராணுவ நடவடிக்கை தோற்றுவிக்கும் என்பது நிச்சயமானதாகும். ஏனெனில் தமிழ் மக்கள் மீது அத்தனை துயர–துன்பங்களை இந்நடவடிக்கை மூலம் அரசு சுமத்தியுள்ளது. அதாவது இராணுவ நடவடிக்கைகளின் நோக்கம் எதுவாக இருப்பினும் சந்திரிகா அரசானது தமிழ் மக்களை என்றுமில்லாதவாறு அல்லலுற வைத்துள்ளது. இந்நிலையில் தமிழ் மக்களின் அபிலாசைகள் எதையும் சந்திரிகா அரசு கருத்தில் கொள்ளப் போவதில்லை. ரிவிரச–2 இன் நோக்கம் எதுவாக இருப்பினும் அதன் அரசியல் நோக்கம் நிச்சயமாக ஈடேறப் போவதில்லை. இதே சமயம் அதன் இராணுவ வெற்றியையும் எந்தளவு வென்றது என்பதையும் காலமே தீர்மானிக்க முடியும். இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள இராணுவ விமர்சகர்கள், இந் நடவடிக்கையானது இராணுவத்தினருக்கு எதிர் காலத்தில் ஆபத்தை விளைவிப்பதாகவே அமையும் என உறுதிபடத் தெரிவித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. ✷

## இதயம் சுமந்த எட்டாம் ஆண்டு

அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வு

இத்தாலி ஜெனோவா மாநகரில் 7–4–96 ஞாயிறன்று, புலம்பெயர்ந்து இத்தாலியில் வாழும் தமிழீழ மக்கள் அன்னை பூபதியின் நினைவு நாளை



உணர்வு பூர்வமாக நினைவுகூர்ந்தனர். புனித திரோசா அம்மையின் ஆலய மண்டபத்திலேயே எங்கள்தமிழீழ அன்னையை நினைவு கூரும் நிகழ்வு இட ம்பெற்றது.

ஜெனோவா வாழ் தமிழீழ மக்களுக்காக, அவர்களின் சிறார்களின் நலன் கருதி செயற்பட்டுவரும் தியாகி திலீபன் கல்வி நிலையத்தின் ஓராண்டு நிறைவு தினமும் இங்கு இடம் பெற்றது.

பிற்பகல் 3.30 மணிக்கு தமிழீழ தேசியகீதத் துடன் ஆரம்பமான நினைவு நாளில், மாவீரர் சாள்ஸ் அன்ரனியின் சகோதரர், அன்னையின் திருவுருவப்படத்திற்கு முன்பிருந்த ஈகைச்சுடரை ஏற்றி வைக்க, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் உயிர் நீத்த எமது மக்களுக்கும் தம்மைத் தற்கொடையாக்கிய மாவீரர்களுக்கும் இரண்டு மணித்துளிகள் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஜெனோவா – தியாகி திலீபன் கல்வி நிலைய மாணவர்கள் செல்வன் மரியசீலன் வினோத், செல்வன் தனபாலசிங்கம் ரமணன்,செல்வி ருஸ்சாந்தினி இராசாயகம் ஆகியோர் அன்னை அவர்களின் தற்கொடையின் மாண்பையும், அன்னை எத்தகைய சூழ்நிலையில் தியாக வேள்வியில் குதித்தார் என்றும், அவரின் கனவை நனவாக்க நாம் எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்றும் தமது மழலைத் தமிழில் எடுத்தியம்பியது எல்லோரையும் சிந்திக்க வைத்தது. தமது தமிழறிவை சிறந்த பேச்சு மூலம் வெளிக்காட்டிய திலீபன் கல்வி நிலைய மாணவர்களின் கலை ஆற்றல், "ஆடிப் பாடுவோம் கூடிப் பாடுவோம்." "குருவிக் கூட்டம்போல எங்கள் வாழ்வு." "ஆகாயப் பூச்சிரிக்கும்." போன்ற பாடல்களுக்கு, அபிநயம் வழங்கியமை மூலம் தென்பட்டது. இந்தப் பாடல்களுக்கு திருமதி. ராதா, திரு. மகேந்திரராஜா ஆகியோர் அபிநயம் நெறியாள்கை செய்தனர். செல்வி மாருதி நடராஜா அவர்கள் உணர்வு பூர்வமான கவிதையொன்றை வழங்கினார்.

இங்கு சிறப்புரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலியப் பணிமனைப் பிரதிநிதி திரு. மேதா அவர்கள் தனது உரையில், நாம் இங்கிருந்து எமது தாயக விடுதலைக்குச் செய்ய வேண்டிய பணிகள் பற்றியும், சிறிலங்கா அரசு வெளிநாடுகளில் இயங்கும் விடுதலைப் புலிகளின் பணிமனைகளுக்கு எவ்வாறான அழுத்தங்களைக் கொடுக்கின்றது என்றும் அதற்கு இத்தாலியில் வாழும் தமிழ் மக்கள் செய்ய வேண்டிய ஒத்துழைப்புப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

சிறப்புரையை அடுத்து, ஜெனோவா தமிழீழ மக்களின் சார்பில் திரு. அருள் நேசன் அவர்களும், பொலோனியா மக்களின் சார்பில் திரு. சுதா அவர்களும் உரையாற்றினர்.

தொடர்ந்து, "விடுதலை" என்றதலைப்பில் ஜெனோவா தமிழீழக் கலைஞர்கள் வழங்கிய வில்லிசை மேடை ஏறியது. அன்றைய நிகழ்ச்சியை சிறப்பிக்க பல மைல்களுக்கு அப்பால் இருந்து வந்து அவர்கள் வழியில என்ற நாடகத்தை நாப்போலிக் கலைஞர்கள் வழங்கினர். அதனைத் தொடர்ந்து ஜெனோவா கலை, பண்பாட்டுக் கழகத்தின் சார்பாக திரு. ஆனந்தன் அவர்கள் நெறிப்படுத்திய சிறகுமுளைத்த பறவைகள் என்றநாடகம் இடம் பெற்றது. ஆனையிறவுச்சமரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் கஸ்தூரிக்குச் சமர்ப்பணம் ஆக்கிய இந் நாடகம் எமது எதிரிகளுடன் துரோகிகள் சேர்ந்து செயற்படுவதை சித்தரித்துக் காட்டி பலரது பாராட்டைப் பெற்றுக் கொண்டது.

நாடகங்களைத் தொடர்ந்து, தமிழ்க் கல்வியில் ஆர்வமுறச் செய்யவும், உற்சாக மூட்டும் விதத்திலும் திலீபன் கல்வி நிலையமாணவர்களு க்கு கற்பித்து வந்த ஆசிரியை திருமதி. நிர்மலா அவர்களுக்கும்,மாணவர் களுக்கும் கலையார்வத்தை ஏற்படு த்திய நடன ஆசிரியை திருமதி. ராதா அவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. மாணவர்களுக்கு ஆசிரியைகள் பரிசில்கள் வழங்க, ஆசிரியைகளுக்கு திரு. மேதா அவர்கள் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

இதனைத் தொடர்ந்து, நாப்போலி கீர்தனாஸ் இசைக் குழுவினரின் புரட்சிக்கானங்கள் இடம் பெற்றன.

இறுதியாக ஜெனோவா தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் திரு.சந்திரன் அவர் களின் நன்றியுரையுடன் 10.30 மணியளவில் நிகழ்வுகள் நிறைவு பெற்றன. ✷

### மீளமுடியாத பகைமை...

ஏற்கனவே வெளிக்காட்டியுள்ளனர். வலிகாமத்தில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்ததைக் காட்டிலும் வேறு எந்த ஒரு உச்சக் கட்ட எதிர்ப்பை எவ்வகையிலும் பொது மக்கள் என்ற ரீதியில் அவர்களாற் காட்டமுடியாது. இந்த நிலையில் தற்பொழுது தென்மராட்சிப் பகுதி மீது இராணுவம் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைமூலம் தமிழ் மக்களைப் பிடிப்பதானது சிங்கள அரசு கூறிக்கொள்வது போல் தமிழ் மக்களைப் பிடித்தல் ஆனது தமிழ் மக்களை அடிமைப்படுத்தும் முயற்சியே ஆகும். ஆனால் இந்த அரசின் பிரசாரத்தை யாரும் ஏற்றுக்கொள்வார்களேயானால் அவர்கள் யதார்த்தத்தை ஏற்க மறுக்கிறார்கள் என்ற நிலையே ஆகும். இவர்கள் சிங்களப் பேரினவாதத்திற்குத் துணைபோறவர்களாகவும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு ஆதரவு அளிப்பவர்களாகவும் நிச்சயம் இருக்க முடியும்.

இந்தச் சமயம், இப்படையெடுப்பானது பெருந்தொகையான தமிழ் மக்களின் அழிவிற்கும் சொல்லொணாத் துயரத்திற்கும் வழி வகுக்கும் என்பது அரசுக்கு நன்கு தெரிந்த விடயமேயாகும். ஏனெனில் இப்பகுதிகள் மக்கள் செறிந்து போயுள்ளதாகவும், மக்கள் பாதுகாப்புத்தேடித் தப்பியோட முடியாத பகுதிகளாவும் உள்ளன. ஒரு பிரதேசத்தின் மீது தாக்குதல் நடத்தப்படின் அங்கு பெரும் உயிரிழப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்பது நன்கு தெரியும். ஆனால் சந்திரிகா அரசு இதைப்பற்றிச் செய்தித் தணிக்கை மூலமாகவும், தமது பிரசாரத்தின் மூலமாகவும் மூடி மறைத்துவிடலாம் எனக் கருதுகின்றது. இதேசமயம் இனப்படுகொலை ஒன்றின் மூலமே தமிழரின் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தினைத் தோற்கடிக்க முடியுமென்றும் அது எண்ணுகின்றது. ஆனால் சந்திரிகாவின் இம்முயற்சியானது வீண் முயற்சியாகும். இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் என்றுமே சமாதானமாக வாழமுடியாத ஒரு பகைமையை உருவாக்குமே ஒழிய ஒருபோதும் இனப்பிரச்சினையைத் தீர்க்கவோ அன்றிச் சமாதான நிலை ஒன்றை உருவாக்கவோ வழிவகுக்க மாட்டது. மேலும் நீண்ட காலம் இலங்கையில் இரத்த ஆறு ஓடவே இது வழி வகுக்கும் என்பது திண்ணம். ✷

www.tamilarangam.net



# மௌனமான ஒரு பொருண்மியப் புரட்சிக்கான அத்திவாரம்


**வன்னிப் பிராந்தியத்தில் பெருநிலப்பரப்பின் பல பகுதிகளிலும் எம்மக்களின் வாழ்க்கை நிலைகளையும் அவர்களின் பிரச்சினைகளையும் அங்குள்ள வளங்கள் பயன்படுத்தப்படும் தன்மையையும் கண்டறிவதற்கான இரண்டு நாள் சுற்றுப்பயணத்தை யாழ். பல்கலைக்கழக, கிளிநொச்சி விவசாயபீட மாணவர்களும், விரிவுரையாளர்களும் மேற்கொண்டு இருந்தார்கள். இவர்கள் அளம்பில், ஒட்டுசுட்டான், விசுவமடு, தருமபுரம் போன்ற சகல பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்கள். இப்பயணத்தின் போது இவர்கள் கண்டறிந்தவை கீழே தொகுத்துத் தரப்படுகின்றன.**

"மண்ணைத் தின்றுதான் வாழவேண்டும்" என்று வாழ்த்தப்பட்டது வடக்கு. அந்நியர் மட்டுமல்ல எம்மவர் பலரும் எண்ணுவதும் இப்படித்தான். போர், மனித அழிப்புக்கள், கடலில் கால்வைக்கத் தடைகள், வயலில் விதை தூவிய விவசாயியும், கடலில் வலை வீசிய மீனவனும், குதறப்பட்ட நிகழ்வுகள் இவையாவும் ஒரு தசாப்தத்திற்கு மேலாக எம்வாழ்வின் அன்றாட நிகழ்வுகள். எனினும் இவற்றையும் மீறி இங்கும் மக்கள் வாழ்ந்தபடியே இருக்கின்றார்கள். சாவினை மிதித்து வாழ எழுந்த மக்கட் கூட்டமாய் இன்று வாழ்ந்து காட்டுகின்றனர். எப்படி இவர்களால் இது சாத்தியமாயிற்று? எமது மண்ணின் மூலை முடுக்கெல்லாம் பற்றாக்குறைகளையும், இல்லாமைகளையும் அழுத்தங்களையும், தடைகளையும் மீறி தொழில் முயற்சிகள் நடாத்தப்படுகின்றன. காற்று வியர்வை தின்ன களத்து மேட்டில் குவிந்தனர் மக்கள். மண் பொன்னாகியது. இவர்களின் இந்த முயற்சிக்குப் பின்னால் உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் தன்னை இனம் காட்டியது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம். ஏராளமான திட்டங்கள், செயற்பாடுகள் என விரிகின்றது. இவர்கள் முயற்சிகள் நாட்டின் பொருளாதார சக்கரம் சுழல்வதற்குத் தோள் கொடுத்தபடி முன் செல்கிறது. இந்நிறுவனம் கடல் வனம், பனைவளம், விவசாயம் விலங்கு வேளாண்மை, கைத்தொழில் என அங்கிங்கெணாதபடி எங்கும் தொழிற்படுவது இது.

அளம்பில், முல்லைமாவட்டத்தின் நெய்தற் கிராமம், கண்ணெதிரே சங்குகள் முழங்க முத்தெறித்திடும் கடல், தோணிகளை கடலில் தள்ளும் மீனவரின் "ஐலேசா" பாடல்களினாலும் தம் கணவர்களினதும், தந்தையரினதும் வருகைக்காக வழிநீளம் முழுவதும் விழிவைத்துப் பார்த்திருக்கும் மனைவியராலும் குழந்தைகளாலும் வள்ளங்களிலிருந்து இறக்கப்பட்ட மீன்களாலும், வியாபாரிகளாலும் ஒரு காலத்தில் நிறைந்திருந்தது இக் கடற்கரை. எனினும் இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தது கடல்வலயத் தடைச்சட்டம். வள்ளங்கள் கரைகளில் முடங்கின. மீறிச் சென்றவர்கள் கரையொதுங்கினார்கள். வலையையும் உயிரையும் கடலில் விட்டு விட்டு அடுப்பில் அணைந்த நெருப்பு வயிற்றில் எரிய ஆரம்பித்தது. இப்படியாக எத்தனை நாட்களில் கேள்விகள் எழ வழிகளும் பிறந்தன.

கடல் அபாயகரமானது எனினும் கரை எங்களுடையது. இதனடிப்படையில் பிறந்ததுதான் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கரைவலை மீன்பிடித் திட்டம். பலருக்கு வேலைவாய்ப்பும், வருமானமும், குழந்தைகளின் வயிற்றுக்கு உணவும் என வெற்றிகரமாக நடை போடுகிறது. இத்திட்டம் மாதம் ரூபா 2000 வரை தனிநபர் ஒருவர் இலாபம் பெற வழி வகுத்துள்ளது. இவர்களது இத் திட்டத்தை தொடர்ந்து பொதுமக்களும் அளம்பில் பகுதியில் தமது நடவடிக்கைகளை மீள ஆரம்பித்துள்ளனர்.

முல்லைத்தீவின் குமுழமுனைக் கிராமம் கால்நடை வளத்திற்குப் பெயர் போனது. இக்கிராமத்தில் 12000 தொடக்கம் 15000 வரையான கால்நடைகள் உண்டு என்பது புள்ளிவிபரக் கணக்கு. எனினும் பாலிற்கான சந்தை வாய்ப்பின்மை இவ்வளத்திலிருந்து உயர்ந்த பட்ச பயனைப் பெறத் தடைக்கல்லாய் அமைந்து விட்டது. பால் மிகையாக உற்பத்தியாகி விலை வீழ்ச்சிக்கு வழிகோல மக்கள் மாடுகளிலிருந்து பால் கறப்பதை ஏறத்தாழ கைவிட்டே விட்டனர். இலகுவில் பழுதடையக்கூடிய உணவுப் பொருளாகிய பாலை இன்றைய சூழ்நிலையில் இடத்திற்கிடம் எடுத்துச் செல்வது என்பது ஏறத்தாழ சாத்தியமற்றது. இதன் விளைவாக சனப்பெருக்கம் மிகுந்துள்ள நகர்ப்புறங்களில் பாலிற்குத் தட்டுப்பாடும், பால் உற்பத்தியாகும் இடங்களில் இதற்கான சந்தை வாய்ப்பின்மையும் ஒரே நேரத்தில் நிலவுகின்றது. இந்த நிலையை தணித்தற்பொருட்டு தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் குமுழமுனையில் அமைக்கப்பட்டதே பாற்பொருட்கள் உற்பத்தி நிலையம். அன்றாடம் 100லீ பாலை சேகரித்து சூழவுள்ள பிரதேசங்களில் விற்பனை செய்வதுடன் 100 லீ பாலை நெய்யாக மாற்றும் வசதிகளையும் இந்நிலையம் கொண்டுள்ளது. ஒரு போத்தல் சுத்தமான பசுநெய் ரூபா 175 ஆகவும், எருமை நெய் ரூபா 155 ஆகவும் இங்கு கிடைக்கின்றது. எனினும் பிரச்சனைகள் இல்லாமலில்லை. நெய் சாதாரண மக்களின் அன்றாட உணவில் இடம் பெறும் ஒரு உணவுப் பொருளல்ல. இதற்கான சந்தை வாய்ப்பும் மிகக் குறுகியது. இதனை நீண்ட காலம் சேமிக்க முடியும் என்பது உண்மையே எனினும் சந்தை வாய்ப்பு பிரச்சனையானதொன்றாகவே தொடர்ந்து காணப்படுகின்றது. அத்துடன் கொழுப்பு நீக்கப்பட்ட பின் எஞ்சும் புரதம் நிறைந்த ஆடை நீக்கிய பால் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.



கால்நடைச் சிறுசிகிச்சை நிலையங்கள் குமுழமுனை, முள்ளியவளை, ஸ்கந்தபுரம், தர்மபுரம் ஆகிய இடங்களில் விலங்கு வேளாண்மையில் விசேட பயிற்சி பெற்ற இளைஞர்களைக் கொண்டு நடாத்தப்படுகின்றன. இப்பிரதேசங்களில் வாழும் கால்நடை வளர்ப்போர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் கால்நடைகளிற்கு வரும் தொற்று நோய்களும், குட்டி ஈனலின் போது ஏற்படும் சிக்கல்களும் முக்கியமானவை. இவற்றை உற்றுநோக்கிப் பார்க்கும் போது அரசாங்கம் கால்நடை வைத்தியர்கள் மூலம் செய்யத் தவறிய சேவையை இந்த ஏற்பாட்டின் மூலம் மக்கள் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடிகிறது. கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசி இடல், கால்நடை மருந்துகளைக் குறைந்த விலையில் வழங்குதல், கால்நடை வளர்ப்பிற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கல் என்பன இந்நிலையங்களில் இன்றைய கடமைகளில் சிலவாகும். சேவைகள் இலவசமாகவே வழங்கப்பகின்றது. சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள் குறைந்த விலையில் இங்கே கிடைக்கின்றன. இங்குள்ள பதிவேடுகளில் இருந்து தினமும் பத்திற்கு மேற்பட்ட கால்நடை வளர்ப்போர் தமது தேவைகளை இங்கே பூர்த்தி செய்வதைப் பார்க்கும் போது பெருமைப்பட வேண்டிய ஒன்றாக அமைகின்றது இத்திட்டம். அத்துடன் மாடுகளிற்கு குறி சுட்டு அதன் புள்ளி விபரத்தைத் திரட்டும் முன்மாதிரித் திட்டம் சகல கிராம சேவையாளர் மட்டத்திலும் சிறப்பாக நடைமுறைப்படுத்தப் படுகின்றது. இக்குறிசுடல் திட்டத்தின் மூலம் மாடுகளின் தொகையை மதிப்பிடவும், மாடுகள் களவு போவதைத் தடுப்பதற்கும் மற்றும் பிறமாவட்ட கால்நடைகளை இனங்காணவும் முடிகிறது.

தெங்குச் செய்கையில் முக்கிய இடமொன்றை வகிப்பது முல்லைத்தீவு மாவட்டம். இதன் கரையோரக் கிராமங்களில் பெரியதும் சிறியதுமான நூற்றுக்கணக்கான தென்னந் தோட்டங்கள்பரந்துள்ளன. இத்தோட்டங்களிலிருந்து கிடைக்கும் தேங்காய் மட்டைகள் பெருமளவில் பயன்படுத்தப்படாமல் கடந்த காலங்களில் வீணாகப் போயின. இதே வேளையில் எமது பிரதேசத்தின் தும்பு மற்றும் கயிற்றுத் தேவைகளுக்கான ஏறத்தாழ 80 மில்லியன் ரூபா வேறு பிரதேசங்களுக்குச் செலுத்தப்பட்டது.

இந்நிலையை நீக்குவதற்காக பேராற்றின் கரையில் அமைக்கப்பட்டது ஒரு தும்புத் தொழிற்சாலை. தென்னை உற்பத்தியாகும் இடங்களிலிருந்து மட்டைகள் எடுத்து வரப்பட்டு இங்கு அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் இட்டு ஊறவிட்டு இயந்திரங்களின் உதவியுடன் இங்கு தும்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. எட்டு மணி நேரத்தில் 500 கிலோ தும்பினை இத்தொழிற்சாலை உற்பத்தி செய்கின்றது. இதன் மூலம் 100 தொழிலாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினை வழங்குவதுடன் ஏனைய தும்பு சார் கைத்தொழில்களிற்குத் தேவையான மூலப்பொருட்களை வழங்கும் நிலையமாகவும் இன்று தொழிற்படுகின்றது.

இத் தொழிற்சாலையின் தொடற்சியாக குமுழமுனை, முள்ளியவளை, விசுவமடு ஆகிய இடங்களில் அமைந்துள்ளன கயிறு உற்பத்தி நிலையங்கள், தேரிழுக்கும் கயிறு உற்பத்தி நிலையங்கள். தேரிழுக்கும் கயிறு முதல் வேலி கட்டும் கயிறு வரை தெற்கிலிருந்தே வரவேண்டும் என்ற மாயையை நீக்கி இங்கும் இவற்றை உற்பத்தி செய்யலாம் என்பதற்கு உதாரணமாய் அமைந்தவை இவை. தென்னைப் பயிற்செய்கையாளர்கள், தும்பு உற்பத்தியாளர்கள், கயிறு உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் என ஆரம்பந்தொட்டு இறுதிவரை ஏராளமானோரின் வேலை வாய்ப்பினையும், வருமானத்தினையும் ஏற்படுத்துவது இத் திட்டங்களின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். எமது பிரதேசத்தில் விரயமாகும் தேங்காய் மட்டைகளை வினைத் திறனாக உபயோகிப்பதுவும், பிரதேசக் கயிற்றுத் தேவையைப் பூர்த்தி செய்வதும் இதன் ஒரு நன்மையாகும். மிகக் குறைந்தளவிற்கு உயர் தொழில் நுட்பங்களையும், இயந்திரங்களையும் பயன்படுத்தி மனித வளத்தினை அதிகளவிற்கு பயன்படுத்தும் இவை போன்ற திட்டங்களே இன்றைய காலகட்டத்தின் மிக அவசியமான தேவைகளாகும். இத்தகைய கயிறு திரிக்கும் திட்டங்களில் இன்று பல பெண்கள் வேலை பெற்று பயனடைகின்றார்கள். மாதமொன்றிற்கு பகுதிநேர வேலையாகத் தொழில் செய்து ரூபா 1000 அளவில் வருமானம் பெறுகின்றார்கள்.

போரின் போது நிகழும் குண்டு வீச்சுக்களினால் அழிக்கப்பட்டவற்றுள் கட்டடங்கள் முக்கியமானவை. எனினும் இவற்றைத் திருத்தியமைக்கத் தேவையான கட்டடப் பொருட்கள் பொருளாதாரத்தடை காரணமாக இங்கு கிடைப்பதில்லை. இந்த

தொடர்ச்சி 12 ம் பக்கம்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





மேஜர் அழகன்

# தாயகம் நோக்கிய பயணம்

தங்கள் தாயகத்தை விட்டு அடித்துத் துரத்தப்பட்ட மக்கள் 100க்கு மேற்பட்ட நாடுகளில் குடியேறி இருந்தார்கள். ஆனால் 2000 ஆண்டுகளாக அடுத்த செடார் திருநாளை ஜெருசலேத்தில் கொண்டாடுவோம் என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின்போது பிரார்த்தனையின் இறுதியில் கூறி வந்தார்கள்.

கடந்தநூற்றாண்டில் ரஷ்யா, போலந்து போன்ற நாடுகளிலும், 2ஆம் உலக மகா யுத்தத்தின்போது ஜேர்மனியிலும் யூதப்படுகொலைகள் அதிகளவில் இடம்பெற்றன. அதையடுத்து தாய்நாடு திரும்பும் உத்வேகம் நாடு கடந்த யூதர்களிடையே ஏற்பட்டது. ''தாயகம் நோக்கிய பயணம்'' யூதர்களின் தாரக மந்திரமாகியது.

ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் பயணத்தின்போது தடை முகாம்களில் அடைக்கப்பட்டனர். ஆயிரம் இடர் வந்த போதும் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள் - கொண்ட கொள்கையில் உறுதியாக நின்றார்கள் உலகின் இந்த சிறிய தொகை மனிதர்கள்......

யூத தாயக மீட்புப் போராட்ட வரலாற்றோடு கலந்து விட்ட ஒரு கதை. சமகால யூத வரலாற்றில் சங்கமமாகிவிட்ட லியன் யூறிஸ் அவர்களது எண்ணக் கருவூலமான இந் நுல் 'ஈழநாதம்' வெளியீடாகும். தமிழீழத் தாயகம் நோக்கிய பயணத்தில் வித்தாக விழுந்த மேஜர் அழகன், வெளியீட்டுத் துறைக்கு ஆற்றிய பணிகளில் இந்நூல் வெளியீடும் ஒன்றாகும். மேஜர் அழகனுக்குக் காணிக்கையான இந்நுலை ''களத்தில்'', புலம்பெயர்வாழ் தமிழ் மக்களுக்காக தொடர்ச்சியாக வெளியிடுகின்றது.

## முதலாம் பாகம்

### -அத்தியாயம் ஒன்று-

### சைப்பிரஸ் வரவேற்கிறது.

***-வில்லியம் ஷேக்ஸ்பியர்***

*கார்த்திகை 1946*

விழுந்தெழும்பி ஓடுபாதையில் ஓடிய விமானம் போய் நின்ற இடத்தில் இருந்த அறிவிப்புப் பலகை 'சைப்பிரஸ் வரவேற்கிறது' என்றது. யன்னலுக்குள்ளால் நோக்கிய மார்க் பார்க்கரின் பார்வையில் வடக்குக் கரையோரப் பிராந்தியத்தின் ஐந்து விரல் சிகரம் தூரத்தே தென்பட்டது. இன்னும் ஒரு மணி நேரத்தில் அந்தக் கணவாய்க்கூடாகவே அவன் கைரேனியாவிற்கு வாகனத்தில் செல்ல வேண்டும். விமானத்தின் நடுப்பகுதிக்கு வந்து, தனது உடைகளைச் சீர்செய்து, கோட்டை(மேலங்கி) அணிந்து கொண்டான். 'சைப்பிரஸ் வரவேற்கிறது' என்ற சொற்றொகுதி அவன் தலைக்குள் நிழலாடியது. 'ஒத்தெல்லோ' நாடகத்தில்தான் அத் தொடர் இருக்கிறது என்று அவன் நினைத்தாலும், முழுத்தொடரும் அவனுக்கு ஞாபகம் வரவேயில்லை.

'வெளியிடவேண்டிய பொருள் ஏதாவது உள்ளதா?' சுங்க அதிகாரி கேட்டார்.

"இரண்டு இறாத்தல் ஹெரோயினும், ஆபாசச் சித்திரங்கள் சிலவும்" எனப் பகிடியாகப் பதிலளித்தபடியே அங்குமிங்கும் கிற்றியைத் தேடினான்.

எல்லா அமெரிக்கர்களுமே சிரிப்பூட்டும் திறமையுடைவர்கள்தான் என நினைத்துக்கொண்டே அவனை பரிசோதனையை முடித்து அனுப்பினார் சுங்க அதிகாரி.

அரச வரவேற்புப் பெண்ணொருத்தி அவனை நெருங்கினாள். "மார்க் பார்க்கர் நீங்கள்தானா?"

'நான்தான்.'


"திருமதி கிற்றி பிறமென்ற், இன்றுதான் உங்களை விமானத் தளத்தில் சந்திக்க முடியாதென தொலைபேசியில் கூறினார். கைரேனியாவின் டோம் ஹோட்டலுக்கு நேராகச் செல்லுங்கள். அங்கே உங்களுக்காக அறையொன்றை ஒதுக்கி வைத்திருக்கிறா".

"நன்றி தேவதையே, கைரேனியாவிற்குப் போக ஒரு ரக்சி (TAXI) எங்கே பிடிக்கலாம்?"

"நான் ஒரு கார் ஒழுங்கு செய்கிறேன், கொஞ்ச நேரமெடுக்கும்!"

"இங்கு பானமெதுவும் அருந்தலாமா"?

"ஆம் ஐயா, இந்தச் சாலையின் மறுமுனையில் கோப்பி குடிக்கலாம்". ஆவிபறக்கும் கோப்பியை அருந்தியபடியே கைசையில் சாய்ந்தபடியே "சைப்பிரஸ் வரவேற்கிறது... சைப்பிரஸ் வரவேற்கிறது..."




என்ற வசனத் தொடரை ஞாபகம் செய்ய முயற்சித்தாலும் அவனால் முடியவில்லை.

ஒரு குரல் பெரிதாக முழங்கியது. 'ஏய் உன்னை விமானத்திலேயே நான் அடையாளங் கண்டு கொண்டேன் என நினைத்தேன். நீ மார்க் பார்க்கர்தானே? உனக்கு என்னை ஞாபகம் இல்லை என்று நான் பந்தயம் கட்டுவேன்"

றோம், பரிஸ், லண்டன், மட்றிட் போன்றவற்றில் ஒன்றை வெற்றிடத்தில் நிரப்பி கவனத்தோடு அவ்விட ங்களில்போன, யோஸ் மதுச்சாலை, யேம்ஸ் கடை, ஜாக்விஸ் தங்குமிடம் போன்றவற்றோடும், செய்திச் சேகரிப்பிற்குச் சென்ற போர், புரட்சி, கலகம் போன்றவற்றையும் இணைத்தால் இவன் யாரென்பது புரியும் என பார்க்கர் நினைத்துக் கொண்டான்.

அம் மனிதன் இப்போ மூக்குமுட்டும் தூரத்தில் நின்று மூச்சிரைத்தபடியே உனக்கு மாட்டினி ஒன்றை ஓடர் பண்ணியவன் நான்தான். ஆனால் அன்று அதற்கான கசப்புத் தோடம்பழம் இருக்கவில்லை. இப்போது உனக்கு என்னை ஞாபகம் வந்திருக்குமல்லவா?" என்றான். மார்க் சலித்துக்கொண்டே கோப்பியை உறிஞ்சியபடி அடுத்துவரும் தாக்குதலுக்குத் தயாரானான்.

"உனக்கு இதை எப்போதும் கேட்டுச் சலித்துப் போயிருக்கும். ஆனால் நான் உனது கட்டுரைகளை ரசித்து மகிழ்கிறவன். சரி இப்போது சைப்பிரசில் என்ன வேலை? ஏதாவது ரகசிய வேலையாய் இருக்கும் என்று பந்தயமே கட்டுவேன். நாமிருவரும் ஒரு நாளைக்குக் கூடி மதுவருந்தினால் எப்படி? நான் நிக்கோசியாவில் பலஸில் தங்கியிருக்கிறேன்".

வியாபார அறிமுக அட்டை (Businiess Card) ஒன்றைக் கையில் வைத்தபடியே கண்ணடித்துவிட்டு மேலும் சொன்னான் "எனக்கு இங்கும் சில தொடர்புகள் உண்டு".

"மிஸ்டர் பார்க்கர் உங்களுடைய கார் ஆயத்தமாகிவிட்டது."

"உன்னை மீண்டும் கண்டது பற்றி மிக்க மகிழ்ச்சி" என்று சொல்லிவிட்டு கோப்பையை வைத்துவிட்டு விரைவாக நடந்த பார்க்கர், அந்த அறிமுக அட்டையை போகும் போக்கிலேயே குப்பைக் கூடையொன்றினுள் போட்டுவிட்டுச் சென்றான்.

வாடகைக்கார் விமானத் தளத்துக்கு வெளியே சென்றது. மார்க் பின்னால் வசதியாகச் சாய்ந்து கொண்டே, ஒருகணம் கண்ணை மூடிக்கொண்டான். தன்னைச் சந்திக்க கிற்றி விமான நிலையம் வராததை யிட்டு மகிழ்வே கொண்டான். அவர்கள் இருவரும் சந்தித்து மிகுந்த நாட்களாகி விட்டன.சொல்லவும், ஞாபகப்படு த்திக்கொள்ள வும் நிறைய விடயங்கள் உண்டு. அவ ளைத் திரும்பவும் காணப்போவதை நினைத்ததும், அவனது உடலெங்கும் பரபரப்பு பொங்கி வழிந்தது. அழகிய கிற்றி... என் அழகிய கிற்றி... விமான நிலைய வெளிக்கதவுகளை ரக்சி கடக்கும் போதே நினைவுகளில் மார்க் மூழ்கிவிட்டான்.

கதறின் பிறமென்ற்... அமெரிக்காவின் தேசிய சொத்துக்கள் போன்ற ஹொட்டோக்ஸ் (HOT DOGS), புறூக்லின் டொட்ஜர்ஸ் (Brooklyn Dodgers) போன்றவற்றில் ஒன்று போன்றவள். ஒரு பக்கத்து வீட்டுப் பெண்ணோடு பழகுவது போன்ற உணர்வைத் தரக்கூடியவள். இரட்டைப்பின்னலோடும், முகத்தில் பருக்களோடும், பற்களில் கிளிப்புக்களோடும் இந்த உணர்வைத் தந்தாள். வழமையான நியதியின்படி பல் கிளிப்புக்கள் மறைய, உதடுகளில் உதட்டுச்சாயம் ஏறி, பருவ மாற்றங்களும் நிகழ தாராக் குஞ்சுகள்போல் அலங்கோலமாக இருந்த அவள் வசீகரமான அன்னம்போல் மாறிப்போனாள். அந்த நாட்களில் அவள் எவ்வளவு அழகாயிருந்தாள். புதுப் பொலிவும், சுத்தமும் அவளிடமிருந்தன.

மற்றது... ரொம் பிறமென்ற்... அவன் இன்னொரு அமெரிக்கப் பாரம்பரியம். குட்டையாக வெட்டிய தலைமயிர், சிறுபிள்ளைத்தனமான சிரிப்பு, 100யாரை பத்து செக்கனில் ஓடுவான். கூடைப்பந்தை 30 அடியிலிருந்து கூடைக்குள் போடுவான். கண்களைக் கட்டிக்கொண்டு மாதிரி ஏ ஐ (Model A) இணைத்து முடிப்பான்.

ரொம் பிறமென்ற்–அவன் நினைவுக்கெட்டிய காலத்துள் அவனது மிக நெருங்கிய நண்பனாகத் திகழ்ந்தான்.

ரொம்... கிற்றி, ஐஸ்கிறீமும் அப்பிள் பழமும்போல ஹொட்டோக்கும் (Hot Dog) மஸ்ரட்டும் (Mustard) போல இணைந்து கொண்டனர். ஒரு அமெரிக்கப்பாணிப் பையனும், பெண்ணுமாகத் திகழ்ந்த இவர்கள்

தொடர்ச்சி 15 ம் பக்கம்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# “சூரியக்கதிர்கள் ஈழம் உருவாகுவதற்கான வாய்ப்புக்களை முறியடித்துவிட்டனவா?”

> மக்களை இராணுவ வலையத்தினுள் சிக்க வைப்பதற்கு ஒரு பாரிய இராணுவ நடவடிக்கைக்காக: இராணுவம் தயாராகிவிட்டது என அறிவித்தனர். எந்நேரமும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகலாம் என்பதனைக் விடுதலைப் புலிகள் கோடிட்டுக் காட்டினர்.

சூரியக்கதிர்–2 இராணுவ நடவடிக்கை பல நாட்களாகவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான். சூரியக்கதிர்–1 இன் இலக்கில் தோல்வியினைத் தழுவியதுடன் இன்னொரு இராணுவ நடவடிக்கைக்–

கான தேவையும் எழுந்து விட்டது. முக்கியமாக ஆட்களற்ற சூனியப் பகுதியாகக் கைப்பற்றிய வலிகாமத்தினுள் மக்களைக் கொண்டு வந்து குடியமர்த்தியாக வேண்டுமே! அதற்குத்தான் இந்த இராணுவ நடவடிக்கை தேவைப் பட்டது.

சூரியக்கதிர்–1 இன் மூலம் வலிகாமம் ஆக்கிரமிக்கப்பட்டபோது வெளியேறிய மக்களை அழுத்தம் கொடுத்து, ஆசைகாட்டி, தான் ஆக்கிரமித்த பகுதிக்குள் இழுத்து விடும் முயற்சி தோல்வியினைத் தழுவியதுடன், நேரடி இராணுவ நடவடிக்கையில் இறங்கியது அரசு. 20,000 பேரை களத்தில் இறக்கியது. மக்கள் தலை மீது கொட்டிக் குவிக்கத் தேவையான எறிகணை–களை, குண்டுகளைத் தயாராக்கிக் கொண்டது. இஸ்ரேலிலிருந்து இறக்கிக்கொண்ட கிபிர் குண்டு வீச்சு விமானங்களையும், சீனாவின் எப்–7 சுப்பர் சொனிக் குண்டுவீச்சு விமானங்களையும், இத்தாலிய சியாமாசெட்டி விமானங்களையும் நரவேட்டைக்குத் தயார்படுத்தியது.

இராணுவத்தின் தயார்படுத்தலை முன்கூட்டியே மக்களுக்கு அறிவித்தனர் புலிகள்.

மக்களை இராணுவ வலையத்தினுள் சிக்க வைப்பதற்கு ஒரு பாரிய இராணுவ நடவடிக்கைக்காக இராணுவம் தயாராகிவி -னர் என அறிவித்தனர். எந்நேரமும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகலாம் என்பதனைக் கோடிட்டுக் காட்டினர். இராணுவத்தின் பொறி க்குள் மக்கள் சிக்கும் அபாயத் தினையும், இராணுவத் தாக்கு தல்களால் மக்கள் பெருமளவில் கொல்லப்படும் அபாயத்தினையும் முற்றுணர்ந்து மக்களை வன்னிப் பகுதியினை நோக்கி இடம் பெயருமாறு ஆலோசனை வழங்கினர். அவ்வாறு வெளி யேறுபவர்களுக்கு உதவவும் செய்தனர். வெளியேற முடியாத மக்கள் செறிந்து இருக்காமல் பரந்து இருக்குமாறும் வேண்டிக் கொண்டனர்.

ஒரு மரபு ரீதியான சமரில் சிறிலங்கா இராணுவத்திற்கு வாய்ப்பான நிலைமைகள் உள்ளன. ஆளணி, ஆயுதம், படைக்கல சக்தி என்பவற்றைப் பொறுத்தவரை சிறிலங்கா இராணுவம் மேலோங்கியிருக்கிறது. மரபு ரீதியான சமருக்குரிய இராணுவக் கட்டமைப்புக்களைக் கொண்டிருக்கிறது. சிறிலங்கா இராணுவம் தனது பலத்தையெல்லாம் ஒருங்கு குவித்து கடற்படை, விமானப்படை உதவியுடன் நடாத்தும் சூரியக்கதிர்களை முறியடித்து இராணுவத்தினரை விரட்டியடிக்கக்கூடிய வகையில் ஒரு பாரிய படையணியாகத் தமிழர் படையணி வளர்ச்சியடையாத ஒரு சூழலில் இரண்டு தெரிவுகளே தமிழர் தரப்புக்கு மிஞ்சுகின்றன.

ஒன்றில், சிறிலங்கா அரசு விரும்புவதுபோல மரபுவழி யுத்தத்தில் தனது வளங்களை எல்லாம் கொட்டி, எரியும் நெருப்பில் வீழ்ந்து பொசுங்கிப்போகும் விட்டிற் பூச்சிகளைப் போல, சிறிலங்கா அரசு பொழியும் எறிகணை மழையினுள் பொசுங்கிப் போகவேண்டும் அல்லது சிறிலங்கா இராணுவத்தின் நகர்வுக்கு எதிராக தந்திரோபாய ரீதியாகப் போராடி, எதிரிக்குப் பெருமளவு இழப்பினை ஏற்படுத்துவதுடன், ஒரு குறிப்பிட்ட நிலையில் பின்வாங்க வேண்டும். அவ்வாறு பின்வாங்குவதனூடாக எதிரிக்கு எதிரான தொடர்ச்சியான போராட்டத்திற்குப் பலம் சேர்க்க வேண்டும். இவ்விரு தெரிவுகளில் ஒன்றைத் தெரிவு செய்தாக வேண்டிய ஒரு சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் இரண்டாவது தெரிவினை மேற்கொண்டனர். அவ்வாறான தெரிவினை மேற்கொள்வதுதான் புத்திசாலித்தனமானது என்பதனை நிலைமையினை விளங்கிக் கொள்பவர்கள் எவருமே ஏற்றுக் கொள்வர். இத்தகைய ஒரு நிலைமையே சூரியக்கதிர்–1 இல் ஏற்பட்டது. இது போன்ற நிலைமை சூரியக்கதிர்–2 இலும் இருக்கின்றது.

இதனால் தென்மராட்சிப் பகுதியின் சில பிரதேசங்களை இராணுவம் கைப்பற்றவும் முடிந்திருக்கின்றது. இம்முறை பொதுமக்களில் ஒரு பகுதியினரை தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவர முடிந்திருக்கின்றது. கிளாலிப் பகுதியினையும் இராணுவம் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்து இருக்கின்றது.

இப்போது மக்கள் மனதில் எழக்கூடிய முக்கியமான ஒரு கேள்வி – எதிர்கால நிலைமைகள் என்னவாக இருக்கலாம் என்பது தொடர்பானதே. இக்கேள்வி பல உபகேள்விகளை உண்டாக்கி இருக்கும். இருப்பினும் இவை அனைத்தும் தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டம் எத்தகைய பரிமாணத்தைப் பெற்றுக் கொள்ளும் என்பனைச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும்.



இராணுவத்தின் பிடியினுள் சிக்கிக் கொண்ட மக்கள் வலிகாமம் நோக்கிச் செல்வதாக ரூபவாஹினியில் தொடர்ந்து காட்டிக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. இராணுவத்திடம் சிக்கிக்கொண்ட மக்களில் வலிகாமத்தினைச்

சேர்ந்தவர்களை இராணுவம் வலிகாமத்திற்கு அனுப்புவது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றேதான்.

ஆனால், அரசாங்கத் தொலைக் காட்சியில் காட்டப்படாத பல காட்சிகள் தென்மராட்சி மண்ணில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இராணுவ வலயத்திற்குள் சிக்கிக் கொண்ட மக்கள் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இளைஞர்களை ஆண்கள்,பெண்கள்

எனப் பாகுபடுத்தி முகாம்களினுள் அடைத்து வைத்து சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர் எனவும் தெரியவருகின்றது. இத்தகைய ஒரு சூழலில் “மக்களின் மனங்களை வெல்லல்” எனும் சிறிலங்கா அரசின் தந்திரோபாயம் வெற்றியினைத் தரப் போவதில்லை. அந்நிய இராணுவத்தால் மக்களை தன்வசப்படுத்தல் என்பது சாத்தியப்படப் போவதில்லை. குடாநாட்டில் சில பிரதேசங்களையும், ஒரு பகுதி மக்களையும் கைப்பற்றிய–தனை வெற்றியாகக் கொண்டாட வேண்டியது சந்திரிகா அரசினைப் பொறுத்தவரை ஒரு அரசியல் தேவையாக இருக்கின்றது. விடுதலைப் புலிகளின் நிழல் அரசு இருந்த இடத்தில் அந்த அரசுக் கட்டுமானங்களைத் தகர்த்து விட்டோம் என்ற களிப்பு சிங்கள பேரினவாதிகளுக்கு எழுவது இயல்புதான்.

ஆனால், தாம் எடுத்த இராணுவ நடவடிக்கை தமக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது என்பதனை தமக்குள்ளாவது உணராதவர்களாக அரச தரப்பு இருக்காது. தமக்கு இப்போராட்டம் தரக்கூடிய நெருக்கடிகளை புரிந்து கொண்டவர்களாகவே அவர்கள் இருப்பார்கள். விடுதலைப் புலிகள் பல முனையிலும் நடாத்தும் தாக்குதல்கள் அரசை ஆட்டம் காணச் செய்யும் என்பதனையும் அவர்கள் உணர்ந்தே இருப்பார்கள்.

இருந்தும் ஏன் இவர்கள் இந்த இராணுவப் பாதைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள்? தமிழ்–சிங்கள மக்கள் மத்தியில் தோன்றும் பாரிய இடைவெளிகளை உதாசீனம் செய்துவிட்டு ஏன் கொடூரமான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள்?

இனவாதிகளிடம் இன அழிப்பு என்பதனைத் தவிர வேறென்ன நியாயத்தினை எதிர்பார்க்க முடியும் என்ற எதிர்க் கேள்வி இவ்விடத்தில் எழலாம். அது உண்மைதான் எனினும், “ஈழம் உருவாகாமல் தடுத்தல்” எனும் நியாயப்பாட்டையே மக்கள் தமக்குள் கூறிக்கொள்கின்றனர். ஒரு தடவை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை கூறினார், “ஐக்கிய தேசியக் கட்சியினர் கிழக்கினை முழுக் கட்டுப்பாட்டினுள் வைத்துக் கொண்டு, வன்னி ஊடாகவே யாழ்ப்பாணத்தினைக் கைப்பற்ற வேண்டும் என்கின்றனர். அதுவரை நாம் காத்திருந்தால் ஈழம் உருவாகிவிடும்.” இவரது கூற்று அரசு, தான் சந்திக்கப்போகும் ஆபத்துக்களை உதாசீனம் செய்து யாழ் குடாநாட்டில் செய்யும் இராணுவ நடவடிக்கைக்குக் கூறும் நியாயப்பாட்டினை இக்கூற்றின் மூலம் உணர்ந்து கொள்ளலாம். இவ் இராணுவ நடவடிக்கை மூலம் ஈழம் உருவாவதற்கான வாய்ப்புக்களை அரசு முறியடித்து விட்டதா? நிலைமைகளை உண்மையாக நோக்கின் இல்லை என்பதே இதற்குப் பதிலாக இருக்கும். இன்றைய சர்வதேச நிலைமைகளுக்குள் வைத்துப் பார்க்கும்போது ஈழம் இவ்வாறுதான் உருவாகும் என்பதனைத் திடமாகக் கூறமுடியாவிடின், ஈழம் நிச்சயம் உருவாகக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. ஈழம் உருவாகக் கூடிய வாய்ப்புக்களை இனி நோக்குவோம். இலங்கைத் தீவின் தேசிய இனப் பிரச்சினை இலகுவான அரசியல் தீர்வு காணமுடியாதளவுக்கு தர்க்கபூர்வ வளர்ச்சியினை அடைத்துள்ளது.



இந்தத் தர்க்கபூர்வ வளர்ச்சியின்படி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாதவரை ஒரு அரசியல் தீர்வு சாத்தியப்படப்போவதில்லை. சிங்கள–பௌத்த இனவாதமும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையினை இலகுவில் அங்கீகரிக்கப்போவதில்லை. இதனால் அரசியல் பேச்சுவார்த்தைகள் நடைபெறினும் ஒரு அரசியல் தீர்வுக்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே இருக்கும்.

அப்படியானால் இப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வுதானா வழி? என்ற கேள்வி எழலாம். தமிழரின் சுயநிர்ணய உரிமையினை ஏற்றுக் கொள்ளும் ஒரு தீர்வு வடிவத்திற்கு சிறிலங்கா அரசு முன்வர வேண்டும் அல்லது சிங்கள அரசு முன்வைக்கும் தீர்வினை தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்ளும் நிலை வர வேண்டும். இப்படியான சந்தர்ப்பத்திலேயே ஒரு தீர்வு சாத்தியமாகும். இப்படியான ஒரு இணைவு வருவதற்கு எந்தத் தரப்பு கூடுதலான நெருக்கடிக்கு உள்ளாகுதோ அந்தத் தரப்பே இறுதியில் விட்டுக் கொடுக்க வேண்டிவரும். எனவே, இங்கு முக்கியம் பெறுவது என்னவெனில், சிறிலங்கா அரச தரப்பு தரும் இராணுவ அழுத்தங்கள் ஊடாக, சிங்கள இனவாதம் முன்வைக்கும் தீர்வினை தமிழ் தேசிய வாதம் ஏற்றுக்கொள்ளுமா என்பதே. இதற்குத் தெளிவான பதில் இல்லையெனில், இராணுவ அழுத்தங்கள் ஊடாக ஒரு அரைகுறைத் தீர்வினைத் திணித்துவிட முடியாது என்பதனை நாம் உறுதிப்படுத்த வேண்டும். இதற்கு எமது போராட்டம் தாழ் முனைப்பு இல்லாததாக இருக்க வேண்டும். ஆனால், சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைகளின் பின் தோன்றியுள்ள நிலைமைகள் போராட்டத்தினை உயர் முனைப்புடன் கொண்டு செல்லும் நிலையினை வெளிப்படுத்துகின்றன. அதுவும் சிங்கள அரசுக்கு அதிக அழுத்தங்கள் ஏற்படக்கூடிய முனைகளிலே போராட்டம் முனைப்புப் பெறும். இதனால் இராணுவ அழுத்தங்கள் மூலம் அரைகுறைத் தீர்வினைத்திணிக்கும் முயற்சி வெற்றியினைத் தரப் போவதில்லை.

அதேநேரம் ஒரு அரைகுறைத் தீர்வினைத் தமிழர் தரப்பு ஏற்றுக் கொள்ளாமல் விடுவதற்கான அரசியல் நியாயம் சர்வதேச அரங்கில் உருவாக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையினை அங்கீகரிக்கும் தீர்வுதான் நியாயமான தீர்வாக இருக்கும் என்பதனை உலக அரங்கில் நிலைநிறுத்த வேண்டும். இதற்கான வேலைகள் சர்வதேச முனையில் முடுக்கிவிடப்பட வேண்டும்.

இப்போது ஈழம் உருவாகக்கூடிய நிலைமைகளை இன்னும் நெருங்கிடச் செய்வோம். உள்நாட்டில் அரைகுறைத் தீர்வினைத் திணிக்க முடியாத நிலை உருவாக்கப்படல், சர்வதேச அரங்கிலும், தென்னிலங்கையிலும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான ஆதாரத தளம் கட்டியெழுப்பப்படல், தமிழர் படைபலம் அதிகரிக்கப்படல், சிறிலங்கா அரசு தாக்குப்பிடிக்கமுடியாத அளவுக்கு இராணுவ பொருளாதரா முனைகளில் அழுத்தங்கள் கொடுக்கப்படல். இப்படியான நிகழ்வுகளின் இலங்கியல் போக்கு சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்கும் ஒரு தீர்வுத் திட்டத்தினை சிறிலங்கா அரசு ஏற்றுக்கொள்ள வைக்கும்.

இப்படியான தீர்வுத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்படும்போது உடனடியாக நாடு பிரிவது சாத்தியமில்லாது இருக்கலாம். ஆனால் மக்கள் விரும்பின் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு மூலமாகத் தமது சுயநிர்ணய உரிமைகளையும் பிரயோகித்து பிரிந்து செல்லக்கூடிய நிலை வரலாம். அவ்வாறு பிரிவதற்குரிய நியாயமான காரணங்கள் சர்வதேச அரங்கில் முன்வைக்கப்பட வேண்டிவரும். இப்படியான ஒரு சூழலில், தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையினைப் பிரயோகிக்கும்போது சிறிலங்கா அதனை மறுதலித்தால், அதனை எதிர்த்துப்போராட தமிழர் படையணியும் தயாராக இருக்க வேண்டும். இத்தகைய ஒரு போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரமும் இருக்கும்–அதனால் வெற்றியும் இலகுவாகும். ஈழமும் மலர்ந்துவிடும்.


இங்கு மிகச் சிக்கலான வரலாற்று நகர்வினை இலகுவாக எடுத்துக் கூறினும் தமிழீழம் அமையும் வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன என்பதனை எடுத்தியம்பவே இப்போக்கு குறிப்பிடப்படுகின்றது. ஆனால் இதுதான் தமிழீழம் அமையப்போகும் வரலாற்றுப் போக்கென்றில்லை. சிங்கள இனவாதம் ஒரு அரைகுறைத் தீர்வினைத் திணித்துவிடாதவாறு போராட்டத்தினை உயிர்த்துடிப்புடன் வைத்துக்கொண்டு, சுயநிர்ணய உரிமைக்கான சர்வதேச ஆதரவுத் தளத்தினைத் திரட்டிச் சென்றால் இறுதியில் எமது இலட்சியம் வெல்லும்.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைகள் தமிழர் ஆட்சி நடந்த பிரதேசங்களில், சிங்கள ஆக்கிரமிப்புக்கு வழிகோலினாலும், தமிழீழத்திற்கான வரலாற்றுப் பயணத்திற்கு, தமிழ்–சிங்கள மக்கள் மத்தியில் பாரிய இடைவெளியினை ஏற்படுத்தியதன் மூலம் பெரும் துணை நிற்கவே செய்கின்றன! ■

–திலீபன்–

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# வித்துக்கள்

பக்கத்தில் இருந்த சசிகலாவும் இறந்துபோனாள். மரியபுஸ்பத்தின் மகன் துஸ்யந்தன், தலையிலும் கண்களிலும் காயம்பட்டு மயங்கிக் கிடந்தான். எல்லாரும் இறந்தவர்களைப் பார்த்து அழுதனரே ஒழிய, உயிருடன் கிடந்த அஸ்விக்காவைக் கவனிக்கவில்லை. "என்னைத் தூக்கி விடுங்கோ" என்று அவள் அழுத பின்னர்தான், அவளும் உயிருடன் இருப்பதைக் கண்டு, சசிகலாவின் அம்மா தூக்கி நிறுத்தினார். அஸ்விக்காவுக்கும் உடலெங்கும் காயம்.

மரியபுஸ்பத்தின் வீட்டுக்கு நேர் எதிர் வீடும், ஜெயராணியின் வீடும் குண்டு வீச்சினால் நொருங்குண்டு குவிந்து கிடந்தன. ஜெயராணியின் வீட்டு முற்றத்தில் இருந்த புளியடியில் நின்ற டுசித்தாவும் கொலை செய்யப்பட்டாள். "இனிக் கடைசி வரைக்கும் தேத்தண்ணி கொண்டு வந்து தரமாட்டன்" என்று பேரனுக்கு கூறிவந்த பிருந்தினி முற்றத்தில் நின்றவள், அவள் எங்கே என்று தேடும் அளவுக்கு உடல் சிதறி – உருக்குலைந்து வளவெங்கும் விதைக்கப்பட்டுவிட்டாள். அவள் சொன்னபடியே இனித் தேநீர் கொண்டுவந்து கொடுக்கமாட்டாள்! (இவரை நாம் பின்னர் சந்தித்தபோது, இந்தச் சம்பவத்தைக் கூறிக் குழந்தைபோல் அழுதார். ஒரு மாதத்தின் பின்னர், ஜெயராணியின் வளவைக் கூட்டிக் கொண்டிருந்தபோது, தேநீர் கொண்டு வந்து கொடுத்த அந்தப் பிஞ்சுவிரல்களை எலும்புகளாகக் கண்டு சுயநினைவிழந்து விழுந்ததாகக்கேள்விப்பட்டோம்.)

பசித்துக் களைத்து வந்தவர்களுக்காக அன்று பகல் முழுவதும் ஓடி ஓடி உணவுப் பார்சல்களைச் சேகரித்ததில் 150 இற்கும் மேலாகப் பார்சல்களைச் சேகரித்துச் சாதனை செய்த யூட் மோகனதாஸ் என்ற இளைஞனும், குண்டுவீச்சுக்கு இலக்காகி உயிர் துறந்தான்.

இடம்பெயர்ந்து வருவோர் பாவனைக்காக மலகூடக் குழி வெட்டுவதில் அன்று முழுவதும் அயராது உழைத்த பப்பி என்ற அந்த இளைஞன், தன் இரு கால்களையுமே இழந்து முடமாக்கப்பட்டான்.

இவர்கள் தவிர, முருகானந்தா சனசமூக நிலையத்தைச் சேர்ந்த சுஜீபா, உதயராசாஈ நடேஸ்வரன், கிருஸ்ணரூபன், கேதீஸ்வரன் –

சென். பீற்றர்ஸ் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த ஜீவதாஸ், வை.எம்.சி.ஏ. உறுப்பினரான இந்திரகுமார் ஆகியோரையும் நவாலி இழந்தது.

∴ ∴ ∴ ∴

மறுநாள்,

கமலநாதனின் மனைவி சாவித்திரி, சகோதரி கமலாதேவி ஆகியோரின் தகனக்கிரியைக்கான ஆயத்தங்கள் துண்டி மயானத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. சவச்சாலையில் இருந்து உடல்கள் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை; இன்னும் நேரமாகலாம் போல இருந்தது.

உடல்களுக்குரிய உரிமைக்காரர்கள் கமலநாதனும் கணேசலிங்கமும் நிற்கிறார்கள்தானே என்ற நினைவிலும், இரண்டு கண்களும் தெரியாத நிலையில் முருகமூர்த்தி கோவிலில் விடப்பட்டு வந்த அவர்களது அக்காள் ராசசிரோன்மணியைக் கண்டு அவருக்கு உணவு ஏதாவது ஆக்கிக் கொடுப்போம் என்ற எண்ணத்திலும், ஜெயசிங்கம் மாஸ்ரர் தனது மூத்த மகன் அரவிந்தனையும் அழைத்துக்கொண்டு, ஆளுக்கொரு 'சைக்கிளில்' அன்று காலை நவாலிக்கு வந்தார்.

நவாலி வீட்டுக்கு வந்ததும் அரவிந்தனை அவர் மீண்டும் அனுப்பிவிட்டு, அக்காளுக்கு வேண்டிய சாப்பாட்டுக்கான சமையல் வேலையில் இறங்கினார். ஜெயசிங்கம் மாஸ்ரர் வீட்டின் சூழலே மிக அமைதியாக இருந்தது. அயல் வீடுகளில் யாருமே இருக்கவில்லை. அனைவரும் குடியெழும்பி, இடம்பெயர்ந்து போயிருந்தனர். நேற்றைய குண்டுவீச்சும், இரவு முழுவதும் தொடர்ந்து எறிகணைத் தாக்குதல்களும், அந்தப் பகுதியைச் சூனியப் பிரதேசமாக்கிவிட்டிருந்தன.

அன்று பகலும் 'புக்காரா' விமானம் நவாலிப் பகுதியில் குண்டு வீச்சுக்களை நடாத்தியது. அந்தப் பகுதிகளில் யாருமே இல்லாதபடியால், யார் யார் வீடுகள் அழிக்கப்பட்டன என்பது யாருக்கும் தெரியாது.

அன்று பகல் முழுவதும் ஜெயசிங்கம் மாஸ்ரர் 'வேம்பஸ்தானுக்கு' வரவில்லை. நவாலியில் இருந்து மாஸ்ரர் நேர டியாகக் கொழும்பு த்துறைக்குப் போயிரு க்கக் கூடும் என்று அவர் துணைவியார் பொற்கொடி ரீச்சரும்' பிள்ளைகளும் நம்பிக் கொண்டிருந்தனர். ஏனெனில் துண்டி மயானத்தில்தான் கமலா தேவி, சாவித்திரி ஆகியோரின் தகன க்கிரிகைகள் நடை பெற்றன. ஆனால் அந்த நிகழ்வுகளில்கூட மாஸ்ரர் கலந்து கொள்ளவில்லை என்பது பின்னர் தெரிந்தது.

அவரது மனைவி பிள்ளை களுக்கு மனதிலே ஒருவித கலக்கம். அன்று மாலை, அரவிந்தன் நவாலிக்கு தங்கள் வீட்டுக்குச் சென்றான்.......

அவ்வேளை பொழுது மங்கி இருள் பரவத் தொடங்கிக் கொண்டிருந்தது. தனது வீடிருக்கும் இடத்திற்கு வந்த அவனுக்குப் பேராச்சரியம் காத்திருந்தது. வீடு இடித்துத் தள்ளப்பட்டிருந்தது. அந்த 'மைமல்' பொழுதில் தான் வாழ்ந்த வீட்டைப் பார்ப்பதற்குப் பயமாக இருந்தது. உள்ளே எடுத்து அடி வைக்கவும் தயக்கமாக இருந்தது. என்னவாக இருந்தாலும் சிறுவன் தானே.......! யாழ்ப்பாணம் திரும்பி தாய்க்கும் சகோதரிகளுக்கும் வீட்டின் நிலைமை பற்றிக் கூறினான். அப்பா எங்கே? அவருக்கு என்ன நடந்தது?

முதல் நாள் குண்டு வீச்சால் தகர்க்கப்பட்ட இடிபாடுகளுக்கிடையே எத்தனை உடல்கள் நசுங்கிக் கிடந்தன என்பது அவர்கள் அறியாததல்ல. அப்படி எண்ணிப் பார்க்கவே பயமாக இருந்தது. அப்படித் தாம் நினைப்பதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவும் முடியாமல் இருந்தது.



இரவுப்பொழுது இத்தகைய சிந்தனைகளோடேயே அங்கிருந்த ஐந்து ஜீவன்களுக்கும் கழிந்தது. அப்படி ஏதும் நடந்திருக்காது, நடக்கவும் கூடாது என்று தத்தமது மனதுகளை ஆறுதல்படுத்திக் கொண்டனர்.

மறுநாள் காலை அரவிந்தன் நவாலிக்குப் புறப்பட்டுப் போனான். வீட்டிலே உள்ள ஒரே ஆண்பிள்ளை அவன் தானே! இந்த நேரத்தில் உதவக்கூடிய சிறிய தந்தை, மாமா இருவருமே மனைவியரைப் பறிகொடுத்த துயரத்தில் இருக்கும்போது, அவர்களைச் சிரமப்படுத்த விரும்பவில்லை. அல்லாமலும் அவர்கள் கொழும்புத்துறையில் இருந்தனர். எனவே, அரவிந்தன் தனித்தே அங்கு சென்றான்.......தன் வீட்டை அடைந்தான்.....வீடு!

நேற்று மாலை கண்ட அதே கோலத்தில் பயங்கரமாகக் கிடந்தது.......இடிபாடுகளுக்கிடையே அப்பாவினுடைய 'சைக்கிள்' நசுங்கிக் கிடந்தது........ஆனால் அப்பாவைக் காணவில்லை. அப்பா எங்கே....?

வீட்டின் பின்புறமாகக் காகம் கலைவதும் கரைந்து கரைந்து எதையோ கொத்தித் தின்பதுமாக இருந்தது.....அரவிந்தனுக்குச் சந்தேகம். எழவே இடுபாடுகளைக் கடந்து..... வீட்டின் பின்புறத்தை அடைந்த போது அங்கே....!

அவனடைய அப்பா கிடந்தார்.....அது அப்பா தானா என்று கண்டுபிடிக்க சில நிமிடங்கள் எடுத்தன. நேற்றுக்காலை தானே கூடவந்து இதே வீட்டில் விட்டுச் சென்றபோது தனக்கு விடைகொடுத்து வழி அனுப்பி வைத்த அந்த அப்பா தானா அது? அவனால் நம்பவே முடியவில்லை. கண்கொண்டு பார்க்கவும் முடியவில்லை.

அப்பாவின் ஒரு கை எங்கே? அவர் வயிறு பிளந்து கடல் வெளியே பிதுங்கிச் சிதறிக் கிடந்தது. எத்தனையோ மாணவர்களுக்குத் தன் அறிவைப் பகிர்ந்து கொடுத்த அந்த ஆசிரியன், தெய்வமான நிலையில் அவர் உடலைக் காகங்கள் பகிர்ந்து கொண்டிருந்தன.

இத்தகைய இக்கட்டான நிலையில், சாதாரண மனிதனுக்கும் எதிர்பாராத அளவு மனத்திடமும் துணிவும் ஏற்பட்டு விடுவதுண்டு. அப்படியான துணிவுதான் அரவிந்தனுக்கு ஏற்பட்டது. அப்பாவின் பிணத்தை என்ன செய்வது என்று ஒரு முடிவுக்கு அவன் வந்துவிட்டான்.

வீடு பார்க்க வந்த அயல் வீட்டுக்காரர்கள் ஒன்றிரண்டு பேரிடம் சென்று, விசயத்தை அறிவித்தான். அவர்களில் ஒருவர் மன்னாரின் முன்னாள் அரச அதிபரான திரு. அ. கி. செபநாயகம்.

அவர்களின் ஆலோசனைப்படி, நவாலியில் சற்றுத் தொலைவில் நின்ற காவல் துறையினருக்கு அறிவித்தான். அவர்களும் அவனை "என்ன செய்யப் போகின்றாய்?" என்றுதான் கேட்டனர்.

அரவிந்தன் நினைத்திருந்தால் அயல் வீட்டுக்காரரைக் காவலுக்கு நிறுத்திவிட்டு, யாழ்ப்பாணத்திலுள்ள தாய் சகோதரிகளுக்கு தான் சென்று அறிவித்திருக்கலாம். அல்லது தான் நின்றுகொண்டு அவர்கள்மூலம் தகவல் கொடுத்திருக்கலாம்; அல்லது ஏதோ ஒரு விதத்தில் உடலையாவது யாழ்ப்பாணம் கொண்டு போய்ச் சேர்த்திருக்கலாம். ஆனால், அவன் அப்படி எதுவுமே செய்யவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காவல்துறையினரிடம் மண்ணெய் கேட்டு வாங்கிக் கொண்டான். என்று அடித்தது போக எஞ்சிய கழிவுகளும் பதர்களும் போதிய அளவு அங்கு இருந்தன. அவற்றைப் பரப்பி, அதன் மீது தந்தையின் உடலை வளர்த்தினான். நொறுங்கி வீழ்ந்ததில் முறிந்து கிடந்த வீட்டின் கைமரங்கள், சலாகைகளைப் பிணத்தின் மீது விறகாக அடுக்கினான். அவற்றின் மேலே மண்ணெய்யை ஊற்றி தந்தைக்குத் தீ மூட்டினான்.

ஜெயசிங்கம் ஆசிரியர் சமயத்தால் இந்து. மணம் முடித்த பொற்கொடி ரீச்சர் கிறீஸ்தவம். மதம் கடந்து மனம் இணைந்த காதல் தம்பதியர் அவர்கள். தான் இறந்தால் தனக்கு கொள்ளி வைக்க ஆண்பிள்ளை வேண்டும் என்பதற்காகவே, அரவிந்தனுக்கு "ஞானஸ்நானம்" கொடுக்காமல் வளர்த்து வந்தார். அவருடைய அந்த இறுதி ஆசையை அரவிந்தன் அப்பொழுது நிறைவேற்றி வைத்துவிட்டான்.

தந்தைக்குச் செய்யவேண்டிய கடமைகளை முடித்துவிட்டு வந்தே, நடந்ததைத் தாய், சகோதரிகளுக்குச் சொன்னான்.

"இருபத்தைந்து வருடம் அப்பாவோடு வாழ்ந்த எனக்கு அவருடைய உடலைத் தானும் பார்க்க விடாமல் செய்துவிட்டாயே!" என்று தாயார் அழுதாள், சகோதரிகளும் அதையே சொல்லி அழுதனர். ஆனால் தான் எடுத்து நிறைவேற்றிய முடிவு நியாயமானது என்பதில் அவனுக்கு அசையாத நம்பிக்கை.

"நான் எங்கடை அப்பாவைக் கண்ட அந்த அலங்கோலத்தில நீங்கள் யாரும் அவரைக் காணக்கூடாது என்று தான், நான் அப்படிச் செய்திட்டன். என்ர சீவியத்தில் அப்பாவின் அந்தக்




# வீழ்ந்தன

கடைசிப் பயங்கரப் கோலத்தை என்னால மறக்க முடியாது - ஆனால் நீங்கள் அப்பாவை எப்பவும் கண்ட மாதிரி அழகான தோற்றத்திலேயே நினைச்சுக்கொண்டிருக்க வேண்டும்" என்பது அவனது வாதம்.

ஓகஸ்ற்றில் ஏ.எல் பரீட்சை எடுக்கப்போகும் மாணவன் அவன். அதற்கு முன், அவனுக்கு வாழ்க்கையில் இப்படியொரு சோதனை! இந்தச் சோதனைக்குப் பின்னும் பரீட்சை எழுதுவது என்ற முடிவுக்கு அவன் வந்திருந்தான்.

இந்தக் குழப்பமான நிலையில் உயர்தரப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதா அல்லது வடக்கு கிழக்கில் மட்டும் பரீட்சையை பிற்போடும்படி அரசைக் கோருவதா என்று கல்வித்திணைக்களத்தில் ஆராயப்பட்ட போது -

"தகப்பனுக்கு இப்படி ஒரு நிலையில் கொள்ளிவைத்து விட்ட மனநிலையிலும் - மனம் சோராது - பரீட்சை எழுதுவதற்கு துணிந்து நிற்கும் அரவிந்தன் போன்றவர்களுக்காக என்றாலும், பரீட்சையை ஒத்திப் போடாமல்- குறிப்பிட்ட நாளில் ஏனைய மாவட்டங்களில் நடாத்துவது போல் - நடாத்தியே ஆக வேண்டும்" என்று அங்கு ஒலித்த குரலுக்கு மறுப்பு எதுவும் எழவில்லை.

அன்று ஜெயக்குமார் வீட்டை விட்டுக் கிளம்பும் போது கே.ஆர்.டேவிட் மிகவும் குழம்பி இருந்தார். எனக்குக் குழப்பம் ஏற்படாமல் இருப்பதற்காக அவரை அழைத்துக்கொண்டு வந்த நான், அவருக்கு உறுதியளிக்க வேண்டியிருந்தது.

"இல்லை நாவண்ணன்....இது என்ன வாழ்க்கை என்று எனக்கு வெறுப்பாயிருக்கு. இனியும் தொடர்ந்து இந்தச் சம்பவங்களை என்னால கேட்க முடியாமல் இருக்குது....இனி நான் உங்களோடை வரஇல்லை."

"என்ன ஐயா? என்னிலும் எவ்வளவோ அனுபவசாலியான நீங்களே இப்படிச் சொல்லுறீங்கள்! எனக்குத் தகவல் திரட்டுவதற்கு நீங்கள் உதவி செய்கிறீர்களோ என்னவோ.....இந்த அனுபவங்களெல்லாம் இலேசாகக் கிடைக்காது. உங்களுக்கு எதிர்காலத்தில் எவ்வளவு பயன்படப்போகுது. பேசாமல் வாருங்கோ, இன்னும் இரண்டு நாள் மட்டும்...அதுக்குள்ள எங்களுக்கு வேண்டிய தகவல்களை திரட்டி விடலாம்" என்றேன் நான்.

நவாலியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியரும், முதுபெரும் எழுத்தாளருமான அப்பச்சி மகாலிங்கம் அவர்களைத் தேடிச் செல்கின்றோம்.

பாவலன் பா. சத்தியசீலன், 'டொக்ரர்' சிவனடியான், ஆகியோரது நூல் வெளியீட்டு விழாக்களில் சந்தித்த அறிமுகம் ஏற்கனவே உண்டு. அவரிடம் நாம் வந்த நோக்கத்தைக் கூறினோம்.

எமது முயற்சியை வரவேற்ற அவர், தனக்கேயுரிய அமைதியான குரலில் கூறினார், "எங்கு பிரச்சினை நடந்தாலும் நவாலி தான் பாதுகாப்பான இடம் என்று மக்கள் முந்தி இங்கே வருவார்கள். இப்போ நவாலி ஆட்களே இங்கே இருக்கப் பயந்து குடியெழும்பிற நிலைமை."

நவாலியில் இது வரையில் மற்றவர்கள் முக்கியத்துவம் தந்து கூறியிராத மனிதரான நவாலி குருமுருகன் ஆலய பூசகர் சிவமுனி அடிகள் என அழைக்கப்படும் சரவணமுத்து சிவராசா என்பவரைப் பற்றி, அப்பச்சி மகாலிங்கம் கூறத் தொடங்கினார்...

"ஜெயக்குமார் ஆசிரியரின் வீட்டிற்கு நேர் எதிரே வீதிக்கு மறுகரையில் இருக்கும் குருமுருகன் ஆலயம், முருகன் அம்மா என்று அழைக்கப்படும் பெண்மணியால், 1956 இல் அமைக்கப்பட்டது. அரச நில அளவையாளராக இருந்த சரவணமுத்து சிவராசாவுக்கு ஏற்பட்ட நோயின் பொருட்டு அவர் நவாலி குருமுருகன் ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்டு, குருமுருகன் அம்மாவால் குணமாக்கப்பட்டார். பின்னர் அவர் குருமுருகன் அம்மாவின் பிரதம சீடனாக மாறி, அவ் ஆலயத்தில் பூசகராகவும் மாறினார்.

1982 இல் முருகனம்மா சமாதியான பின்னர், குருவழியில் ஆலயப் பொறுப்பையேற்றுத் தொண்டாற்றி வந்தார்.

அவர் பிரமச்சாரி. ஆலயத் தொண்டையே வாழ்வாக ஏற்றவர். கொத்துக்கட்டியில் அவரால் 1964இல் செல்லப்பிள்ளையார் ஆலயம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. அவர் சிறந்த புலவரும் கூட. அதன் காரணத்தால் திருமுருகன், செல்லப்பிள்ளையார் மீது பக்திப் பாடல்கள், பஜனைப் பாடல்கள் பல பாடி, அவற்றை நூல் வடிவாக்கினார். அவற்றில் சில 'செல்லப்பிள்ளையார்', 'பாமாலை', 'அருட்பாங்கு முறையும் அருளுரையும் பாக்களும்', 'மெய்ஞானத்தேன்' என்பனவாகும்.

இறுதி நாட்களில், பக்திப் பாடல்கள் தவிர இனஉணர்வு மிக்க பாடல்களையும் எழுதத் தொடங்கினார்.

சிவமுனி அடிகளைப் பற்றி கூறிவந்த அப்பச்சி மகாலிங்கம் அவர்கள், "பாவம் சிவமுனி. குருமுருகன் கோவிலில் 1982இல் தன்னுடைய குருமுருகன் அம்மாவை சமாதி வைத்ததுபோல, பிற்காலத்தில் தன்னுடைய உடலும் செல்லப்பிள்ளையார் கோவிலில் சமாதி வைக்கப்படவேண்டும் என விரும்பினார். ஆனால் அந்த ஆசை நிறைவேறவில்லை. ஏனெனில் குண்டுவீச்சினால் குருமுருகன் ஆலயம் தாக்குண்டபோது ஆலயக் கிணற்றடியில் நின்ற சிவமுனி நெஞ்சில் காயமேற்பட்டு, அந்த இடத்திலேயே கொலை செய்யப்பட்டார். அன்று ஊரே சீர்குலைந்து-மக்கள் இடம்பெயர்ந்தும், மரணமடைந்தும், காயமுற்றும் இருந்தபடியால் அவரது உடல் யாராலும் உரிமை கோரப்படாமல் நலன்புரிச் சங்கத்தால் எரிக்கப்பட்டுவிட்டது. அவரது நினைவிற்காக செல்லப்பிள்ளையார் ஆலயத்தில் நினைவுக்கல் நாட்டும் ஆயத்தங்கள் நடக்கிறது." என்று கூறி சிவமுனி இறப்பதற்கு ஒரு வாரத்தின் முன்னால் அவரால் வெளியிடப்பட்ட 'மெய்ஞானத்தேன்' நூலின் பிரதியொன்றைக் கையளித்தார். முழுக்க முழுக்க பக்திப் பாடல்கள் அடங்கிய நூல். அதன் 45ஆம் பக்கத்தைப் புரட்டியபோது மாயவர் பேரில் பாடப்பட்ட அந்தப் பஜனைப்பாடல் சிவமுனியின் சமகால உணர்வை வெளிப்படுத்துவதாக இருந்தது.

மாட்டை மேய்க்கும் மாயா -
எங்கள்
பாட்டைக் கேட்கிறாயா?
நாட்டைக் காக்க நாங்கள் - படும்
பாட்டைப் பார்க்கிறாயா?
கோட்டை மீட்டுத் தந்தாய் -
தமிழ்க்
கொடியை யேற்றி வைத்தாய்
கொடுமை நடக்கு தின்றும் - நாம்
அடிமையாமோ என்றும்.
ஆலயங்கள் தோறும் - எங்கும்
அன்பும் அறமும் ஓங்கும்

தொடரும்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறுகதை

# செய் நன்றி

- பரந்தனூரான். தமிழீழம்

மூன்று நாட்களுக்கு மேலாகத் தொடர்ந்து சினந்து சீறிக் கொண்டிருந்த மழை, இடையில் ஒரு வாரமாக ஓய்ந்திருந்து விட்டு மீண்டும் பெய்யத் தொடங்கியிருந்தது.

விறாந்தையில் போடப்பட்டிருந்த சாய்மனைக் கதிரையில் அமர்ந்து கொண்டு, பொழியும் மழையைப் பார்த்துக் கொண்டிருந்த முருகேசருக்கு மனதில் இனந்தெரியாத ஒரு அந்தரம்.......

ஒரு வாரத்துக்கு முன்னான மழை நேரத்தில் ஏற்பட்ட காய்ச்சல் கூட குணமாகி, வந்த சுவடே இல்லாமல் பழைய நிலையில் அவர் இருந்தாலும் 'வண்டரிக்கின்ற மாம்பழம்' போல மனதுள் அச்சம்பவம் ஒரு நெருடலை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

"சீ.....அவனுக்கு நன்றி எண்டு ஒரு சொல் சொல்லாமல் விட்டிட்டன்...... எவ்வளவு கஸ்ரப்பட்டிருப்பான்?" மனதினுள் பொருமிக் கொண்டார். அவர் யார் என்ன உதவி செய்தாலும் 'பெரிய உபகாரம்' என்றோ 'நன்றி' என்றோ தன் திருப்தி உணர்ச்சியை வெளிப்படுத்தும் வார்த்தைகளைச் சொல்லாமல் விடுவதில்லை.

ஆனால் அன்று அவன் முகமே தெரியாத புதியவன் ஒருவன் செய்த உதவிக்கு அவர் நன்றி என்ற ஒரு வார்த்தை சொல்ல முடியாத நிலையில் இருந்துவிட்டார்.

அது அவர் மனதை உறுத்திக் கொண்டேயிருந்தது.

திடீரென படலையை படாரென அறைந்து சாத்தியபடி மகன் வீட்டிற்குப் போயிருந்த அவரின் மனைவி மழையில் நனைந்து கொண்டு ஓடி வந்து, விறாந்தையில் தாவினாள்.

"இஞ்சாருங்கோ! உங்கடை 'பென்சன்' காசு எப்ப வரப்போகுது?" எனக் கொடியில் கிடந்த துவாயை எடுத்துத் தலையை துவட்டியபடி கேட்டாள். ஆனால், அவரோ அதைக் கிரகிக்கும் நிலையில் இல்லை. மெல்ல மெல்ல அந்தச் சம்பவ நினைவுகளில்.......

**''தம்பி! 'சைக்கிளில்' ஏறும். நீர் போற இடத்துக்கு கொண்டு போய் விடுறன்'' என்று சொல்ல வேண்டும் என்ற துடிப்பு அவருள் எழுந்தது. அவன் போகும் பாதையில் செல்வதற்கு ஒரு மகனைக் கூட தன்னால் உருவாக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் எழுந்து அவரை முதல் முதலாக நாண வைத்தது.**

மூன்று நாட்களாகப் பொழிந்த மழை ஓய்ந்தது போலவே முருகேசரைப் பற்றிப் பிடித்திருந்த காய்ச்சலும் ஓய்ந்து போனாலும் மழையின் சுவடுகள் புவியில் ஊறிக்கிடப்பதைப் போல அவரின் உடலிலும் பலவீனம் குடி கொண்டிருந்தது.

தொடர்ந்து மூன்று நாட்களும் வீட்டினுள் அடைந்து கிடந்த அவருக்கு வெளியே எங்காயினும் போய் வரவேண்டும் போலிருந்தது.

விறாந்தையை விட்டு முற்றத்துக்கு இறங்கினார். கரு முகில்கள் அற்று வானம் நிர்மலமாய் இருந்தது. சூரியன் மேற்கு நோக்கிய திசையில் சிரித்துக் கொண்டிருந்தான். அடைமழையினால் நிலம் புளித்துப் பொங்கிப் போய் கிடந்தது.

அவர் வெளியில் போவதைக் கண்ட மனைவி 'விறுவிறெ'ன விறாந்தைக்கு வந்தாள்.

"நான் உங 'கால பிள்ளையார் கோயிலடி தில்லை முத்து வீட்ட போட்டு வாறன்".

"இப்ப தான் காய்ச்சல் மாறியிருக்குது. ஈரத்துக்க அவசரமே?"

"எடி விசரி காய்ச்சல் வந்து எனக்கு என்னத்த பண்ணிப் போடும்? நான் பழங்காலத்து பினாட்டும் புழுக்கொடியலும் சாப்பிட்ட ஆள், தெரிஞ்சா சரி"

"உங்க அக்கராயன் குளம் கலிங்கு (வான்) பாயுதாம், றோட் எல்லாத்தையும் தண்ணி மூடி நிக்குது"

"தண்ணி மூடி நிண்டால் போறதுக்கு ஏதாவது வழி செய்திருப்பாங்கள், குண்டு மழையுக்க குளிச்சு, கண்ணி வெடியுக்க நடந்து போற தமிழர்" வீறாப்பு பேசி விட்டு படலையைத் திறந்து கொண்டு வீதியில் ஏறினார்.

நீண்ட காலமாக 'தார்' இடப்படாத வீதியில் கற்கள் பெயர்ந்து சிதறிக் கிடந்தன. கால்கள், கற்களினால் சித்திரவதைப்படுவதிலிருந்து விலத்தி, விலத்தி நடந்து சமாதானபுரப் பகுதியை அண்மித்து பார்வையை குடியிருப்புப் பக்கமாக வீசினார்.

வான் பாய்ந்த நீர் குடியிருப்புக்களுக்குள் புகுந்திருந்தது. மக்கள் எவருமில்லை. எங்காயினும் குடிபெயர்ந்து போயிருக்க வேண்டும். அப்பிரதேசம் முழுவதுமே ஒரே வெள்ளக் காடாகக் கிடந்தது.

இது ஒவ்வொரு ஆண்டும் மாரி காலத்தில் நடக்கும் வழமையான நிகழ்வுதான். ஆனாலும் அவரால், அம்மக்களுக்காக கவலைப்படாமல் இருக்க முடியவில்லை.

இவ்வாறு நடந்து வந்து அக்கராயன் ஆஸ்பத்திரி வீதியில் ஏறினார். முன்பக்கமாக நீண்டு வளைந்து கிடந்த குளக்கட்டு வீதி, வான் பாயும் காட்சியைப் பார்த்துவிட்டு மக்கள் வருவதும், ஏனையவர்கள் அங்குமிங்கும் போவதுமாக அவலப்பட்டுக் கொண்டிருந்தது.

"தில்லையிட்ட போய்வரேக்க அத பார்ப்பம்" என மனதுக்குள் எண்ணிக் கொண்டு இடப்பக்கமாகத் திரும்பி பிள்ளையார் கோயிலடி தில்லைமுத்து வீட்டை நோக்கி நடந்தார். அவ்வீதியின் பெரும் பகுதியை வெள்ளம் மூடிக்கிடந்தாலும் பலர் போய் வந்து கொண்டிருந்தனர். வேட்டியை 'சண்டிக்'கட்டாக இறுக்கிக் கட்டிக் கொண்டு நடந்தார்.

கிடங்கும் குழியுமாக அரிக்கப்பட்டு கிடந்த வீதியில் சில வேளை திடீரெனக் கால்கள் இடறி விழவேண்டி ஏற்பட்டாலும் சமாளித்துக் கொண்டு நடந்தார்.

பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் இருந்த பாலம் ஒன்று வெள்ளத்தின் வேகமான ஓட்டத்தினால் முன்னமே அரிக்கப்பட்டு பள்ளமாகிக் கிடந்தது. அதில் தண்ணீர் மிக வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்ததால் மக்கள் பிடித்துச் செல்வதற்காக 'கேபிள்'கள் கட்டப்பட்டிருந்தன.

முருகேசர் அதனை பற்றிக் கொண்டு செல்ல ஆயத்தமானார்.

"அப்பு கவனமெணை............கேபிள் பிடிச்சுக் கொண்டு நடவணை" என்று இளைஞன் ஒருவன் எச்சரித்தான். அவர் திரும்பி அவனைப் பார்த்துவிட்டு நடந்து போய் பாலத்தில் கால் வைத்தார்.

இப்போது அவருக்கு முன்பிருந்த உற்சாகம், சுறுசுறுப்பு எல்லாமே உள்ளத்தில் ஏற்பட்டுவிட்டதைப் போலவிருந்தது.

மெல்லக் கம்பியைப் பற்றி....... ஆனால் உறுதியாகப் பிடித்துக் கொண்டு நடக்க இயலவில்லை. ஏனையவர்கள் 'மளமள'வென்று நடந்து போயினர்.

மெல்ல மெல்ல பாலத்தின் நடுப்பகுதிக்கு வந்தார். வெள்ளத்தின் வேகமான ஓட்டம், ஈடு கொடுத்து நடக்க முடியவில்லை. கைப்பிடி இளகியது. ஒரு கணம்தான்.

வெள்ளத்தோடு அவரும் மூழ்கத் தொடங்கினார்.

"ஐயோ" எனக் கத்த முயன்றார்! முடியவில்லை. வாய் வழியே வெள்ளநீர் உட்புகுந்து தடுத்தது. தண்ணீரால் அடித்துச் செல்லப்பட்டார்.

வெள்ளத்துடன் திக்கித் திணறிக் கொண்டு போனவர், அதிஸ்டவசமாக வாய்க்கால் நடுவே ஓங்கி வளர்ந்திருந்த மருத மரமொன்றில் தடக்கியதால் தப்பிக் கொண்டார். அப்போதும் உடல் நடுக்கம் தீராத போதிலும் மரணபயத்தின் உந்தலினால் தாவி ஏறினார்.

கரைக்கு வர முடியவில்லை. கூடிநின்ற எல்லோரும் "இப்படி வரலாம், அப்படி வரலாம்" என்று ஆலோசனை வழங்கினார்களே தவிர வேகமாக இரைந்து பாயும் நீரில் இறங்கிக்கொண்டு வர எவருமே துணியவில்லை.

வாய்ப்பேச்சு உபாயத்துடனும், சிற்சில பேச்சுக்களுடனும் நேரம் கடந்து கொண்டிருந்தது. இருள் கவியக் கவிய முருகேசரைப் பயம் பலமாகப் பிடித்தது.

"கடவுளே! பிள்ளையாரே காப்பாற்று...........காப்பாற்று!!" எனப் பிள்ளையார் கோயில் திசையை நோக்கினார்.

நன்றாக இருள் கவிந்து ஆளையாளத் தெரியாமல் போகும் நிலையில் தற்செயலாக அவ்வழியே வந்த, கால் ஒன்று துண்டிக்கப்பட்ட இளைஞன் ஒருவன் வெள்ளத்துக்குள் நீந்திப்போய், அவரைத் தோளில் இருத்தி தத்தித் தத்தி கரைக்கு

**''நீங்க இப்பிடி சொல்லிப் போட்டு இருங்கோ, தம்பி என்னை நெடுக பேசிக் கொண்டு இருக்கிறான், தனக்கு மரியாதை இல்லையாம்.''**

கொண்டு வந்தான்!.

"தப்பிவிட்டேன்" என்ற உற்சாகம் அவருக்குப் பிறந்தாலும் அவனை நிமிர்ந்து பார்க்கவோ, அவன் யார் என்று அறிந்து கொள்ளவோ அவரால் முடியவில்லை. தண்ணீரை நிறையக் குடித்ததனால் ஒரு ஆழ்ந்த சோர்வு..............

அதன் பின் யார் அவரை வீட்டில் கொண்டு வந்து போட்டார்களோ அவருக்குத் தெரியாது. மயக்கம் தெளிந்து எழுந்து உட்கார்ந்தபோது மனைவியின் திட்டுதல் தான் அவரின் காதுகளில் ஒலித்தது.

"பேசாமல் கிடக்கேலாமல் ஊர் ஞாயம் பேசவோ போனனீங்கள்.....மனிசருக்கு எவ்வளவு மானக்கேடு?" என்று குரல் வைத்தாள். "பெரிய வீராப்புப் பேசிக் கொண்டு போனவருக்கு தண்ணீருக்கால போக ஏலாமல் போச்சுது. ஒவ்வொரு முறையும் கலிங்கு பாயேக்க ஒவ்வொருத்தர பலி எடுக்கிற குளம். அந்தக் கால் இல்லாத பெடியன் இல்லாட்டி இண்டைக்கு இஞ்ச ஒரு செத்தவீடுதான். அவனைப் பூப்போட்டுக் கும்பிடவேணும்."

அப்போதுதான் அவர் மனதை அது உறுத்தத் தொடங்கியது.

"சீ.......அவனுக்கு நன்றி எண்டு ஒரு சொல்லுக் கூட என்னால சொல்ல ஏலாமல் போட்டுது. அவனை முந்திக் கண்ட ஞாபகமும் இல்ல. அவன் ஆரோ?"

"நான் என்னவோ கேக்கிறன். நீங்கள் என்ன கடுமையான யோசனையில?" என மனைவி மீண்டும் பலமாகக் கேட்டபோது தான் சிந்தனைகளை அறுத்து நிமிர்ந்து பார்த்தார்.

"என்...ன?"

"உங்கட 'பென்சன்' எப்ப வந்து நீங்கள் 'சைக்கிள்' எடுக்கப் போறீங்கள்? இண்டைக்கு கொஞ்சச் சாமான்கள் வவுனியாவால விட்டவங்களாம், சைக்கிலும் வந்திருக்கும்"

"இப்ப நீ ஏன் அந்தரப்படுகிறாய்? 'பென்சன்' வாற நேரத்தில் வரட்டும். ஆறுதலா எடுப்பம்"

"உங்கட 'பென்சன்' வாற நேரத்தில 'சைக்கிள்' எல்லாம் வித்து முடிஞ்சு, கிடக்கிறதுகளும் விலை ஏறியிடும்".

"இல்லாட்டிப் போகட்டும். இஞ்ச கிடக்கிற பழைய 'சைக்கிள்' காணும் எனக்கு"

"உந்த உடைசல் 'சைக்கிளில' ஓடி 'றோட்டு' வழிய நிண்டு ஒவ்வொண்டா கழட்டிக் கொட்டி பெடியனின்ர மானத்தை வாங்குங்கோ. இனிச் 'சைக்கிள்' எப்ப எப்ப விடுவாங்களோ?"

அவள் மகனின் மானம் எதுவென்று கவலைப்பட்டபோது அவருக்கு உள்ளூர சிரிப்பு எழுந்தது. எனினும் அதை வெளிக்காட்டாதவராக, "இப்ப வாற புதுசுகள் மட்டும் திறமே? நீ சும்மா இரு இப்ப," என்றார்.

"நீங்க இப்பிடி சொல்லிப் போட்டு இருங்கோ, தம்பி என்னை நெடுக பேசிக் கொண்டு இருக்கிறான், தனக்கு மரியாதை இல்லையாம்."

"நான் ஓடுற 'சைக்கிளு'க்கும் அவன்ரை மரியாதைக்கும் என்னப்பா சம்பந்தம்? உந்தப் போலிக் கௌரவங்களிலை ஒண்டுமில்லையெண்டு சொல்லு!".

"நீங்கள் ஒரு சாட்டும் சொல்ல வேண்டாம். நான் காசுதாறன். இண்டைக்குப் போய் எடுங்கோ" என்று அவரை அடக்கியவள் பிடிவாதமாக எங்கோ கடனாகப் பணம் பெற்று அன்று மதியமே அவரைக் கிளிநொச்சிக்கு அனுப்பிவிட்டாள்.

பொழுது நன்றாகச் சாய்ந்த பின்னரே வாங்கிய 'சைக்கிளு'டன் வீடுவந்து சேர்ந்தார் முருகேசர்.

"இஞ்ச! நாளைக்கு முதல் தம்பியிட்டை காட்டிப் போட்டு 'சைக்கிள்'க் கடையில 'டைனமோ செட்டை' பூட்டுவிச்சுக் கொண்டு வாங்கோ" என்றாள். மறுநாள் காலை அவரை எழுப்பி கடைக்கு அனுப்பினாள்.

அவர், மகனுக்கு 'சைக்கிளை'க் காட்டிவிட்டு 'சைக்கிள்', கடையில் பூட்ட வேண்டியவற்றைப் பூட்டிக் கொண்டு திரும்பினார்.

எதிரே ஒரு போராளி இளைஞன் துப்பாக்கியுடன் வந்து கொண்டிருந்தான். வரிப்புலிச் சீருடையுடன் மிக வேகமாக நடந்து வந்தவனை அவருக்கு யார் என்று தெரியவில்லை.

அவனை நெருங்கி 'சைக்கிளை' மிதித்தபோது தான் அவனை எங்கோ கண்டது போலிருந்தது முருகேசருக்கு. அவனை உரசினாற்போல 'சைக்கிளை' அருகே நிறுத்தி விசாரித்தார்.

"தம்பி ஊருக்குப் புதிசு போல" அவரது குரலில் ஒரு ஆவல் தொனித்தது.

"ஓம் ஐயா கிட்டடியில தான் வந்தனான்" என்று அவன் புன்னகைத்தான்.

"எங்கையோ முந்தி சாடையா கண்ட மாதிரி ஞாபகம்" என்று சொல்ல எத்தனித்தபோது அவருக்குப் 'பளிச்'சென்று நீருள் மூழ்கிய ஞாபகம் எழுந்தது. 'என்னை அண்டைக்கு காப்பாற்றினவன் இவன் தானோ?

சீ அவனுக்கு ஒரு கால் இல்ல' மனதுக்குள் நினைத்துக் கொண்டிருக்க,

"அவசரமாக போறன் ஐயா பேந்து....." என்று கூறிக்கொண்டு அப்போராளி நடக்கத் தொடங்கினான்.

முருகேசர் 'சைக்கிளில்' ஏறி மிதித்தார். மனதில் ஏதோவொன்று உறைக்க சிறிது தூரம் சென்று திரும்பிப் பார்த்தார். அப்போராளி தாண்டித் தாண்டிப் போய்க் கொண்டிருந்தான்.

அவனேதான், அன்று காப்பாற்றியவன்!

ஜெய்ப்பூர் காலுடன் மிக லாவகமாக நடந்து வந்திருக்கிறான். 'ஜீன்ஸ்' அணிந்து சப்பாத்து போட்டிருந்ததால் வெளியில் தெரியவில்லை.

அவருக்குப் பல நூற்றாண்டுகள் தவமியற்றி இறைவனை நேரில் கண்ட பரவசம்!

அவசர அவசரமாக 'சைக்கிளை'த் திருப்பி, அவனை நோக்கி வேமாக மிதித்தார்.

"தம்பி! 'சைக்கிளில்' ஏறும். நீர் போற இடத்துக்கு கொண்டு போய் விடுறன்" என்று சொல்ல வேண்டும் என்ற துடிப்பு அவருள் எழுந்தது. அவன் போகும் பாதையில் செல்வதற்கு ஒரு மகனைக் கூட தன்னால் உருவாக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் எழுந்து அவரை முதல் முதலாக நாண வைத்தது. □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ்ப்பாண படையெடுப்பு:

## தமிழ் மக்களுக்கு ஒரு செயன்முறைப்பாடம்

தி-இனியவன்

நிகழ்த்தப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுவிட்ட ஒரு சமருக்கான போர்முறைத் திட்டத்தை வரைகின்றபோது, சிந்தனையின் மையமாக இருக்கவேண்டிய ஒரு அடிப்படைக் கோட்பாடு பற்றி, படைத்துறைப் பேறிஞர் சன் சூ அறிவுறுத்தியுள்ளார். 'போர்க் கலை' குறித்து அவர் விபரிக்கையில்,

'உன்னை அறி - எதிரியை அறி -
உனது பலவீனங்களையும்,
எதிரியின் பலங்களையும் கண்டறி -
அதன் பின்பு - தோல்வி பற்றிய
கவலையே இன்றி
நூறு சமர்களை நீ நடத்தலாம்"

என்று போதிக்கின்றார்.

அந்தப் போதனையினூடு சிந்தித்து, புலிப் படையினதும் – சிங்களப் படையினதும் பலச் சமநிலையை ஆய்ந்ததன் பெறுபேறாக 'சூரியப் பிரகாசம்' நடவடிக்கை எதிரியின் திட்டமிடலில் இருந்தபோதே செயல்வடிவம் பெறும்போது அது அடையப்போகும் முடிவை எம்மால் உணர்ந்துகொள்ள முடிந்திருந்தது.

தனது இராணுவ இலக்கை எய்திடும் சாதகத்தன்மையை எதிரி கொண்டிருக்கின்றான் என்பதை நாம் புரிந்துகொள்வதற்கு, எந்த ஒரு காரணமுமே தடையாக இருக்கவில்லை.

பொதுவாக, இராணுவ உலகில் போர்முறை இரு வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஒன்று – மரபுவழி போர்முறை எனப்படும் நேரடிப் போர். அடுத்தது – கெரில்லா போர்முறை எனப்படும் கரந்தடிப்போர்.

மரபுவழிப் போர்முறையில், படையெடுப்பாய் நிகழும் ஒரு நேரடிச் சமரின் முடிவை ஆட்பல சக்தியையும், போர்க்கல சக்தியையும் இணைத்து முழுமைப்படுத்தப்பட்ட படைபலமே தீர்மானிக்கின்றது. இத் தன்மையற்ற மறுதரப்பின் மனோதிடமும் மதிநுட்பமும் எதிரியின் வெற்றியைத் தாமதப்படுத்த முடியுமேயன்றி, ஒருபோதுமே தடுத்துவிட முடியாது.

அதே சமயம் –

கெரில்லாப் போர்முறையில் அதிரடியாய் நிகழும் ஒரு கரந்தடித் தாக்குதலின் முடிவை மனோதிடத்தையும், மதிநுட்பத்தையும் இணைத்த தந்திரோபாயம் மிக்க திட்டமிடலே தீர்மானிக்கின்றது. இத் தன்மையற்ற மறுதரப்பின் ஆட்பல சக்தியும், போர்க்கல சக்தியும் எதிரி பெறும் வெற்றியை முழுமையற்றதாக்கலாமேயன்றி, ஒருபோதுமே முறியடித்து விடமுடியாது.

'சூரியப் பிரகாசம்' படையெடுப்பு முதல் வகையைச் சேர்ந்தது. அது மரபுவழிப் போர் முறையிலான ஒரு சமர். அந்த வகையில் –

ஏற்கெனவே தான் முன்னேறி நிலைகொண்டிருந்த புன்னாலைக்கட்டுவன் பகுதிகளிலிருந்து, 1995 ஆம் ஆண்டின் ஒக்ரோபர் 17ஆம் நாள் சிங்களப் படை ஆக்கிரமிப்பைத் தொடங்குவதற்கு முன்னராகவே எதிர்பார்க்கப்பட்ட யாழ்ப்பாணம் நோக்கிய இறுதித் தாக்குதலின் முடிவும், எதிர்பார்க்கப்பட்டதாகவேதான் இருந்தது.

எனினும் –

தமிழினத்தின் தன்மானத்தின் மீதும், இன கௌரவத்தின் மீதும், நகர்த்தப்படுகின்றது என்பதற்காக, யாழ்ப்பாணப் படையெடுப்பை எதிர்கொண்டே ஆகவேண்டுமென்ற முடிவுக்கு வரவேண்டியிருந்த நிலையில் –

சாதுரியமாகவும், தந்திரோபாயமான வழிமுறைகளுடாகவும் படையணிகளை நகர்த்திய புலிகளின் தளபதிகள், எமது தரப்பில் பேரிழப்புக்கள் ஏற்படாத வகையான போர் நுட்ப உபாயங்களுடாக சமரை நெறிப்படுத்தினர்.

உன்னத பண்புகள் மிக்க சீரிய சமுதாயக் கட்டமைப்போடு நாம் கொண்டிருந்த கௌரவமான வாழ்முறையைக் குலைத்து, எம் சொந்தத் தொட்டில்களிலிருந்து – எங்களில் ஐந்தரை இலட்சம் பேர்களைக் குடியெழுப்பி, ஓரிரு இரவுகளிலேயே புலம்பெயரச் செய்து சொல்லில் அடங்காத் துன்பத்திற்குள் தோய்ந்துவிட்ட ஓர் ஆக்கிரமிப்பு என்ற ரீதியில் –

'சூரியப் பிரகாசம்' சமரை இராணுவ ரீதியில் கற்றுணர்ந்து விளங்கிக்கொள்வது –

தமிழ்த் தேசிய இனம் தனது எதிர்காலம் பற்றிய தீர்க்கமான ஒரு முடிவை எடுப்பதற்கு – தான் இனிச் செய்யவேண்டியது என்ன என்பது குறித்த தெளிவான ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு – மிகச் சரியான வழியைக் காட்டும்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான எத்தனிப்பு எடுக்கப்பட்டது இதுதான் முதற்தடவை அல்ல. தனது நேரடிக் கட்டுப்பாட்டை அங்கு இழந்துவிட்ட காலத்திலிருந்தே, அதனை மீளக் கைப்பற்றுவதற்கான இராணுவ முனைப்புக்களில் சிங்கள தேசம் கிரமமான முறையில் ஈடுபட்டேதான் வந்தது.

ஜெயவர்த்தனாவுடன் அத்துலத்முதலியும், பிரேமதாசாவுடன் ஜெனரல் ரஞ்சன் விஜயரட்ணாவும், விஜயதுங்காவுடன் லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணாவும், சந்திரிகாவுடன் ஜெனரல் அனுரத்த ரத்வத்தவும் என, அரியாசனத்தில் அமர்ந்த ஆட்சியாளர்களால் எடுக்கப்பட்ட – ஒரு பத்தாண்டுகால முயற்சி அது.

1986 ஆம் ஆண்டு யூன் திங்களில், குடாநாட்டைச் சூழ இருந்த எட்டு முகாம்களிலிருந்து முப்படைகளையும், ஒருங்கிணைத்து சமநேரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பல்முனைப் படைநகர்வுதான், குடாநாட்டிற்குள் தமது இராணுவ – நிர்வாகக் கட்டுப்பாட்டை மீளவும் நிலைபெறச் செய்ய சிங்கள ஆட்சி எடுத்த முதலாவது காத்திரமான படை நடவடிக்கையாகும்.

இதன் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்ட – கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பித்தபோது முடித்து வைக்கப்பட்ட, வடமராட்சியூடான 'ஒப்பறேசன் லிபரேசன்'.

சிங்கள தேசத்தின் மடியில் பிறந்த இன்னொரு துட்டகைமுனுவாகப் போற்றப்பட்ட மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவையும், மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ண, அட்மிரல் மொகான் ஜெயமகா உட்பட – அவரது தளபதிகளையும் வீழ்த்திய அராலிக் கண்ணிவெடியோடு கருச்சிதைவுக்குள்ளாக்கப்பட்ட– தீவுப்பகுதியினூடான 'ஒப்பறேசன் பைனல் கவுண்டவுண்' –

வரலாற்றுப் புகழெனப் பெற்ற புலோப்பளை அதிரடியோடு பாதிவழியில் தடம்புரண்டு, மீதி வழி செல்லாமல், வந்தவழி திரும்பி தென்மராட்சியூடான 'ஒப்பறேசன் யாழ்தேவி' –

"முன்னேறிய பாய்ச்சல்' மீது எதிர்ப்பாய்ச்சலாக வீழ்ந்த 'புலிப்பாய்ச்ச'லோடு பின்னோக்கிச் சென்றுவிட்ட வலிகாமம் மேற்கினூடான 'ஒப்பறேசன் லீப் போவேட்' என்ற வரிசையின் கடைசி நடவடிக்கைதான் –

வலிகாமம் கிழக்கினூடான 'சூரியப் பிரகாசம்' எனப்படும் 'ஒப்பறேசன் ரிவிரெச' ஆகும்.

கடந்த ஒரு தசாப்த காலமாக, தமிழர்களின் தளராத கோட்டையாகத் திகழ்ந்தது யாழ்ப்பாணம். தமிழ்ச் சமூகத்தின் சமூக – பொருண்மிய வாழ்வினதும், அதற்கே உரித்தான பண்பாட்டு வழக்கங்களினதும் உறைவிடமாக மட்டுமல்ல, பெருக்கெடுத்துப் பாயும் விடுதலைப் புரட்சிப் பேராற்றின் மைய ஊற்றுக்கண்ணாகவும் விளங்கியது யாழ்ப்பாணம். சிங்களப் பகுதிகள் எதுவும் எல்லையாக இல்லாமல், சர்வதேசக் கடலை மட்டுமே வேலியாகக் கொண்டு தமிழர்கட்குப் பாதுகாப்பான ஒரு புவியியல் அமைவிடத்தைப் பெற்றுள்ள, தமிழீழத்தின் தனித்துவமான ஒரு தரைப்பகுதியாகக் கொலுவிருப்பது யாழ்ப்பாணம். ஆதலால் – ஆண்டாண்டு காலமாக அல்லற்பட்ட தமிழினம் எங்கெல்லாமோ இருந்து ஓடிவந்த போதெல்லாம், தாய் மடியாகி அரவணைத்தது யாழ்ப்பாணம்.

அத்தகைய மகுடங்களைச் சூடிய எம் மண்ணைக் காக்க, தேசத்தின் அத்தனை பிரதேசங்களையும் சேர்ந்த படைவீரர்களும் போரிட்டுள்ளார்கள். எதிரிகளின் சுடுகுழல்களின் முன்னால் அரண்களாய் வீழ்ந்துள்ளார்கள். எதிரியின் ஒவ்வொரு படையெடுப்பையும் முறியடித்து – ஒவ்வொரு தடவை தோல்வியைத் தழுவுகையிலும் முன்னையதை விடக் கூர்மைப்பட்ட படையெடுப்பை அவன் அடுத்த தடவை ஏவிவிடுகையில் அதனையும் முறியடித்து – பத்தாண்டு காலமாக யாழ்மண்ணைக் காத்த இரும்புக் கவசமாக நாம் விளங்கினோம்.

இலங்கைத்தீவு முழுவதிலும் – குறிப்பாக வடக்குக் கிழக்குப் போர் அரங்குகளில் – தனது படைபலம் சிதறிக் கிடந்ததால், மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் தான் மேற்கொள்ளவேண்டியிருந்தது. யாழ். குடா மீதான முன்னைய படையெடுப்புக்கள் மூலமாகத் தனது இலக்கை அடைய முடியாமல்போன சிங்களப் படைத்துறை –

அந்தப் பட்டறிவில் கற்ற போரியல் பாடங்களிலிருந்து 'சூரியப் பிரகாசம்' படைநகர்வைத் திட்டமிட்டது. ஒருங்கிணைந்த படைபலத்தை ஒரே களத்தினூடு பிரயோகித்து, புலிகளை அழித்து அல்லது அகற்றி முன்னேறுவதுதான் 'சூரியப் பிரகாச'த்தின் மூலோபாயமாகும்.

படைபலச் சமநிலையில் எம்மைவிட எதிரி மேலோங்கியிருந்தபோதும்கூட, சில வேளைகளில் அதிஸ்டமும் பல வேளைகளில் திறமையும் துணை நின்றதால் எம்மால் முறியடிக்க முடிந்த முன்னைய படையெடுப்புக்களைப் போல இல்லாமல் –

எம் கைகளை மீறிக் கடந்த 'சூரியப் பிரகாசம்' படையெடுப்பு முற்று முழுதாக படைபலத்தின் கைகளிலேயே வீற்றிருந்தது.

எதிரியானவன் மிகமிகப் பெருமெடுப்பில் தன்னைத் தயார்ப்படுத்தினான். "அரசியல் தீர்வை அடைவதற்கான இராணுவ வழிமுறை" என்று, அந்நிய நாடுகளிடம் ஆசிர்வாதம் பெற்றான். முன்னைய ஆட்சியினர் எழுதிய படைத் தளபாட உடன்படிக்கைகளைப் புதுப்பித்துப் போர்கலங்களைக் கொள்வனவு செய்தான். யாழ்ப்பாணப் போர்முனை எனும் சதுரங்க மேடையில் வெற்றியீட்டுவதற்காக, தனது கட்டுப்பாட்டிலிருந்த சில தளப்பிரதேசங்களைத் கைவிடவும் சித்தமானான். கிழக்குப் பிராந்தியத்தில் நிலைகொண்டிருந்த தனது கணிசமான போரணிகளை வெளியேற்றி, வடக்கிற்கு நகர்த்தினான், தனது வழங்கற் பாதைகளை அடிக்கடி தாக்கிப் புலிகள் சேதப்படுத்தியபோதும், கடலூர்திகளிலும் வானூர்திகளிலும் படைவீரர்களை ஏற்றி– அபாயங்களை ஊடறுத்து பலாலிக்குக் காவினான்.

ஏற்கனவே இருந்த பத்தாயிரம் பேருடன் இன்னும் கூடுதலாக இருபத்தையாயிரம் துருப்புக்களை செருக்களத்தில் குவித்தான். முப்படையின் பணிகளையும் ஒரு முகப்படுத்தினான். தனது வரலாற்றில் என்றுமே இல்லாத பெரும் ஆளணி – ஆயுதக் குவிப்பைச் செய்து, யாழ்ப்பாணச் சமருக்கு பகைவன் ஆயத்தப்படுத்தினான். சிறிலங்கா நாட்டின் தேசிய படைபலத்தை முழுமையாகத் திரட்டி "சூரியப் பிரகாச" த்தினூடு பிரயோகித்தான்.

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...



வரலாற்று இடப்பெயர்வு:
தானே தூக்கிச் செல்லப்படவேண்டிய வயதில், தான் தூக்கி நடக்கும் பிஞ்சு!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மௌனமான ஒரு பொருண்மிய...

இந்த நிலையில்தான் ஸ்தம்பிதமடைந்திருந்த ஓட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைக்கும் புத்துயிர் அளிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான தொழிலாளர்களிற்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு தினமும் 6000 ஓடுகளும் 2000 செங்கற்களும் மற்றும் நிலஓடுகளும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. முதலாந்தர ஓடு ஒன்று 11.00 ரூபாவாகவும் மூலை ஓடு 30.00 ரூபாவாகவும் இப்போ சந்தையில் கிடைக்கின்றது. கட்டடப் பொருட்தட்டுப்பாட்டினால் முடங்கிக் கிடந்த பல கட்டட வேலைகள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கு வழிவகுத்துள்ளது இம் முயற்சி.

மேலும் விசுவமடுவில் நாளாந்தம் வீணாகும் பொருட்களான வைக்கோல், வாழைத்துண்டு, இலுக்குபுல், மரத்தூள் ஆகியவற்றை மூலப்பொருளாகக் கொண்டு சிப்போட் தயாரிக்கும் தொழிற்சாலையும் சிறப்பாக இயங்குகிறது. தற்போது இங்கே 3X3 அடியில் நாள் ஒன்றிற்கு 25 சிப்போட் தயாரிக்கப் படுகின்றது. இதன் தரம் சுமாராக இருந்தாலும் எதிர்காலத்தில் இதன் தரத்தையும், விளைத்திறனையும் கட்டி சிறப்பான கைத்தொழிலாக மாற்றியமைக்க முடியும்.

மேலும் விசுவமடு மற்றும் பேராற்றிலும் நல்ல இனப்புறத்தைரைகளை வளர்த்து இதை மேய்ச்சல் தரையாக பயன் படுத்தி வருகிறார்கள். இவை விவசாயிகளுக்கு நம்பிக்கையையும், உந்து சக்தியையும் கொடுக்கிறது. இதைவிட சிறுநீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கும் பணியும் தொடர்ச்சியாக நடந்து வருகிறது. இதன் மூலம் புதிய விவசாயிகளை குடியமர்த்தவும், அங்குள்ள விவசாயிகட்கு நிரந்தர வருவாயைப் பெறவும் முடிகிறது. இவை தவிர இன்னும் பல சிறு தொழில் முயற்சிகள் உள்ளன. மென்பான உற்பத்தி நிலையம், பதப்படுத்திய இறைச்சி உற்பத்தி நிலையம், பப்பட உற்பத்தி, பலசுவை உணவுப் பொருள் உற்பத்தி நிலையம் என இவற்றின் பட்டியல் நீண்டு செல்கின்றது. ஒன்று மட்டும் வெளிப்படை. இங்கே மூலைகள் தோறும் மௌனமாக ஒரு பொருளாதாரப் புரட்சிக்கான அத்திவாரங்கள் இடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எமது பலத்தில் எமது வாழ்வு கட்டி எழுப்பப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை. ✷

## யாழ்ப்பாண படையெடுப்பு...

எம்மிடம் மாற்றிவிட அணிகளுமிருக்கவில்லை, ஏதாவது மாற்றுவழிகளுமிருக்கவில்லை. சமரைத் தொடர்ந்து நடத்த வேண்டியதற்காகவும், எமது இழப்புக்களை வரையறைக்குள் வைத்திருக்கவும் நாம் தந்திரோபாய ரீதியாக பின் வாங்க வேண்டியவர்களாக இருந்தோம். "சூரியப்பிரகாசம்" எழுந்த ஒவ்வொரு நாளைய சண்டைகளின் முடிவிலும் எமது சக்திக்கு மீறிய ஒரு நிர்ப்பந்தமாக எதிரி முன்னேறுவதை மெல்ல மெல்ல நாம் அனுமதிக்க வேண்டியிருந்தது. ஆனாலும்–

எதிரியின் நகர்வைத் தடுத்து பகையணியைத் தாமதிக்க வேண்டிய கட்டாய முடிவொன்றை ஒரு கட்டத்தில் நாம் தவிர்க்க முடியாததாகச் செயற்படுத்த வேண்டியதாக இருந்தது.

"சூரியப்பிரகாசம்" தனது முடிவை நெருங்கிக் கொண்டிருந்த நொவம்பர் திங்களின் இறுதி நாட்களில் யாழ் நகரை நாற்புறமும் சூழ்ந்துவிட்ட படையணிகளுக்கு மத்தியில் நின்று புலிகள் உக்கிரமான அந்தச் சண்டையிலிறங்கினர். சுண்டுக்குளிக் கச்சேரியடிப் பகுதியூடாகவும், நல்லூர் கந்தர்மடம் பகுதியூடாகவும், நீராவியடி பெருமாள்கோயிலடிப் பகுதியூடாகவும், பண்ணை கொட்டடிப் பகுதியூடாகவும் வியூகமாக முன்னேறிய படையணிகளைப் புலிகள் மூர்க்கத்தனமாய் எதிர்கொண்டனர். தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளன்று அல்லது மாவீரர் நாளன்று யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, தமிழர்களின் இன கௌரவத்தின்மீது சிங்கக் கொடியை ஏற்றத் திட்டமிட்டு முன்னேறிய சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளின் பேரினவாத நோக்கத்தை உடைத்தெறியவேண்டிய தமது கடமைப்பாட்டை புலி வீரர்களும் அவர்தம் தளபதிகளும் வெற்றிகரமாகவே நிறைவேற்றினர்.

வரலாறு காணாத ஒரு பிரமாண்டமான களத்தை எதிர்கொண்டு ஐம்பது நாட்களுக்கு நீடித்துச் சென்ற தளபதிகளின் படை நகர்த்தற் திறன் அற்புதமானது. போரியல் வல்லுநர்களையே வியப்புக்குள்ளாக்கியது. முற்றுகையிடப்பட்டுவிட்ட வலிகாமத்திற்குள் சிக்கிக்கொண்டுள்ள புலிகள் இனிச் சரணடைய வேண்டும் அல்லது கடலிற் குதிக்க வேண்டும் அல்லது 'சயனைட்'டின் சுவையறிந்து தற்கொலை செய்ய வேண்டுமென எதிரி பிரமாதமாகப் பிரச்சாரம் செய்துகொண்டிருந்த வேளையில் முற்றுகையிலிருந்து தப்பித்து எப்படிப் படையணிகளை வெளியேற்றினர் என்ற கேள்விக்கு, அல்லது இன்னமும் வலிகாமத்திற்குள் எப்படிப் படையினர் தாக்கப்படுகின்றனர் என்ற கேள்விக்கு அவர்களே பதில்! அதிசயப் பதில்! பிரபாகரனின் களநாயகர்களாகி, அவரது எண்ணங்களையும் நுட்பங்களையும் களத்தில் செயற்படுத்தும் வழிநடத்துநர்காளகி, "சூரியப்பிரகாச"த்தின் உதயத்திலிருந்து மறைவுவரை சண்டைகளை நெறிப்படுத்திய எம் விடுதலைச் சேனையின் சேனாதிபதிகளது வினைத்திறன் அசாதாரணமானது. எதிரிகளாலேயே வியந்துரைக்கப்பட்டது.

தனது படை வீரர்களையிட்டு என்றென்றும் எம் தேசம் தலை நிமிர்த்த முடியும். "நாங்கள் தமிழர்கள்" எனத் தமிழர்களை இறுமாப்போடு கர்வப்பட வைத்தவர்கள் அவர்களது பிள்ளைகள். விடுதலைப் புலிகளின் படையணிகளிலும், தமிழீழக் காவல் துறையின் சண்டைப் பிரிவுகளிலும் களத்திலிறங்கி, பொருது களங்களில் எதிரிகளை அவர்கள் திணறடித்தார்கள். யாழ்ப்பாணப் போர்முனையிலும் அது வெடித்த ஓரிரு நாட்களில், எவருமே எதிர்பார்த்திராத பகையரசின் இன்னொரு மையத்திலும் நம்புதற்கரிய விதமாக, அவர்கள் ஆடிய சண்டைகள் உயிர் சிலிர்க்க வைக்கும் ஆச்சரியப் போர்க்கதைகள் – யாழ்ப்பாணச் சமரை கடைசிவரைக்கும் நடாத்தியே ஆகவேண்டும் என்ற அரசியல், இராணுவ ரீதிகளினானதும் இன மானத்தோடு சம்பந்தப்பட்டதுமான ஒரு தேவைக்காக தங்களது உடற்பலவீனங்களுக்கு முகம் கொடுத்து அவர்கள் ஆற்றிய உழைப்பு அளப்பரியது, உன்னதமானது. விழுப்புண் பட்டுச் சென்ற வீரர்கள் மருந்திட்டு வந்து போரிட்டார்கள். மறுபடியும் காயப்பட்டுச் சென்றும் மறுபடியும் களத்திற்கு வந்தார்கள். மூன்றாவது முறையாகப் புண்பட்டவர்களுமுண்டு. அதன் பின்பும் களப்பலியாகிவிட்டவர்களுமுண்டு. எம் தேசத்தின் 574 புதல்வர்கள் இந்த வரலாற்றுச் சமரில் பங்கேற்று ''இடிமுழக்கத்''தினதும் ''சூரியப்பிரகாசத்''தினதும் கதாநாயகர்களாக யாழ்ப்பாணத்தின் மடியில் விழுந்தார்கள். எமது மண்ணின் ஒவ்வொரு துணிக்கைக்காகவும் தாம் உயிர்த்துப் போரிட்ட இன்றைய நாட்களின் இரத்தச் சாட்சிகளாகிச் சரித்திரமானார்கள்.

ஒக்ரோபர் 30ம் 31ம் திகதிகள் வரலாற்றின் நாட்கள் புலிகளின் அரசியற் பலம் எனப்படுவது, தமிழினத்தின் ஏகோபித்த பலமேதான் என்பது உலகத்தின் செவிகளில் முரசறையப்பட்டது. எம் நாட்டின் நிரந்தர சுபீட்சமொன்றுக்காக எதைத் துறக்கவும் தயாரென எம்மினம் பறைசாற்றியது. "பாதுகாப்பிற்காகச் செல்லுங்கள்" எனச் சொன்ன அடுத்த நொடியில் எடுத்த பொருளோடு எழுந்து நடந்து "எவருக்கும் இனி நாங்கள் தலை குனிந்து வாழத் தயாரில்லை" என்பதைப் பிரகடனப்படுத்தியது. சோற்றுப்பசி வாட்டித் துவண்டு சாக நேரினும், சுதந்திரப் பசி குன்றித் திரும்பி வரப்போவதில்லை என எம்மக்கள் நாவற்குழிப்பாலம் தாண்டி நடந்து சென்ற நாட்கள்.

செய்தி அறிந்த போது ஒவ்வொரு புலி வீரனும் மேனி சிலிர்த்தான். உள்ளம் நெகிழ்ந்தான். களத்தில் சண்டையிட்ட ஒவ்வொரு கணத்திலும் அதையே நினைத்தான். இனம் புரியாத தெம்பு பெற்றுச் சமராடினான். இடப்பெயர்வால் அவர்கள் பட்ட துன்பங்களுக்காக மனம் துவண்டு, ஊர் துறந்து அவர்கள் செய்த போராட்டப் பங்களிப்புக்காக சிரம் தாழ்த்தினான். அவர்களது தேசபக்தியின் முன்னால் மரியாதை வணக்கம் செலுத்தினான். நெருப்பு மழைக்கு நடுவில் களமாடு கையிலும் "என் மக்கள் என்னோடு" என்ற இறுமாப்போடு நின்றான். அன்று முதல் இன்று வரை அந்த உணர்வுதான் அவர்களது நெஞ்சுக்குள் குமுறுகின்றது.

எங்களிலிருந்து எட்டத்திலிருந்தாலும் "என் மக்கள் என்னோடு" என்ற உணர்வு சுரக்க தாங்கள் தனித்துவிடப்பட்டவர்களல்ல என்ற நினைவோடுதான் வலிகாமத்தின் குச்சொழுங்கைகளில் எம் தோழர்கள் இன்றும் நடந்து கொண்டிருக்கின்றார்கள். ✷

## 13, 000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள்...

எடுத்தியம்பினர். பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமான பேரணியின், இருமருங்கிலும் விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளை உறுப்பினர்கள் கறுப்பு–வெள்ளைச் சீருடையுடன் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட தொப்பி அணிந்து வந்து கொண்டிருக்க– மக்கள் கோரிக்கைகளை முன்வைத்து அணிவகுத்துச் சென்றனர்.

பேரணி பாராளுமன்றக் கட்டட முன்றலை அடைந்ததும், தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள், தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள் தனதுரையில், "முரளிதரனையும், ஏனைய செயற்பாட்டு உறுப்பினர்களையும் தடுத்து வைப்பதன் மூலம் எமது இயக்க செயற்பாடுகளையும்– கட்டுமானங்களையும் குலைத்துவிட்டதாக சம்பந்தப்பட்டவர்கள் நம்பலாம். முரளியை உள்ளே அடைத்து வைக்கலாம். ஆனால் அவரது சக்தியை அடைத்துவைக்க முடியாது. இதற்கு இங்கு கூடியிருக்கும் நீங்கள்தான் எடுத்துக்காட்டு. அங்கு சிங்கள இராணுவம் பெரிய படையெடுப்பினை நடத்துகின்ற அதேவேளையில், வெளிநாடுகளில் – கனடா, சுவிஸ் போன்ற நாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்கின்றார்கள். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் விடுதலைப் போராட்ட வீரர்களாக, தலைவர்களாக எழுச்சி கொள்வார்கள். சத்தியத்திற்காக தொடர்ந்து அவர்கள் போராடுவார்கள்" என்று கூறினார்.

அகதிகளுக்கு உதவி வழங்கும் நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி பிறிசிட் பேசுகையில், "மிகக் குறுகிய காலத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இவ் ஊர்வலத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டிருப்பது தமிழர்களின் ஒற்றுமையையே எடுத்துக்காட்டுகின்றது. சுவிஸ் அரசு தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள தவறான நிலைப்பாடு – நீங்கள் இங்கு அணி திரண்டதன்மூலம் உண்மைக்குப் புறம்பானது என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் ஓர் மக்கள் அமைப்பு. எனவே அவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையும் இல்லை. சிறிலங்கா அரசின் முயற்சிக்கு சுவிஸ் அரசு துணை போகாது, இலங்கையில் நிரந்தரமான–உண்மையான சமாதானம் ஏற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையே சுவிஸ் மக்களாகிய நாங்கள் விரும்புகின்றோம். பொய்யான குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முரளிதரனும் ஏனையோரும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை உறுதியாக நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அதுவரையும் தமிழ் மக்களாகிய நீங்கள் எந்தவொரு மனச்சோர்விற்கும் இடங் கொடுக்காது உங்களது பங்களிப்பை உங்கள் இயக்கத்திற்கு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

சட்டத்தரணி திரு. கார்சல் பெசனட் கூறுகையில், "உலகின் எந்தவொரு பகுதியில் வாழும் ஒரு தனிமனிதனுக்கும் தனது சமூக, கலை, கலாச்சார, அரசியலைத் தீர்மானிக்கும் உரிமை உண்டு. இலங்கையில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழ்நிலை காரணமாக நீங்கள் பல்வேறு நாடுகளிலும் பரந்து வாழ்கின்றீர்கள். அந்தந்த நாடுகளில் உங்கள் தாயக உரிமைக்காக குரல் கொடுக்க உங்களுக்கு உரிமை உண்டு. அதையே நீங்கள் இங்கும் செய்கின்றீர்கள். இது குற்றச் செயல் அல்ல. எனவே தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் மிக விரைவில் விடுதலையடைவார்கள். அவர்களின் வழிநடத்தலில் நீங்கள் உங்கள் பங்கை ஆற்றுங்கள். உங்கள் தமிழீழம் மலரும் காலம் வெகுதொலைவில் இல்லை. அது உங்கள் கையில் உள்ளது." என்று மிகவும் உறுதியான குரலில் தெரிவித்தார்.

இவ் மாபெரும் பேரணியில் திரு. வசந்தராஜா, பேராசிரியர் பீற்றர் சால்க், தேவாலயங்களின் சார்பில் திரு. பெட்சி போன்றோரும் உரைநிகழ்த்தினர்.

பேரணியின் இன்னோர் முக்கிய நிகழ்வாக "விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடம் பலவந்தப்படுத்தி நிதி பெறுகிறார்கள்" என்று முற்றுமுழுதான ஓர் பொய்ப் பிரச்சாரத்தை பரப்பித் திரியும் சிறிலங்கா அரசிற்கு சாட்டை அடி கொடுக்கும் மாதிரியாக, பேரணியில் கலந்து கொண்ட மக்கள் தாமாகவே முன்வந்து தமிழீழத் தேசிய பாதுகாப்பிற்கென, தங்க நகைகளையும் பெருந்தொகைப் பணத்தையும் கையளித்தது இங்கு குறிப்பிடக்கூடிய அம்சமாக நடந்தேறியுள்ளது. ✷

## மரபு வழி சூரிய...

தாம் முனைப்புக் கொண்ட, சிறு சிறு தாக்குதல்களையே மேற்கொள்ளக்கூடிய ஒரு படையணியாக இல்லாது சிறிலங்கா அரசின் உச்சந்தலையையே ஓங்கி அறையக்கூடிய பலத்துடன் விளங்கும் புலிகளின் படையணிகள் இனி நடாத்துப் போகும் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டுமானால், இலங்கைத் தீவின் மூலைமுடுக்கெல்லாம் பாதுகாப்புப் படையினரை நிறுத்த வேண்டியேற்படலாம் என்ற அச்சமும் பாதுகாப்புத்துறை வட்டாரங்களில் தோன்றியுள்ளதாகவும் தகவல்கள் கசிய ஆரம்பித்துள்ளன. மரபுவழிச் சூரியக்கதிர் நடவடிக்கையினை விட – புலிகளின் பலமுனைப் பதிலடிகளே போரின் போக்கைத் தீர்மானிக்கும் எனவும் இவ் வட்டாரங்கள் அஞ்சுகின்றனவாம்.

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கைகளை தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட வரலாற்றுத் தவறு குறித்து சிங்கள தேசம் காலம் காலமாக வருந்தத்தான் போகிறது. ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**வரலாற்று இடப்பெயர்வு: எடுத்த பொருளோடு வந்தோம் – இனிப் போவது எங்கு?**

மிகமிக அதிகமான படைக்கல சக்தியோடு, போதியளவுக்கும் மிகையாக ஆயிரக்கணக்கான டசின் துருப்புக்கள் அங்கம் வகித்த அதிகாரபூர்வமான ஒரு தேசியப் படையை நகர்த்தி, நீண்டதொரு மரபுவழிச் சமராக எதிரி அரங்கேற்றிய யாழ்ப்பாணப் படையெடுப்பை மிகக் குறைந்த ஆட்பலத்துடன், அரைகுறையான வழங்களுடன், முழுமையற்ற படையமைப்பைக் கொண்ட கெரில்லா இயக்கமொன்று எதிர்கொள்ள வேண்டியிருந்தது. "முன்னேறிய பாய்ச்சலை" முறியடித்தது போல இதனையும் தடுத்து நிறுத்த முடியாமற் போனது ஒரு அதிசயமல்ல. ஏனெனில், இரண்டிற்கும் இடையிலான இராணுவப் பரிமாணம் வேறுபட்டது.

எல்லாளர் மண்ணை வீழ்த்தி சிங்கக் கொடியை நாட்டிய இன்றைய துட்டகைமுனுவாகவும், 'ஜெனரல்' தரத்திற்கு அருகதையைப் பெற்றுவிட்ட சிங்கள தேசத்தின் ஒரு மாபெரும் போர்த் தளகர்த்தராகவும் திரும்பிச் சென்ற சிறிலங்காவின் படைத்துறை அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த, "சூரியப்பிரகாசம்" பற்றி செய்தியாளர்களுக்கு விபரிக்கையில், "முன்னேறிப்பாய்ச்சல் ஒரு முன் ஒத்திகைபோல் அமைந்துவிட்டது" என்றார். அது உண்மைதான்.

12,000 துருப்புக்களையே கொண்ட படையணிகளுடன், தேவையானது எனக் கணிக்கப்பட்ட அளவுடைய வழங்களுடன் மட்டும் ஈடுபடுத்தப்பட்ட அந்தப் படை நடவடிக்கை புலிகளை முறியடித்து முன்னேறக்கூடிய தாக்குதல் சக்தியைக் கொண்டிருக்கவில்லை அல்லது அந்த நடவடிக்கையை முறியடிக்கக்கூடிய, தற்காப்புச் சக்தியைப் புலிகள் கொண்டிருந்தனர்.

அந்த முன் ஒத்திகையின் அனுபவத்தைத் தெளிவாக உள்வாங்கிய எதிரி, அந்தப் பட்டறிவினூடு தனது இறுதி நடவடிக்கைக்கான திட்டத்தை வரைந்தான். புலிகளை முறியடிக்கக்கூடிய பலத்தை, அல்லது புலிகளால் முறியடிக்கப்படமுடியாத பலத்தைத் திரட்டுவதற்காக "முன்னேறிய பாய்ச்ச"லைப் போல் மும்மடங்கு ஆட்தொகையையும், பன்மடங்கு படைக்கலத்தையும் தயார்ப்படுத்தினான். முனைப்பான ஏற்பாடுகளில் அவன் மூன்று மாதகாலமாக ஈடுபட்டான். ஆனால், நடந்த தவறு என்னவெனில்—

அந்தக் கால அவகாசத்தை முழுமையான முறையில் பயன்படுத்தி தமிழர் படையைத் தயார்படுத்த வருமாறு புலிகள் விடுத்த அழைப்பை தமிழ் இளம் பரம்பரை செவிமடுக்காது விட்டுவிட்டதுதான்.

எதிரியின் பலம் மடங்குகளால் அதிகரித்தபோது, எமது பலம் இருந்த அளவிலேயே இருந்தது. ''லீப் ஃபோவேட்''டிற்கும் "ரிவிரெச"வுக்கும் இடைப்பட்ட காலவேளையில், யாழ்ப்பாணப் போர் அரங்கின் படைப்பலச் சமநிலையில் எதிரி மேலோங்கி வருகின்ற ஆபத்து நிகழ்ந்தது.

"முன்னேறும் பாய்ச்ச"லை முன் உதாரணமாகக் கொள்ளுமாறுதான் இங்கும் கேட்கப்பட்டது. புலிகளிடம் உள்ள சண்டைப்பலம் அதை முறியடிக்க மட்டுமே போதுமானதாக இருந்தது என்பது விளக்கப்பட்டது. அதைவிடவும் அதிக பலம் செலுத்தப்படுமானால், முறியடிப்பது இயலாத காரியமாகலாம் என்பது தெளிவுபடுத்தப்பட்டது. எதிரி அவ்விதமான ஒரு முயற்சிக்கே ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றான் என்பது எடுத்துச் சொல்லப்பட்டது. அன்றைய அனர்த்தங்களின் அவலங்கள் ஒளிப்படங்களாய் காட்டப்பட்டது. எதிரி நகர்ந்தால் என்ன நடக்கும் என்பது உணர்த்தப்பட்டது. யாழ்ப்பாணம் மீது நடாத்தப்படப்போகின்ற உறுதியான இறுதித் தாக்குதலை முறியடிக்க, புலிப்படையில் இணைந்து தமிழரின் தேசியப் படைப்பலத்தைப் பெருக்குமாறு யாழ்ப்பாணச் சமூகத்தின் இளம் சந்ததியை நோக்கி முரசறையப்பட்டது. சந்து பொந்துகளிளெல்லாம் தேடிச் சந்தித்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால், அந்த அழைப்பை அறிவு பூர்வமாகவும் உணர்வு பூர்வமாகவும் கிரகித்து, புரிந்துணர்ந்து செயற்பட எமது இளம் சமூகம் வேண்டிய அளவிற்கு முன்வரவில்லை. விளைவு—

வலிகாமத்தின் முற்றத்திலிருந்து எம்மைக் குடியெழுப்பிக் கலைத்ததற்காக "பரமவீர விக்கிரம" என்ற உயர் விருதைப் பெற்றுக்கொண்ட மேஜர் ஜெனரல்கள் றொகான் தலுவத்தவும், சிறிலால் வீரசூரியாவும், பிரிகேடியர் ஜானத் பெரேராவோடு ஏனைய நடவடிக்கைத் தளபதிகளும்— அடுத்த படையெடுப்புக்கான போர்முறைத் திட்டத்தை இப்போது வரைந்து கொண்டிருக்கின்றார்கள்.

பதினொரு வருடப்போரில் இதுகால வரை ஒருங்கு திரட்டியிராத விதமாக, தனது முற்றுமுழுதான படைக்கல சக்தியையும் எதிரி யாழ்ப்பாணச்சமரில் ஒருங்கிணைத்திருந்தான். யாழ் நகரைக் கைப்பற்றுதல் என்ற தனது இராணுவ இலக்கை எய்தும் நாள்வரை சமரைத் தொடர்ந்து செல்வதற்குச் சாதகமாக, ஒவ்வொரு நாள் சண்டைகளிலும் எவ்வித மட்டுப்படுத்தல்களுமற்று பாவிக்கக்கூடியதாக, போர்க்கருவிகளுக்கான வெடிப்பொருட்களை எதிரி குவித்திருந்தான். இங்கு, எதிரியின் எறிகணைகளே முக்கியமானவை. சமர் அரங்கின் பிரதான பாத்திரத்தை அவைதான் வகித்தன. எமது தரப்பிலிருந்து சுடப்பட்ட ஒவ்வொரு சன்னத்திற்கும் எதிரி பத்துவரையான எறிகணைகளை ஏவியே பதிலளித்தான் என்று சொன்னால் அது பொய்யான வர்ணிப்பு அல்ல. எமது போராளிகளுக்குப் பேரளிவுகளை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக மட்டுமல்லாமல், தகவல் தொடர்புச் சாதனங்களின் அலைவரிசைகளைக் கிரகித்து, ஒலிபரப்பாகும் பீடத்தைக் கண்டறியும் கருவிகள் மூலம் எமது கட்டளை மையங்களை இனம் கண்டு தாக்கவும் எதிரிக்கு எறிகணைகள் துணை நின்றன. கட்டளைப் பீடங்களையும் தளபதிகளையும் குறிவைத்துத் தாக்கி, எமது சண்டை அணிகளின் ஒழுங்கமைவுகளைச் சீர்குலைக்க வேண்டிய தனது தேவையை நிறைவு செய்வதற்காக, பலாலியின் ஆட்டிலறி ஏவுதளங்களிலிருந்து எதிரி எறிகணைகளை வீசினான். சுருங்கக் கூறின், எதிரியின் சார்பில் எறிகணைகள்தான் சண்டை பிடித்தன எனலாம். சிங்களத் தரைப்படையின் தளபதி லெப். ஜெனரல் ஜெரிடீ.சில்வா, "சண்டேரைம்"க்கு வெற்றிப் பெருமிதத்தோடு வழங்கிய செவ்வியில், "ஆட்டிலறி மற்றும் மோட்டார்ப் பீரங்கி" களுக்கு தனது "மனமார்ந்த நன்றி"யைத் தெரிவிப்பதிலிருந்தே அவை வழங்கிய அதி உச்சப் பங்களிப்பை நாம் புரிந்துகொள்ள முடியும்.

எமது சண்டை அணிகளின் அசைவுகளைத் தடுத்து, கட்டமைப்புகளைக் குலைத்து அவற்றின் போர்த்திறனைச் சிதைத்து விடுவதற்காக எதிரி நிகழ்த்திய வரையறைகளற்ற ஆயுதப்பலப் பிரயோகம், களத்தில் நின்ற எம் வீரர்களின் எண்ணிக்கையைக் குறைத்தது உட்பட—தாம் எதிர்கொண்ட சிக்கல்கள் எல்லாமே, எமது ஆட்பற்றாக்குறையில் மையங்கொண்டவையாகவே இருந்தன.

ஆயுதப்பலம் போதாமை எமது சண்டைகளுக்கு இடையூறாகத்தான் இருந்தது. எனினும், ஆட்தொகைப் பற்றாக்குறைதான் அதைவிடவும் பாரிய சிக்கலைத் தந்தது.

படையினரின் நகர்வுகளைக் கட்டுப்படுத்தி வெளியேறி நடமாட முடியாமல் முகாம்களுக்குள் முடக்கி, அவர்களது ஆதிக்கத்தின் கீழிருந்து சில பிரதேசங்களை விடுவித்து—ஒரு நிழல் நிர்வாக இயந்திரத்தை இயக்குவிப்பதற்கான பாதுகாப்பை வழங்க, எம்மிடமிருந்த படைப்பலம் போதுமானதாயிருந்தது. இதுவரை காலமும் அவ்வாறானதொரு கட்டுப்பாட்டுத் தளப் பிரதேசமாக குடாநாட்டையும் வைத்திருக்க முடிந்தது. ஆனால்— தற்போதைய படைப்பலத்தை வைத்துக்கொண்டு, எத்தகைய பேரபாயம் நேரிடினும் குடாநாட்டைப் பாதுகாத்து நிற்க முடியும் என்று, நாம் எப்போதுமே நம்பியிருந்ததில்லை. ஏனெனில்— எமது சுயபலம் பற்றிய சரியானதொரு மதிப்பீடு எம்மிடமிருந்தது. மிகப் பெரும் எடுப்பில் நிகழப்போகும் சிங்களப் படையெடுப்பிலிருந்து குடாநாட்டைக் காக்கவேண்டுமெனில் எமது படைப்பலம் இன்னும் பன்மடங்கு அதிகரிக்கப்படவேண்டுமென்றுதான், நாம் தொடர்ச்சியாக வலியுறுத்திவந்தோம். ஒரு தேசியக் கடமையாக அதனை ஆற்ற அணிதிரண்டு வருமாறு இளைய உள்ளங்களை வேண்டிநின்றோம். அப்போது, "இயக்கம் விடாது" என்று சொல்லிக்கொண்டு எல்லோரும் அவரவர் அலுவல்களைப் பார்த்துக்கொண்டிருந்ததின் விளைவினை இப்போது நாம் ஒவ்வொருவருமே அனுபவிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

மரபுவழிச் சமரொன்றுக்கு தயார்படுத்தப்படுகின்ற ஒரு போரணி, தனது முன்னணித் தாக்குதற் பிரிவைத் தவிரவும், பின் களச் செயற்பாடுகளுக்காக முக்கியமான நான்கு உப அணிகளை மேலதிகமாகக் கொண்டிருக்குமென்பது ஒரு பொதுவான போரியல் நடைமுறையாகும்.

தாக்குதலணிக்கான வெடிப்பொருட்களையும் கருவிகளையும் விநியோகிக்கும் வழங்கற்குழு, காயமடையும்—களப்பலியாகும் வீரர்களைப் பின்னுக்கு அகற்றும் காவும் குழு, தாக்குதலணியோடு களத்திலிறங்கி காப்பு நிலைமைகளை நிறுவும் அரணமைக்கும் குழு, இந்த அத்தனை குழுக்களோடும் கலந்தும் தனித்தும் இயங்கும் மருத்துவக் குழு என்பவையே அவையாகும். இங்கு முன்னணித்தாக்குதற் பிரிவைப்போன்று சில சமயங்களில் அதைவிடவும் அதிக எண்ணிக்கையானோர் பின் கள வேலைகளுக்கெனத் தேவைப்படுவர்.

இச்சூழ்நிலையில் படையெடுப்பை முறியடிக்கும் மூலோபாயத்திற்காக ஊடுருவித் தாக்கும் தந்திரோபாயம் ஒன்றை நாம் செயற்படுத்த வேண்டுமெனில், இத்தனை குழுக்களையும் கொண்ட இன்னொரு போரணியை உருவாக்கப் பெருமளவு வீரர்கள் தேவையாக இருப்பர். யாழ்ப்பாணச் சமரில் எதிரிப்படையினரது எண்ணிக்கையை விட பல மடங்கு குறைவான ஆட்தொகையைக் கொண்ட புலி வீரர்களை எதிரியைப் போல பிற பௌதீக வசதிகள் எதுவுமற்ற நிலையில் களத்தில் நின்றனர் என்பது இங்கு சொல்லப்படவேண்டியதொன்றாகும்.

காப்பரண்களை நிறுவும் வேலைகளில் பெருமளவிலான உதவிகளை எம்மக்கள் செய்திருப்பினும் கூட, அவர்களைக் கூட்டிச் செல்ல முடியாத உயிராபத்து நிறைந்த சண்டையின் முன்னணி நிலைகளில் எமது போராளிகளே அரணமைக்கும் வேலைகளிலும் ஈடுபடவேண்டியிருந்தது. யுத்த முனைகளில் இயல்பாகவே நிலவக்கூடிய சீரற்ற உணவு விநியோகத்தின் மத்தியில் அவர்கள் தமது சக்திக்கு மீறித் தொழிற்பட்டார்கள். பல சந்தர்ப்பங்களில் அவர்கள் நாற்பத்திரண்டு மணிநேரத்திற்கு மேல் தூக்கமற்றும் செயற்பட்டார்கள். பகலில் சண்டையிட்டபின் இரவில் அரண்களைச் சீரமைத்து நிலைகளைப் பலப்படுத்திக்கொண்டு, அடுத்த நாள் சண்டைக்காக விடியும் வரை விழித்திருந்தார்கள். இது வெறும் புகழ்ச்சியில்லை. மிகைப்படுத்தலுமில்லை.

உறுமி வரும் 'டாங்கி'களின் பீரங்கிக் குழல்வாய்கள் நெருப்புமிழும் அதிகாலை இருளில் பகைவன் அன்றைய களத்தைத் திறப்பான். தாக்கி முன்னேறும் அவனது சண்டையணி எறிகணைகளின் மனமார்ந்த உறு துணையோடு ஊரத்தொடங்கும். இயந்திரத் துப்பாக்கிகள் இதயம் திறந்து பேசிக்கொள்ள இறுக்கமாய் வெடிக்கும் சண்டை,உடைத்தெறிந்து விரைய முனைந்து உக்கிரமாய்த் தாக்கும் பகையணியைத் தடுத்து உருக்கின் கவசமெனப் புலியணி பொருதும்! மூர்க்கத்தனமாய் மோதிய பகையை முறியடிக்கும்! களமெங்கும் எதிரிகளின் சடலங்கள் வீழும்! பீரங்கிக் கவச வண்டிகள் பிளக்கும்! எஞ்சியவை ஓடும்! பகையணி சிதறும்! சின்னாபின்னமாகும்! இருந்த நிலைகளை விட்டே பின்வாங்கி ஓடும்! அந்தக் கணப்பொழுதில் களத்திலிறக்கி பகைவனை விரட்டிய முனைகளில் நிலைப்படுத்தி அரண்களைப் பலப்படுத்தி உறுதியாய் நிறுத்திவிட மேலதிக படையணிகள் எம்மிடமில்லை. அத்தகைய எமது பாதக நிலைதான் எதிரிக்கு வாய்த்த சாதகமாகும்.

சண்டையில் விளைந்த எம்பக்கப் பாதிப்பை எமதணி நிவர்த்திசெய்வதற்குக் கூட அவகாசம் இல்லையே—தயாராய் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இன்னொரு தாக்குதற் பிரிவை எதிரி களத்தில் இறக்குவான். பலவீனப்பட்ட அணியை பின்னாலும் பலமான புது அணியை முன்னாலும் சம நேரத்தில் நகர்த்துவான். உக்கிர சண்டைக்கு நடுவில் மிகக் குறுகிய நேரத்திற்குள் அது நிகழும். திடீரென எதிர்பாராத விதமாக களத்தில் எதிரியிடமிருந்து புதுத் தெம்பு பெற்ற தாக்குதல் வரும். சேதப்பட்டு சோர்வுபட்டு ஆரம்பச் சண்டையிலேயே எமதணி தளர்வடைந்திருப்பினும் தொடர்ந்து மோதும். இயலாமைக்கப்பாலும் முயலும். மனங்குலையாமல் அது சண்டையிட களம் நீளும். களம் நீளக் களம் நீள எதிரி இறக்கிய இரண்டாவது அணியும் தளர்வடையும். வீரர் விழவும் சண்டைத் திறன் குறையவும் பலவீனப்படும் எதிரியணி நிலைகுலையும். அப்போது எதிரியானவன் தனது மூன்றாவது தாக்குதற் பிரிவைச் சண்டையில் இறக்குவான். நிலைமை சிக்கலாகும். தொடர்ந்தும் தாக்குப் பிடிப்பது எமக்கு முடியாத காரியமாகும். தடுத்துச் சண்டையிட இயலாத நிலை களத்தில் தோன்றும்.

சிதைவடைந்து விடுவதால் மட்டுமல்ல சண்டைகள் நீண்டு கொண்டு செல்லும் சந்தர்ப்பங்களில் தனது போரணியின் வீரர்கள் களைப்படைந்து விடாமல் அவர்களுக்கு ஓய்வு கொடுப்பதற்காகக்கூட அடுத்த அணியைச் சண்டையில் இறக்கி அவர்களைப் பின்னுக்கு எடுப்பான் பகைவன். அவனிடம் வளமிருந்தது, ஆளணியின் பலமிருந்தது.

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 3 தினங்களுக்குள் 25க்கும் மேற்பட்ட படையினர் தென்தமிழீழத்தில் பலி

## பன்குளம் "மொறவேவா" சிங்கள இராணுவ முகாம் தாக்கியழிப்பு

திருகோணமலை பன்குளம்பிள்ளையார் கோவிலடியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம், விடுதலைப் புலிகளால் 21-04-96 அன்றுமுற்றாகத் தாக்கியழிக்கப்பட்டுள்ளது. இரவு 11.30 மணியளவி ல் முகாமை முற்றுகையிட்ட புலி வீரர்கள் சடுதியான, உக்கிரமான தாக்குதல்களை மேற் கொண்டனர். 10 நிமிட நேரத்தில் முகாம் பூரண கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இத் தாக்குதலின்போது 7 படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். பதினைந்துக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். ஏனையவர்கள் ஆயுதங்களையும் போட்டுவிட்டு தப்பி ஓடிவிட்டனர். இதேவேளை இம் முகாம் தாக்கப்படும் செய்தியறிந்து முகாமிலுள்ள படையினருக்கு மேலும் பலம் சேர்க்கவென பன்குளம் சிறிலங்காக்காவல்துறை நிலையத்தில் இருந்தும், விமானப் படை முகாமிலிருந்தும் உதவிக்கு வந்த படையினரை புலி வீரர்களின் இன்னொரு படையணி தடுத்து நிறுத்தி அவர்கள் மீது எறிகணைத் தாக்குதலை மேற் கொண்டது. அத்துடன் இராணுவ முகாமிற்குப் பாதுகாப்பு அளிப்பதற்கென நிறுவப்பட்டிருந்த பாலத்தடி காவலரண்களும், பன்குளம் சந்திக் காவலரண்களும் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றிய ஆயுதங்கள்,இராணுவத் தளபாடங்கள் ஆகியவற்றை பாதுகாப்பாக அப்புறப்படுத்திய பின், விடுதலைப் புலிகள், இராணுவ முகாம் கட்டடங்களையும், காவலரண்களையும் வெடிவைத்து தகர்த்தழித்தனர்.

இவ்வெற்றிகரமான தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை.

## மூதூர் தங்கநகர் சிறிலங்கா காவல்துறை நிலையம் தகர்ப்பு

ஒருநாள் இடைவெளிக்குள் திருமலையில் மற்றுமொரு வெற்றிகரத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

மூதூர் தங்கநகர் சிறிலங்கா காவல் துறை நிலையம் விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டுள்ளது. 23-04-96 அன்று அதிகாலை 12.15 மணிக்கு தொடங்கப்பட்ட தாக்குதல் சில நிமிட நேரத்திலேயே முற்றுப் பெற்றது.

இவ்வெற்றிகரமான தாக்குதலில் 7 சிங்களக்காவல்துறையினர் கொல்லப்பட்டனர். பல படுகாயமடைந்தனர். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர். இதன் பின்னர் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட காவல்துறை நிலையம் விடுதலைப் புலிகளால் எரித்தழிக்கப்பட்டது.

## மட்டக்களப்பிலும் பல இடத்தில் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் திறை கண்டியாமடு, எனும் இடத்தில் 22-04-96 அன்று சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் 3 அதிரடிப்படையினர் அவ் விடத்திலேயே கொல்லப் பட்டனர். இதில் மேலும் பலர் படுகாயமடைந்துள்ளதாக அறியப் படுகிறது. சில ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

இதேதினத்தில், பிற்பகல்வேளை துறைநீலாவணை அதிரடிப்படை முகாமில் இருந்து மண்டூர் நோக்கி 'ஜீப்பில் சென்று கொண்டிருந்த அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 2 படையினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடினர்.

மறுநாள் 23-04-96 அன்று மட்டக்களப்பு 6ஆம் கட்டை இராணுவ முகாமில் இருந்து 3ஆம் கட்டை இராணுவ முகாம் நோக்கி ரோந்து வந்து கொண்டிருந்த இராணுவ அணி மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இரண்டு நிமிடமே நடத்தப்பட்ட அதிவேகத் தாக்குதலில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் இல்லை.

## அம்பாறையில் 3 அதிரடிப்படை பலி

அம்பாறையில் 'பன்னலவெல' எனும் சிங்களப் பெயரிட்ட இடத்தில் 'பவல்' கவசவாகனத்தில் சென்று கொண்டிருந்த விசேட அதிரடிப் படையினர் மீது புலிவீரர்கள் நடத்திய தாக்குதலில் பவல் கவசவாகனம் ஒன்று சேதமாக்கப்பட்டது. இதில் ஒரு அதிகாரி உட்பட மூவர் கொல்லப்பட்டனர். 6 பேர் படுகாயமடைந்தனர்.

## மேற்குறிப்பிட்ட தாக்குதல்களில் படையினரிடமிருந்து கைப்பற்ற பட்ட ஆயுதங்கள்:

பன்குளம்:

ஏ.கே துப்பாக்கி -25
ஏ.கே எல். எம். ஜி -2
ஆர். பி. ஜி -1
ஆர். பி. ஜி. எறிகணைகள்-3
ஏ.கே மகசீன் -26
ஏ.கே. ரம் மகசீன் -14
கொமான்டோ கிளைமோர்-2
கைக்குண்டுகள்-27
60 மி.மீ. மோட்டார் கருவி-1
60 மி.மீ மோட்டார் எறிகணை-36
6 மி.மீ பூஸ்ரர்-40
ஐ.எம். ரவைகள்-1200
ஐ.எம். ரவை-7215
கொமாண்டோ பரா-11
வானொலி-1

மூதூர், தங்கநகர்:

ஏ.கே. எல்.எம்.ஜி. -1
ஏ.கே துப்பாக்கி-6
வேட்டைத் துப்பாக்கி-8
ஏ.கே. எல்.எம்.ஜி. ரம் மகசீன்-3
ஏ.கே. மகசீன் -7
ஐ.எம்.கோர்வைகளுடன் ரவைகள் -159
ஐ.எம். ரவைகள்-108

6ஆம் கட்டை:

ஏ.கே. எல்.எம்.ஜி-1
ஏ.கே துப்பாக்கி-2
வானொலித் தொகுதி-1
துணை மின்கலம்-1
ஐ.எம். ரவைகள்-210
ஏ.கே. எல்.எம்.ஜி. மகசீன்-3
ஏ.கே மகசீன்-9
கைக்குண்டுகள்-8
ஐ.எம். கோர்வையுடன் ரவைகள்-452

பன்னலவெல:

கோல்ட் கொமாண்டோ-1
கோல்ட் ரவைக்கூடு-1
5.56 ரவைகள்-30

# தாயகம் நோக்கிய...

"விமான நிலையத்தில் ஒரு அறிவித்தல் பலகை காணப்பட்டது, சைப்பிரஸ் வரவேற்கிறது என்பது, உமக்கு அப்படித் தொடங்கும் முழு வசனத்தொடரும் தெரியுமா"?

எனக்குத் தெரிந்தவரை அவர்கள் உல்லாசப் பயணிகளை சிறிது மரியாதையாகக் கவர முயற்சிக்கிறார்கள் என்று நினைக்கின்றேன் என்றான் சாரதி.

இப்போது பிரதான நகரத்தினுள் சென்று கொண்டிருந்தார்கள். மஞ்சள் நிறமான வீடுகளும், சிவப்பு நிறமான கூரைஓடுகளும், தட்டையான நில அமைப்பும் ஏராளமாகக் காணப்பட்ட பேரிச்சைச் செடிகள் எல்லாமே மார்க்குக்கு டமாஸ்கஸ் (Damascus) ஐ நினைவூட்டின. அவன் சென்று கொண்டிருந்த பாதை பழைய நகரைச்சுற்றி வட்டமாகக் கட்டப்பட்டிருந்த வெனிசியன் (Venetian Wall) சுவர்களை ஒட்டிச் சென்று கொண்டிருந்தது. பழைய நகரின் துருக்கிப் பகுதியிலிருந்து வானளாவ எழுந்து நின்ற இரட்டை மசூதிக் கோபுரங்கள் (Twin Minarets) மார்க்குக்குத் தென்பட்டுக் கொண்டிருந்தன. இந்தக் கோபுரங்கள் சிலுவைப் போரின்போது நிர்மாணிக்கப்பட்டு, இப்போ முஸ்லிம் மசூதியாக்கப்பட்டிருந்த பரிசுத்த சோபியா பேராலயத்திற்குரியவை. இப்படிச் செல்லும்போது அம்பு முனை வடிவத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பிரமாண்டமான காவல்தளங்களையும் கடந்து சென்றார்கள். கடைசியாக சைப்பிரசிற்கு வந்தபோது தெரிந்து கொண்டபடி இப்படி அம்பு முனைபோல காவல் தளங்கள் இருப்பதை நினைத்துக் கொண்டான். சாரதியிடம் 'ஏன் தளங்களை அமைத்துள்ளார்கள்' என்று கேட்க நினைத்தாலும் பிறகு கேளாமலேயே விட்டுவிடத் தீர்மானித்தான்.

சில நிமிட நேரங்களில் நிக்கோசியாவிலிருந்து வெளியேறி வடக்கு நோக்கிச் சமவெளியில் சென்று கொண்டிருந்தார்கள். ஒன்றன்பின் ஒன்றாகப் பல கிராமங்கள் பின் சென்று கொண்டிருந்தன. இவை எல்லாமே ஒரே மாதிரியானவையாகவே, களிமண் கல்லாலானவையான குடில்களைக் கொண்டிருந்தன. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு குடிநீர் பெற்றுக்கொள்ளும் நீரூற்றுக் கட்டப்பட்டிருந்தது. அவற்றில், "இவை இங்கிலாந்தின் அரசர் பெருமானின் தயாளத்தினால் கட்டப்பட்டவை" என்ற அறிவிப்பும் இருந்தது. ஆரவாரமில்லாத வயல்களிலே சைப்பிரசின் புகழ்பெற்ற கோவேறு கழுதைகளுக்குப் பின்னால் விவசாயிகள் உருளைக்கிழங்குப் பயிர்களிடையே வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

ரக்சி திரும்பவும் வேகமாகச் செல்லத் தொடங்கவும், மார்க் நன்றாகப் பின்னால் சாய்ந்தபடி திரும்பவும் நினைவுகளில் மூழ்கினான்.

ரொம்மும் கிற்றியும் மணந்து சில காலத்தின் பின், மார்க்கும் எல்லீயும் மணந்து கொண்டனர். ஆரம்பத்திலிருந்தே திருமண வாழ்க்கை சரிப்போகவில்லை. ஒருவருக்கொருவர் பொருத்தமில்லாத இரு மனிதர்களின் இணைப்பாகவே இருந்தது. கிற்றி பிறமென்ரின் அமைதியான, மென்மையான வழிகாட்டல், மார்க்கையும் எல்லீனையும் ஒன்றாக வைத்திருந்தது. அவர்கள் இருவருமே வந்து தங்கள் மனக்குறைகளைச் சொல்லி அழுவார்கள். கிற்றி இருவரின் திருமணத்தை அதன் காலம் முடிந்த பின்னும், நல்ல நிலையில் வைத்திருக்க உதவினாள். ஆயினும் கடும் பிரச்சினைகளால் அவர்களின் திருமணம் முறிந்து விவாகரத்துச் செய்து கொண்டார்கள். பிள்ளைகள் எவருமில்லாததையிட்டு மார்க் நிம்மதியடைந்தான்.

விவாகரத்தின் பின் மார்க் கிழக்கு நோக்கி நகர்ந்து, ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலையாகத் தொடர்ந்து, உலகின் மிக மோசமான பத்திரிகைத்துறை மாணவனிலிருந்து, உலகின் மிக மோசமான பத்திரிகையாளனாக மாறினான். பத்திரிகை உலகின் அலைகளில் அடிபட்டு மிதந்து கொண்டிருப்போரில் ஒருவனாக மாறினான். இது அவனது மடைத்தனத்தாலோ திறமைக் குறைவாலோ ஏற்படவில்லை. தனக்குரிய இடத்தை வாழ்க்கையில் சென்றடைய இயலாத் தன்மையாலேயே ஏற்பட்டது. மார்க் ஒரு நல்ல படைப்பாளி. ஆனால் வழமையான பாணி நிருபர் வேலை இப்படைப்புத் திறமையை வெகுவாகப் பாதித்தது. ஆயினும் அவன் ஒரு முழுப்படைப்பாளியாக மாற முயலவேயில்லை. ஒரு நாவலாசிரியருக்கு ஏற்படும் சவால்களைச் சமாளிக்கும் தனித்திறமை தனக்கில்லை என்று அவனுக்குத் தெரியும். ஆகவே ஆண்டியுமில்லாமல், அரசனுமில்லாமல் நடுவே மிதந்தான்.

ஒவ்வொரு வாரமும் தவறாமல் ரொம்மிடம் இருந்து கடிதம் வரும். அவற்றில் அவன் தனது முன்னேற்றம் பற்றி உற்சாகத்துடனும், நம்பிக்கை யுடனும் எழுதியவையே நிறைந்திருக்கும். கிற்றியில் அவனுக்குள்ள காதலும், குழந்தை சாண்ட்ரா வசம் உள்ள அன்பும் நிறையவே பிரதிபலிக்கும்.

மார்க், கிற்றியின் கடிதங்களையும் நினைவு கூர்ந்தான். ரொம்மின் பொங்கித் ததும்பும் வர்ணனைகளின் உண்மையான அமைதியான மதிப்பீடுகளாக அவை விளங்கின. எல்லீன் மறுமணம் செய்யும்வரை அவள் இருக்கும் இடங்களைப்பற்றியும் அடிக்கடி அறிவித்து வந்தாள்.

1938ல் மார்க் பாக்கரின் உலகம் திறந்து கொண்டது. அமெரிக்கன் சிண்டிகேட்டுடைய, பெர்லினுக்கான வெற்றிடம் ஒன்று நிரப்பப்பட வேண்டி இருந்தது. திடீரென மார்க் செய்திப்பத்திரிகை ஆண்டியிலிருந்து வெளிநாட்டுப் பத்திரிகையாளன் என்ற கௌரவத்துள் தள்ளப்பட்டான்.

வெளிநாட்டுப் பத்திரிகையாளன் என்ற கோதாவில், பிரயாணங்களில் திறமைசாலியென நிரூபித்தான். தனக்கெனத் தனித்துவமான ஒரு பாணியை ஏற்படுத்தியதன் மூலம், தனது படைப்பாற்றலுக்கான ஆவலின் ஒரு பகுதியை ஈடுசெய்ய முடிந்தது. உலகத்திலேயே தலை சிறந்தவனாக இல்லாவிட்டாலும் வெளிநாட்டுச் செய்தி நிருபர்களுக்கு நிச்சயம் வேண்டிய ஒரு உள்ளுணர்வு அவனுக்கு நிறையவே இருந்தது. அதுதான் செய்தி ஒன்று உருவாகும் போதே அதை மோப்பம் பிடிக்கும் சக்தியாகும்.

அவன் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா எங்கும் சுற்றித்திரிந்து செய்தி சேகரித்தான். அவனுக்கென ஒரு பெயர் இருந்தது. தனக்கு விருப்பமான வேலையில் ஈடுபட்டிருந்தான். செல்லும் இடங்கவில் மதுபான சாலைகளில் நல்ல செல்வாக்கு இருந்தது. பெண்கள் விடயத்திலும் எவ்வித தட்டுப்பாடும் இருக்கவில்லை.

போர் தொடங்கிய போது, மார்க் ஐரோப்பா எங்கும் சுழன்று திரிந்தான். லண்டனில் சிலநாட்கள் ஓய்வெடுப்பது இதமாக இருக்கும். ரொம்மிடமிருந்தும் கிற்றியிடமிருந்தும் வந்திருக்கும் கடிதக் கட்டுரைகள் அங்கு காத்திருக்கும்.

1942ன் முற்பகுதியில் ரொம் பிறமென்ற் மறைன் (Marine Corp) பிரிவில் இணைந்து கொண்டான். குவாடல்(Guadal Canal) கால்வாயில் அவன் கொல்லப்பட்டான்.

ரொம் இறந்து இரண்டு மாதங்களின் பின் அவர்களுடைய குழந்தை சாண்ட்ரா போலியோவினால் இறந்துபோனாள்.

மார்க் அவசர விடுமுறையில் வீடு திரும்பினான். ஆனால் அவன் வந்து சேர்ந்தபோது கிற்றி பிறமென்ற் எங்கோ மறைந்து போயிருந்தாள். அவன் ஐரோப்பாவிற்குத் திரும்பும் வரை அவளைத் தேடியும் பயன் கிட்டவில்லை. உலகத்திலிருந்தே அவள் காணாமல் போய்விட்டது போல் தோன்றியது. இது மிகவும் அசாதாரணமாக மார்க்குத் தோன்றியது. ஆனால் கிற்றியின் கண்களில் எப்போதும் அவன் காணும் சோகத்தின் சாயை, இப்போ நிறைவேறிய ஒரு தீர்க்க தரிசனம் போல் தோன்றியது.

யுத்தம் முடிந்ததும் திரும்ப வந்து அவளைத்தேட எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. 1945ல் அமெரிக்கன் சிண்டிகேற் அப்போது நூரம்பேர்க்கில் நடந்துகொண்டிருந்த போர்க் குற்றங்கள் விசாரணையைப்பற்றி செய்தி சேகரிக்க அவனை ஐரோப்பாவிற்கு திரும்ப அனுப்பியது. இந்த வேளையில் மார்க் கைதேர்ந்த தொழில் வல்லுனனாகவும், மதிப்பு மிக்க வெளிநாட்டு நிருபராகவும் முத்திரை பதித்திருந்தான். அங்கேயே தொடர்ந்து தங்கி, ஒரு உன்னதமான கட்டுரைத்தொடரை சில மாதங்கள் முன்னதாகவே உயர் நாஸிக்கள் தூக்கிலிடப்படும் வரை அளித்து வந்தான்.

அவனுக்கு மிகவும் தேவையாக இருந்த விடுமுறையை அமெரிக்கன் சிண்டிகேற் அளித்ததோடு அவனை உள்நாட்டுப்போர் மூழும் போலிருந்த பலஸ்தீனத்துக்கு இடமாற்றம் செய்தது. கிடைத்த லீவை மார்க் பாக்கர் பாணியில், அநுபவிக்கும் முகமாக, தனக்கு முன்பே அறிமுகமாயிருந்த ஏதென்ஸில் ஐ.நா.நிவாரணப்பணிகளுக்கு என அனுப்பப்பட்டிருந்த ஒரு பிரெஞ்சுப் பெண்ணோடு செலவழித்தான்.

வானத்திலிருந்து வந்ததுபோல் திடீரென அது நடந்தது. ஒருநாள் அமெரிக்க மதுச்சாலையில் சக நிருபர்களுடன் உட்கார்ந்து பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கும் போது அவர்கள் உரையாடல், சலோனிக்காவில் கிரேக்க அநாதைக் குழந்தைகட்கு மகத்தான சேவை செய்துகொண்டிருக்கும் ஒரு குறிப்பிட்ட அமெரிக்க தாதியைப் பற்றியதாக மாறியது. அங்கிருந்த நிருபர்களில் ஒருவர் அப்போதுதான் அவளது அநாதைகள் சரணாலயம் பற்றிய செய்திகளோடு வந்திருந்தார்.

அந்தத் தாதி கிற்றி பிறமென்ற்தான். மார்க் உடனடியாக விசாரித்ததில் அவள் சைப்பிரசில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருப்பதாக அறிந்துகொண்டான்.

**தொடரும்...**

www.tamilarangam.net




இலண்டன் மாநகரில்
போசாக்கு புனர்வாழ்வு நிலைய நிதிக்காக
தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும்



வருடாந்த
உதைபந்தாட்டப் போட்டி
1996



☆ இலண்டன் உட்பட பல வெளிநாட்டுத் தமிழ் விளையாட்டு குழுக்கள் இப்போட்டியில் பங்குபற்ற உள்ளன.

☆ அத்துடன் வலைப்பந்தாட்டம், சிறுவர்களுக்கான உதைபந்தாட்டம் மற்றும் பல சிறுவர் நிகழ்ச்சிகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

காலம்: 6 - 05 - 1996 திங்கள் (வங்கி விடுமுறை)
இடம்: DOUGLES EYRE SPORTS CENTRE
COPPER MILL LANE
WALTHAMSTOW E17.

0181-520 5876, 0181-365-0892
0181-521-0206, 0181-365 0894

அனுமதி: £2

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



உலகத் தமிழர் இயக்கம் நடாத்தும்
கல்விப்பணியின்

ஆறாவது ஆண்டு விழா

அன்பார்ந்த யேர்மனிவாழ் தமிழ் மக்களே!

உலகத்தமிழர் இயக்கக் கல்விப்பணியானது புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ச் செல்வங்களின் எதிர்கால நலன்கருதி தமிழாலயங்கள் மூலம் தாய்மொழி, சமூகக்கல்வியுடன், கலை பண்பாடுகளை வளர்த்து ஆறாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகின்றது. அன்றையநாள் அனைத்துத் தமிழ் மக்களும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கேடு இல் விழுச்செல்வம் கல்வி; ஒருவற்கு*
*மாடு அல்ல மற்றை யவை.*

நிகழ்ச்சிகள்

- மெளன அஞ்சலி
- மங்கள விளக்கேற்றல்
- தமிழாலய கீதம்
- வரவேற்புரை
- மாணவர் உரை
- சிறப்புரை
- பரிசு வழங்கல்
- நடனங்கள்
- நாடகம்

காலம்: 11 - 05 - 1996
சனிக்கிழமை, பி.ப. 15.00 மணி
இடம்: Universitat alte PH
Henri - Dunant Str - 65
45131 ESSEN

Autobahn - 52
essen-Ruttenscheid Ausfahrt

உலகத்தமிழர் இயக்கம் e.V.
யேர்மனி.


# தாயகம் நோக்கிய ...

வசந்த காலமும், பூமழையும் போல் பொருத்தமாக இணைந்தனர்.

கிற்றி ஒரு அமைதியான, ஆழமான, சிந்தித்துச் செயலாற்றும் பெண்ணாகத் திகழ்ந்தாள். அவளது கண்ணில் எப்போதும் ஒரு துயரத்தின் சாயை இருந்தது. சூழ இருப்பவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துபவளாக அவள் இருந்தாலும், கண்ணில் தெரியும் துயரச் சாயையை மார்க் மட்டுமே கண்டு பிடித்திருக்கலாம். கடுமையான உழைப்பாளி, எப்பொழுதும் வெளிப்படையாகவே பொருத்தமான வார்த்தைகளில் நாகரீகமாகக் கதைத்துச் சிரிப்பாள். ஆயினும் அந்தத் துயரச் சாயை கண்ணிலேயே இருந்தது வேறு எவருக்குமே புலப்படாவிட்டாலும் மார்க்குக்கு அது தெரிந்துகொண்டேயிருந்தது.

அவனை விரும்பத் தூண்டுவது என்ன என்பது பற்றி மார்க் அடிக்கடி யோசிப்பான். கிட்டாத தூரத்தில் இருப்பது போன்ற அவளது தோற்றம்தான் அப்படி எண்ணத் தூண்டியிருக்கலாம். ஐஸ்போட்ட சம்பெயின் (Champaige) போன்ற தோற்றம் எந்த மனிதனையும் நிலைதடுமாற வைத்துவிடும். ஆயினும் கிற்றி எப்போதும் ரொம்மிலேயே காதலாய் இருந்ததால் ரொம்மில் பொறாமைப்படுவதைத் தவிர அவனால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

ரொம்மும் மார்க்கும் அரச சர்வகலாசாலை விடுதி அறைத் தோழர்கள். அந்த முதல் வருடத்தில் கிற்றியிடமிருந்து பிரிந்திருப்பதுபற்றி ரொம் மிகவும் வருந்திக் கொண்டிருந்தான். அந்த நாட்களில் அவனது புலம்பல்களை முடிவுறாமல்கேட்டு, அவனை ஆறுதல்படுத்திய நாட்களை மார்க் நினைத்துக் கொண்டான். கோடை காலத்தில் ஒரு நாள் கிற்றி தன் பெற்றோருடன் விஸ்கொன்சின் (Wisconsin) சென்று விட்டாள். ரொம்மும் மார்க்கும் இலவச வாகனப் பயணங்களுக்கூடாக (Hitch hike) ஒக்லகோமாவின் (Oklahoma) எண்ணெய் வயல்களில் தொழில் தேடிச் சென்றடைந்தனர்.

திரும்பவும் பாடசாலை திரும்பியபோது ரொம்மின், கிற்றிக்கான உணர்வுகள் தணிந்திருக்கக் காணப்பட்டன. ரொம்மும் கிற்றியும் பரிமாறிக்கொள்ளும் கடிதங்களுக்கிடையேயான காலம் நீண்டு நீண்டு சென்றது. ரொம்மோ வளாகத்தின் பெண்களோடு அடிக்கடி வெளியே சென்றுவரத் தொடங்கினான். அவன் கலாசாலை காதல் மன்னனாகவும், அவர்கள் அவனுக்காகவே வீட்டில் காத்துக் கொண்டிருக்கும் பெண்கள் போலவும் தோன்றத் தொடங்கினர்.

இறுதியாண்டுக்கு வரும்போது ரொம் கிட்டத்தட்ட கிற்றியை மறந்துவிட்டான். பியூ பிரம்மல் (Beau Brummell) போன்ற தோற்றம், வளாக கூடைப்பந்தாட்ட முன்னணி வீரனான அவனுக்குப் பொருத்தமாகவே இருந்தது. மார்க்கோ இவனது புகழில் குளிர்காய்ந்து கொண்டு, கலாசாலை வரலாற்றிலேயே மிக மோசமான பத்திரிகைத்துறை மாணவனாகப் பெயர்பெற்றுக் கொண்டிருந்தான்.

கிற்றி புதுமுக மாணவியாக அங்கேயே வந்து சேர்ந்தாள். மின்னல் பூப்பூத்தது. மார்க் ஆயிரம் தரம் கிற்றியைக் கண்டாலும், ஒவ்வொரு முறையும் அப்போது தான் காண்பது போன்ற கிளர்ச்சியடைவான். ரொம்மும் இம்முறை அப்படித்தான் உணர்ந்தான். ரொம்முடைய பட்டமளிப்பு விழாவிற்கு ஒரு மாதத்திற்கு முன் அவர்கள் இருவரும் தனிவாழ்வு தேடி ஓடிப் போனார்கள். ரொம் கிற்றியோடும், மார்க் எல்லீனோடும் ஒரு ஏ மொடல் வோர்ட் காரில், கையில் நான்கு டொலர் பத்து சதத்துடனும் எல்லையைக் கடந்து, ஒரு சமாதான நீதிவானைக் கண்டுபிடித்து மணந்து கொண்டார்கள். அவர்களுடைய முதலிரவு கடும் மழையில், அரிதட்டைப்பிடித்தால் எப்படி ஒழுகுமோ, அப்படி ஒழுகும் வோர்ட் காரின் பின்னிருக்கையில் தொடங்கியது. ஒரு அமெரிக்க ஜோடி வாழ்க்கையை இப்படியாக மங்களகரமாகத் தொடங்கியது.

ரொம்மும் கிற்றியும் தங்கள் திருமண விடயத்தை அவனது பட்டமளிப்புக்குப் பின்னும் ஒருவருடம் அதை இரகசியமாகவே வைத்திருந்தனர். கிற்றி தனது தாதிப் படிப்பை முடிக்கும்வரை அங்கேயே தங்கிப் படித்தாள். நோயாளிகளைப் பராமரித்தலுக்கும், கிற்றிக்கும் நன்றாகவே ஒத்துப்போவதாக மார்க் எப்போதும் நினைத்துக்கொள்வான்.

ரொம் கிற்றியை வழிபடாத குறைதான். அவன் சிறிது அவசர புத்திக் காரனாகவும், தன்னிச்சையான போக்குடையவனாக இருந்தாலும் விரைவாகவே அர்ப்பணிப்புள்ள கணவனாகவே உருவெடுத்தான். பொதுமக்கள் தொடர்புத்துறையிலிருந்த ஒரு மிகப் பெரிய ஸ்தாபனத்தில் மிகச் சிறிய நிர்வாகியாகத் தனது தொழில் வாழ்வைத் தொடங்கினான். அவர்கள் சிக்காக்கோவிற்கு இடம் பெயர்ந்தார்கள். கிற்றி சிறுவர் வைத்திய சாலைகளில் தாதிப் பணிபுரியத் தொடங்கினாள். அவர்கள் வழக்கமான அமெரிக்கப் பாணியிலேயே அங்குலம் அங்குலமாக வாழ்க்கையில் முன்னேறினார்கள். முதலில் வாடகை வீட்டுத் தொகுதியொன்று. பின் சிறிய சொந்தமான இல்லம்... ஒரு புதிய கார். மாதாந்த பில்கள், பெரிய நம்பிக்கைகள் என்று வாழ்ந்துவரும் வேளையில் கிற்றி சாண்ட்ராவைக் கருவுற்றாள். (மார்க்கின் சிந்தனை தடைப்பட்டது.)

தெற்கு வடக்கு மலைத்தொடர் நடுவே அமைந்த பழுப்பு நிறத் தட்டை வெளியின்மீது அமைந்திருந்த தலை நகரமான நிக்கோசியாவின் வெளிவட்டாரங்களினூடே செல்ல, ரக்சி வேகம் குறைந்து கொண்டிருந்தது.

"டிரைவர் ஆங்கிலம் பேசுவீரா"? மார்க் கேட்டான். 'ஆம் ஐயா', கேள்விக் குறியோடு பதில் வந்தது.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...


விடுதலைப் புலிகளின் தொலைபேசிச் செய்திச் சேவை

நோர்வே
OSLO - 22381010
(மூன்று இணைப்புக்கள்)
BERGEN - 55318796
TRONDHEIM - 72591191
STAVANGER - 51547913
MOLDE - 71290402
VARDO - 78987391
SOGN OG FJORDANE - 57749364


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வரலாறு தன் பயணம் தொடரும்

குடிசை பிழிந்த
குருதிச் சாற்றில்
சாந்து குழைத்து
கோட்டைகள் உயரும்.

மனிதன் வடிக்கும்
வியர்வைகள் இங்கே
வேர்விட்டு வேலி சமைக்கும்.

மண்ணும் கல்லும் மதிலாகும்,
இரும்பு
வாள், வேலாகும்

அறிவியல் வளர்ந்து
ஆக்கிய ஆயுதம்
துவக்கு, பீரங்கி
அணுகுண்டு வரையிலும்
அணிவகுத்து நிற்கும்.

அடக்கியொடுக்கி ஆதிக்கம்
செய்பவர்
தங்களைக் காக்க
மக்களை மாய்ப்பினும்

வரலாறு இயற்றும் கைகள்
கூடி நின்று கோட்டையை
இடிக்க
முட்டியை நிமிர்த்தி விடுதலை
வானில்
சூரியக் கனியைப் பறிக்கும்.

மானுடக் கூட்டத்தின்
மண்டைக் குழியில்
கேள்விக் குறியும்,

வயிற்றுப் பரப்பில்
பசியின் நெருப்பும்,

நரம்புத் திசுவில்
மானச் சூடும்,

உடம்புத் தசையில்
உணர்வுப் பிழம்பும்,
நிமிர்ந்த எலும்பில்
இரும்பின் உருக்கும்,

விடுகின்ற மூச்சில்
வெக்கையின் தகிப்பும்,

விழிக்கின்ற கண்ணில்
எரித்திடும் சினமும்
எழுகின்றபோது –
மதில்கள்
மண் தூசாகிப் போகும்,

பீரங்கிகள்
பிணமாய்த் துவண்டு விழும்

கோட்டைகள்
குப்புறக் கிடக்கும்.

வரலாறு
தன் பயணம் தொடரும்.

கவிஞர் - இரும்பொறை



T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9463

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-348 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 8441 F: 560 8224

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்